கல்கி

KALKI 16-11-80

90 காசு



சென்னையில் உள்ள சவாகத், மாரீஸ், ஸ்ரீலேகா, காஞ்சி போன்ற அடுக்கு மாடி ஹோட்டல்களையும் அண்ணா சாலையில் உள்ள ஜெமினி அடுக்கு மாடி குடியிருப்புக்களையும் உருவாக்கியவர் பிரபல கட்டிடக் கலை நிபுணர் அச்சுத் ஆர். கண்டூர்.

கேள்வி : அடுக்குமாடிக் கட்டிடங்கள் அமைப்பதற்கு முன் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய அம்சம் என்ன?


பதில்: மண் வளம்தான். அதைக் கணித்த பிறகுதான் அஸ்திவாரம் எவ்வளவு போட வேண்டும் என்பதை நிர்ணயிப்போம். நான் உருவாக்கி வரும் நுங்கம்பாக்கம் நெடுஞ் சாலையில் உள்ள ஜவாஹர் பிளாஸா, அனுக்ரஹா குடியிருப்பு அடுக்கு மாடி மாளிகைக்கு பதினேழு மீட்டர் வரை அஸ்திவாரம் போட்டுள்ளோம். தளர்ந்த மண்ணாயிருந்தால் குறைவான அடுக்குகள் தான் கட்ட முடியும்.

சென்னை பெருநகர் வளர்ச்சி வாரியம் அடுக்கு குடியிருப்புக்களை எங்கெல்லாம் கட்டலாம் என்று குறிப்பிட்டிருக்கிறது. ராதா கிருஷ்ணன் சாலை, கதீட்ரல் சாலை, அண்ணா சாலை, பூந்தமல்லி நெடுஞ்சாலை, நுங்கம் பாக்கம் நெடுஞ்சாலை போன்ற பகுதிகளே ஒதுக்கப்பட்டுள்ளன.

இக்கட்டிடங்கள் தீப்பிடிப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறைவு என்றும் தவறித் தீப் பிடித்தாலும் அணைப்பதற்கு ஏற்பாடுகள் உள்ளன என்றும் தீயணைப்புப் படையினர் சான்றிதழ் வழங்கினால் தான் கட்ட முடியும்.

கேள்வி : பல அடுக்குக் கட்டிடத்தில் என்ன லாபம்?

பதில்: மேலே குறிப்பிட்ட சாலைகளில் நிலத்தின் விலை ரொம்பவும் அதிகம். எனவே ஓரிரு மாடிகள் கட்டுவதை விட அடுக்கு மாடிக் கட்டிடமே சிக்கனம், முதலீட்டுக்கு ஏற்ற லாபத்தையும் காண முடியும்.



உயரே உயரே செல்லும் குடியிருப்புக்கள்

கேள்வி : இவற்றை உருவாக்கும் போது என்ன பிரச்னைகளை எதிர் கொள்கிறீர்கள்?

பதில்: சிமெண்டும் ஸ்டீலும் தான் பெரிய பிரச்னை. இவை அரசு கண்ட்ரோலில் இருப்பதால், நேரத்துக்குக் கிடைப்பதில்லை. மேலும் செங்கல்லும் ஜல்லியும் நேரத்துக்குக் கிடைக்கவேண்டும்.

கேள்வி : இக்கட்டிடங்கள் புயல், இடியால் பாதிக்கப்படாதா?

பதில்: பூகம்பம், இடி போன்ற இயற்கை இன்னல்களிடமிருந்து பாதுகாப்புப்





✖ பிரமிட்ஸ்

✖ ஜெமினி குடியிருப்புகள்

✖ திரு அச்சுத் ஆர். கண்டூர்

பெறப்போதுமான கவனம் எடுத்துக்கொள்ளப் படுகிறது.

கேள்வி : இங்கு வசிப்பவர்களுக்குத் தோட்டம் போடுவது, ஷாப்பிங், போவது எளிதில் முடியுமா?

பதில்: லிஃப்ட் இருக்கிறது. மின் தட்டுப்பாடு காரணமாக அது இயங்காது போய் விட்டால் கஷ்டம் என்பதால் இங்கு தானியங்கி ஜெனரேட்டர் உண்டு. அதனால் ஷாப்பிங் போய் வருவதெல்லாம் சிரமமில்லை. தோட்டம் போடுவது சாத்தியமில்லைதான். தோட்டத்துக்கு ஆசைப்படுகிறவர்கள் இங்கு குடியிருக்க முடியாது.

ஒரு ருசியான விஷயம். வடக்கு இந்தியர்கள் மேல் மாடிப் பகுதிகளிலும், தென் இந்தியர்கள் கீழ் மாடிகளிலும் வசிக்க விரும்புகிறார்கள். வடக்கு இந்தியர் ஃப்ளாட்டுகளுக்குப் பழக்கப்பட்டவர்கள் என்பது காரணமாய் இருக்கலாம். மேலும் லிஃப்டும், அதிக உயரமும் பலருக்கு அலர்ஜியைத் தருகிறது.

கேள்வி : இங்கு வாழ்வதால் ஏற்படும் நன்மைகள்?

பதில்: பிச்சைக்காரர்கள் தொந்தரவு கிடையாது. ஜாதி மத வேறுபாடு கிடையாது. ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து உதவும் பழக்கம் வளர்கிறது. ஒருவர் வெளியூர் சென்றாலும் பக்கத்துக் குடித்தனக்காரர் பார்த்துக் கொள்கிறார்.

கேள்வி : நிலம் யாருக்குச் சொந்தம்?

பதில்: இங்கு இருப்பவர் எல்லோரும் சொந்தக்காரர்கள்தான். ஒவ்வொருவருக்கும் சம அளவு பங்கு உண்டு.

கேள்வி : குடியிருப்பவர்கள் சங்கம் அமைக்கிறார்களாமே?

பதில்: ஆம். இதில் நன்மைகள் பல உண்டு. உதாரணமாக ஒரு வரவேற்பாளரை அமர்த்தலாம். யாராவது பார்க்க வரும்போது வரவேற்பாளர் இன்டர்காம் உதவியுடன் குடியிருப்பவருடன் பேசலாம். அனுமதி பெற்று அவரை உள்ளே அனுப்பலாம். இது ஒழுங்குமுறை வளர்க்கிறது. திருட்டைத் தடுக்கிறது.

கேள்வி : நீங்கள் உருவாக்கும் வேறு குடியிருப்பு அடுக்கு மாளிகைகள் என்ன?

பதில்: மெரினா சாண்ட்ஸ், டுப்ளே அபார்ட்மெண்ட் பிரமிட்ஸ். கடைசியாகக் குறிப்பிட்டது நுங்கம்பாக்கம் நெடுஞ்சாலையில் உருவாகும் வியாபாரக் கேந்திரம். இது எகிப்திய பிரமிட் வடிவில் இருக்கும்.

பேட்டி: சிக்கி

கராத்தே பயிற்சி

பயிற்சி : டோனி பொன்னையா 14

சித்திரம் : ராஜ்.. தயாரிப்பு : குன்றுமணி



படம் : உத்ரா

கத்தி முறை தடுத்தல்
BACK STANCE & KNIFE HAND BLOCK





BACK STANCEல் மிக முக்கியமாகச் செய்ய வேண்டியது இது தான்: உடலின் பின் காலில் 80 சதவிகித கனத்தையும் முன் காலில் 20 சதவிகித கனத்தையும் வைத்துக் கொள்ள வேண்டும். உடலின் மேல் பகுதியை 45° சாய்வாக வைத்துக் கொள்ள வேண்டும். சரியான முறை படத்தில் காண்க.

கராத்தேயில் கத்தி முறை வெட்டுதல், கத்தி முறை தடுத்தல், ஈட்டி முறை குத்துதல் – இம்மூன்று முறைகளில் கத்தி முறை தடுத்தல் ஒரு சிறப்பான அம்சம். எதிரியிடமிருந்து எம்முறையான தாக்குதல் வந்தாலும் அவைகளைக் கத்தி முறையில் வெட்டித் தடுத்தலால் எதிரியின் நரம்புப் பாகங்களை வலுவிழக்கச் செய்யலாம்.

இம்முறை செய்யும் பொழுது நாலு விரல்களையும் ஒன்றுசேர்த்துக் கைகளை மிக உறுதியாக வைத்தல் மிக அவசியம். இந்நேரத்தில் கைகளைக் கத்தியாகவே தயார் படுத்த வேண்டும். சரியான முறைகளில் தடுக்கும் விதத்தினைப் படத்தில் பாருங்கள்.

WHY Shriram CHITS


are safe, more profitable, most attractive!

**Instant lump sums?
Handsome earnings?
Shriram Chits meet your
needs handsomely.**

Here's how :

● Wide variety of Chit Groups: see the table below and choose yours ● Lump sum amounts when you need them most ● Dividends up to 24% ● No ceiling on bidding ● Caution Deposit system prevents uneconomical biddings ● Prompt payments, personalised service ● Full security of capital—only sound

And proven integrity! Check with existing members. Come over any day and ask our members about their faith & experience.




Groups :

Rs.	125 x Months 40 – Rs.	5,000
Rs.	250 x Months 40 – Rs.	10,000
Rs.	400 x Months 25 – Rs.	10,000
Rs.	625 x Months 40 – Rs.	25,000
Rs.	1,250 x Months 40 – Rs.	50,000
Rs.	2,500 x Months 40 – Rs.	1,00,000

Write for detailed information & Free Brochures etc.

Shriram
Chits & Investments Private Limited
123, Angappa Naicken St.,
Madras 600 001.
Phones: 37890, 28545

ADWAVE SCI 1490



● ரஜனி காந்திடம் இப்பொழுது புதிதாக ஒரு பொடியன் டச்சப் உதவியாளனாக இருக்கிறான். முரட்டுக் காளை படப் பிடிப்பு பொள்ளாச்சியில் நடைபெற்றது. அங்கு தொழிலதிபர் நா. மகாலிங்கம் விருந்தினர் மாளிகையில் படப் பிடிப்புக் குழுவினர் தங்கியிருந்தனர். ரஜனி காந்த் தங்கியிருந்த அறைக்கு இந்தப் பொடியன்தான் கூப்பிட்ட குரலுக்கு ஓடி - வருவான். ரஜனி காந்த் தூங்கின பிறகுதான் இவன் தூங்குவானாம். படப் பிடிப்பு முடிந்து கிளம்பும்போது சிறுவனைப் பார்த்து ரஜனி ''வரியா?'' என்றார். வண்டியில் ஏறிவிட்டான்! அரைக் கைச்சட்டையும் அரை டிராயருமாக இருந்த அவன் இன்று முழு பேண்டும் முகம் தெரியு மளவுக்குப் பளபளப்பான வாட்சும் கட்டியிருக்கிறான். நாளை இவனே தயாரிப்பாளனாக மாறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை!

● ● ●

● வடிவுக்கரசியிடம் நான் சொல்லும் கேள்வியைக் கேட்டால் உங்களுக்கும் அவருக்கும் ஜன்மப் பகை ஏற்பட்டு விடும்! காதலைப் பற்றிய கேள்வி என்கிறீர்களா இல்லை. பின் கடந்த வாழ்க்கையைப் பற்றிய கேள்வியா? ஊஹூம்.... எதைக் கேட்டாலும் சுமுகமாகப் பதில் வரும். ஆனால் ஒரு படத்தின் தலைப்பைப் பற்றிக் குறிப்பிட்டுப் பேசினால் அவ்வளவுதான். கோபம் மட்டுமல்ல அவருக்கு வருத்தமும் கூட ஏற்படுகிறது. ஏன் ஸார் நான் சற்று மகிழ்ச்சியாக இருப்பதையும் கெடுக்கிறீர்களே! என்று அங்கலாய்ப்பார். இவர் கோபமடைந்து, வருத்தப்பட்டுக் கொள்வதையும் பார்த்தால், அவை யாகம் செய்தாலும் தீராது போலிருக்கிறது!

● ● ●

● சங்கீதா பம்பாய் சென்று வந்த பின் அடையாளமே தெரியாத அளவுக்குமெலிந்து விட்டார். ஹிந்திப் படம் என்று வந்து விட்டாலே மெலிந்துதான் தீர வேண்டுமென்ற நிர்ப்பந்தம். 'ஹிந்திப் பட உலகில் எல்லாமே

சினி மினி

சரியாக நடக்கிறது சார்' என்று கூறும் சங்கீதா தற்பொழுது பரத நாட்டியம் கற்று வருகிறார். கூடிய சீக்கிரமே அரங்கேற்றவிருக்கிறாராம். இவருக்குக் குச்சுபுடி நடனம் முன்பே தெரியும்!



● ● ●

● தீபாவளி கொண்டாடி முடித்திருப்பீர்கள். தீபாவளி ரிலீஸ் படமும் பார்த்திருப்பீர்கள். ஆனால் மூன்று தீபாவளி தினத்தைத் தொடர்ச்சியாகக் கண்ட படம் எது என்று உங்களுக்குத் தெரியுமா? விடை: 110 வாரங்கள் (16–10–1944 முதல் 22–11–1946 வரை) ஓடிய 'ஹரி தாஸ்'.

● ● ●

● சினிமாத் துறையில் ஈடுபட்டு அதே நேரத்தில் கதைகளும் எழுதுவோர் வரிசையில் லேட்டஸ்ட்: நடிகை சுமித்ரா. ''நான் மலையாளத்தில் எழுதி இதுவரை வெளி வராத கதை ஒன்றை அப்படியே மொழி மாற்றம் செய்து தமிழில் தரப்போகிறேன்'' என்கிறார். அதென்ன, மலையாளத்தில் விலைபோகாத சரக்கு தமிழில் வரவேற்புப் பெறும் என்று அர்த்தமா? என்கிறார் கோபக்கார எழுத்தாளர் ஒருவர்!

—'சலன்'

ஸ்ரீசைலம்

திருமுருக கிருபானந்தவாரியார்



ஸ்ரீசைலம் என்பது சிறந்த சிவத் தலம். பன்னிரு ஜோதிர் லிங்கங்களுள் ஒன்றாகிய மல்லிகார்ஜுனப் பெருமான், பிரமராம்பிகையுடன் கருணை வடிவாக எழுந்தருளியுள்ளார். எனது பிதாவுடைய பேரும் அதுதான். அவருக்கு அன்பான தலம். எனது தீக்ஷா குரு பழனி சிவாசாரிய சுவாமிகளின் ஆத்ம லிங்கமும் அதுதான்.

ஸ்ரீசைலம் என்கிற திருத்தலம் திருப்பருப்பதம் என்று பேசப்படும். முருகப் பெருமான் தேவர் சிறை தீர்க்கும் பொருட்டு தென் திசை நோக்கி வந்தருளியபோது ஸ்ரீசைல நாதரை வழிபட்டார் எனக் கந்தபுராணம் கழறுகின்றது.

அர்ச்சுனப் பெருமான் தீர்த்த யாத்திரையில் வழிபட்டார்என மகாபாரதம் கூறுகிறது.

திருஞான சம்பந்தர், அப்பர் பெருமான், சுந்தரமூர்த்தி நாயனர், என்ற மூன்று குருமூர்த்திகளும் பாடியுள்ளார்கள். அருணகிரி நாதர் வழிபட்டுத் திருப்புகழ் பாடியருளிய அருமை பெருமையுடைய திருத்தலம்.

''காஸ்யாந்து மரணான் முக்தி:
ஸ்மரணாத்து அருணாசலே
தர்சநாத் தேவ ஸ்ரீசைலே
புனர்ஜன்ம நவித்யதே''

என்ற பெருமையுடையது இத்தலம்.

சிலாதனர்

சிலாதனர் என்ற முனி குமாரர் இளமையில் ஒரு முனிவர் உணவு உண்ணும் போது உளுந்து அளவுள்ள கல்லை விளையாட்டாக உணவில் இட்டனர். முனிவர் அக் கல்லை உணவுடன் உண்டுவிட்டார். சிலாதனர் பெருந் தவமுனிவராக விளங்கி அட்டமா சித்திகளும் பெற்றார்.


அவர் விண் வழியாகப் பல உலகங்களைப் பார்த்து வரும்போது அறக் கடவுள் அவரை வரவேற்று உபசரித்தார்.


அங்கே ஒரு கற் குன்றைக் கண்டனர் சிலாதனர். ''இது என்ன குன்று! இங்கே ஏன் இருக்கிறது?'' என்று வினவினார். அறக் கடவுள், ''முனிவரே! நீர் இளமையில் ஒரு முனிவர் உணவு உண்ணும்போது உளுந்தளவு கல்லை உணவில் இட்டீர். அக் கல் இங்கு குன்றாக வளர்ந்துள்ளது. இதனை நீர் உண்டு கரைக்க வேண்டும்'' என்று கூறினார். புண்ணியமும், பாவமும் ஒன்றுக்கு ஆயிரம் பதினாயிரமாக வளரும் என்பதை அறிந்த முனிவர் நடுநடுங்கினார்.

அந்தக் குன்றை அளந்து கொண்டு, தாம் முன் தவம் செய்த ஸ்ரீசைல மலைக்கு வந்தார். அந்த அளவுள்ள குன்றை அங்கு தேர்ந்தெடுத்தார். அதனை உடைத்துச் சிறு சிறு துண்டுகளாகச் செய்தார். அவற்றைத் தினந்தோறும் அரைத்துக் கரைத்துக் குடித்துக் கொண்டு மாதவஞ் செய்தார். சிலையை ஆகாரமாகக் கொண்ட காரணத்தால் அவர் சிலாதனர் என்று பேர் பெற்றார். குன்று முழுவதும் உண்டு முடித்தவுடன் இயமலோகத்தில் இருந்த குன்று மறைந்தது.

இத்தகைய சிலாதன மாமுனிவர் சிவபெருமானை வேண்டி ஒரு சற்புத்திரன் வேண்டும் என்று புத்திர காமேஷ்டி செய்தார். அந்த வேள்வியில் திருநந்தித் தேவர் தோன்றினார். நந்தியம் பெருமான் அவதரித்த மலை ஸ்ரீசைலம். 50, 60 மைல் சுற்றளவு ஒரே மலை மயமாக வனமாகக் காட்சியளிக்கின்ற அற்புதமான இடம் ஸ்ரீசைலம்.

எமது பிதா அவர்கள் 40 மைல் நடந்து இத்தலம் சென்று தரிசித்தார்கள். கோயில் முழுவதும் தங்கத் தகடு போர்த்தியிருக்கவும், கைக்கு எட்டிய அளவு தங்கத் தகடு எடுக்கப்பட்டிருக்கவும் கண்டதாகக் கூறினார்கள். எமது தாயார் சென்று வழிபட்டபோது பாதி அளவுதான் தங்கத் தகடு கண்டதாகக் கூறினார்கள். பல ஆண்டுகளுக்கு முன் அடியேன் சென்று வழிபட்டபோது தங்கத் தகடு இருந்த சுவடு கூடக் காணப்படவில்லை. கோயிலுக்குள்தான் யாத்திரிகர்கள் தங்க வேண்டும். எங்களுக்கு அப்போது இரு பர்ணசாலை அமைத்துக் கொடுத்தார்கள். நான் அப்போது 10 மைல் நடந்து சென்று வழிபட்டேன்.





இப்போது 21 லட்சம் ரூபாயில் கோவில் வரை கார் போகுமாறு தார் இட்ட பாதை அமைத்து இருக்கிறார்கள். பலப் பல வீடு திகள் இப்போது புதுக்கி யிருக்கிறார்கள்.

மலையிலிருந்து 2 மைல் கீழே இறங்கினால் பாதாள கங்கை ஓடுகிறது. அங்கே கிருஷ்ணா நதியுடன் பாதாள கங்கை சங்கமம் ஆகின்றது. அத் தீர்த்தத்தில் முழுகி, அந்நீரைக் கொணர்ந்து சுவாமிக்கு நாமே அபிஷேகம் புரியும்போது நமக்கு மிகுந்த உணர்ச்சியும் பக்திப் பரவசமும் ஏற்படுகின்றன. கோயில் வரை பஸ், கார் போகின்றன. யாத்திரை எளிதாக அமைந்துள்ளது.

''ஸ்ரீசைலம் சிகரம் த்ருஷ்ட்வா
புனர் ஜன்ம நவித்யதே''

என்பது ஆகம வசனம். ஸ்ரீசைலத்தின் சிகரத்தைத்தரிசித்தவர்கட்கு மறு பிறப்பு இல்லை என்பது இதன் பொருள்.

கோயிலுக்கு ஐந்து மைலில் சிகரம் உளது. ஆங்கிருந்து கோயிலைக் காண்கிறபோது புளகாங்கிதம் உண்டாகின்றது. ஆனந்த பரவசம் ஏற்படுகின்றது. கோயில் அடைய இரு மைல்களுக்கு முன் ஒரு விநாயகர் கோயில் உளது.

சாட்சி விநாயகர்

அங்குள்ள விநாயகர் சாட்சிக் கணபதி. இவர் சப்பணம் இட்டு அமர்ந்து காட்சி தருகிறார். கையில் ஒரு பெரிய ஏடும் எழுத்தாணியும் தாங்கி, ஓம் நமசிவாய என்று எழுதி வைத்திருக்கிறார். வழிபடச் செல்லுகின்ற அடியவர்களின் பெயர்களை எழுதிக் கொள்வாராம். இவரைத் தரிசிக்கின்ற போது உள்ளத்தில் அன்பு வெள்ளம் பொங்கி எழுகின்றது.

இவரை வழிபட்டு ஸ்ரீசைலம் கோயிலை அடைய வேண்டும்.

ஸ்ரீ சைலம் திருக்கோயிலை சந்திரகுப்த மன்னனும் மற்றும் பல மன்னர்களும் பழங் காலத்தில் திருப்பணி செய்தார்கள்.

வீர சிவாஜி வடக்குக் கோபுரத்தைப் புதுக்கியுள்ளான். அம்பிகை வீர சிவாஜிக்கு வாள் வழங்கியதாகவும் கூறுகின்றனர்.

வெளி மதில்களில் அழகிய சிற்பங்கள் கண்கொள்ளாக் காட்சி தருகின்றன.

நந்தி தேவரே மலை வடிவாகி இறைவனைத் தாங்குகின்றார்.

ஆத்மகூருக்கு அருகில் மஹா நந்தி என்ற திருத் தலம் தரிசிக்க வேண்டியது. நந்தி வாயில் தீர்த்தம் விழுகின்றது. பன்னீர் போன்ற தெளிந்த தீர்த்தம்.

பாதாள கங்கையில் முழுகினால் சகல பாவங்களும் ரோகங்களும் நீங்கும்.

அர்ச்சுனம் என்றால் மருத மரம். மருத மரத்தின் கீழே சுவாமி இருந்த காரணத்தாலும், அம்பிகை மல்லிகைக் கொடியாக அத்தருவில் படர்ந்த படியாலும் மல்லிகார்ச்சுனம் என்று பேர் ஏற்பட்டது.

எல்லாம் சிவனென்ன நின்றாய் போற்றி!

''உங்க வீட்டில் குடியிருக்க எனக்கு நீங்கள் இடம் தராவிட்டால் போகுது. உங்க பெண்ணின் இதயத்திலாவது குடியிருக்க இடம் தரச் சொல்லுங்க! அது போதும் மாமா!''







இளவல் வருகிறார்!

[பிரிட்டிஷ் பட்டத்து வாரிசு சார்லஸ் இந்தியாவுக்கு நவம்பர் **24**-ந்தேதி வருகிறார். சென்னைக்கு டிசம்பர் 2-ம் தேதியன்று விஜயம் செய்கிறார்.]

● வேல்ஸ் இளவரசனாக முடிசூட்டப்பட்டபோது சார்லஸ் அணிந்து கொண்ட விருதுமாலை 5000 பவுன் செலவில் தயாரிக்கப்பட்டது. 18 காரட் தங்கத்தில் வைரக்கற்கள் பதிக்கப்பட்ட மாலை.

மாணவப் பருவத்தில் சார்லஸ் ஷேக்ஸ்பியரின் மாக்பெத்தில் நடித்தார். கதாபாத்திரத்தை உணர்ந்து நடித்து நல்ல பெயர் தட்டிக் கொண்டார்.

● இளவரசர் சார்லஸ் ராணியின் மூத்த புதல்வனாகப் பிறக்காமல் இருந்திருந்தால் கடல் வாழ்க்கையையே விரும்பி ஏற்றிருப்பார். சார்லஸுக்குச் சிறு வயதிலிருந்தே தன் தந்தையின் போர்க் காலக் கடல் பயண வாழ்க்கையைக் கேட்டறிவதில் ஆர்வம் அதிகம். பல துறைமுகப்பட்டினங்களுக்கு வால்டர் ராலே போலச் சென்று வர வேண்டும் என்ற ஆசை அவருக்கு! கப்பல் செலுத்தும் கலைகளில் தேர்ந்து விட வேண்டும் என்ற விருப்பம். அரச பதவிக்கு வாரிசாக நிற்பவர் கடல்வாழ்க்கைக்குத் தம்மை எப்படி அர்ப்பணித்துக் கொள்ள முடியும்?

● இளவரசர் சார்லஸ் அரண்மனையிலேயே பயிலாமல் காலமாறுபாட்டுக்கு ஏற்பப் பள்ளி சென்று படிக்க அனுமதிக்கப்பட்டார். ஆனாலும் மற்ற பிள்ளைகளைப் போல் சுதந்திரமாகத் திரிய முடியவில்லையே என்ற ஆதங்கம் அவருக்கு உண்டு. பட்டத்து இளவரசனைச் சதா ஒரு பாதுகாவலர் பின் தொடர்ந்து கொண்டே யிருப்பார்!


● பள்ளியில் சார்லஸ் எழுதின கட்டுரைகள் அடங்கிய நோட்டுப் புத்தகங்கள் அவரை அறியாமலேயே அவர் அறையிலிருந்து மறைந்து விட்டன. அவற்றில் சில கட்டுரைகள் ஜெர்மானியப் பத்திரிகையில் "The Confessions of Prince Charles" என்ற தலைப்புடன் வெளிவரத் தொடங்கி விட்டன. ஒரு கட்டுரையில் இளவரசர் சார்லஸின் ஆசிரியர் "வெகு நன்றாகப் பிரச்னை விவாதிக்கப்பட்டுள்ளது" என்று பாராட்டிக் குறிப்பு எழுதியிருந்தார்!

● இளவரசர் சார்லஸுக்குப் புகை பிடிக்கும் வழக்கமில்லை. விமானம் ஓட்டிப் பழக்கம் உண்டு.


● கல்லூரிப் படிப்பு கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையில். 'போலோ' ஆட்டத்தில் வல்லமை உண்டு. படகோட்டுவதிலும் திறமைசாலி.

● சார்லஸின் காதல் விவகாரங்கள் பற்றிச் செய்தி வெளியிடுவதென்றால் பிரிட்டிஷ் பத்திரிகைகளுக்கு ஏகக் குஷி. யாராவது ஒரு பெண்ணைச் சந்தித்து அவர் பத்து நிமிஷம் பேசிவிட்டால் போச்சு. உடனே பத்தி பத்தியாக இது காதலா? திருமணத்தில் முடியும் சாத்தியக்கூறுகள் உண்டா என்றெல்லாம் ஆராய்ச்சி செய்து எழுத ஆரம்பித்து விடுவார்கள். இப்படிப் பல சந்தர்ப்பங்களில் பல பெண்களின் பெயர்கள் அடிபட்ட போதிலும் சார்லஸ் திருமணம் பற்றி இன்னும் அதிகாரபூர்வமான அறிக்கை ஏதும் வரவில்லை.

-பி. எஸ். எம்.



இ·காங்கிரஸ் அல்லாத மாநில அரசுகளைக் கலைக்க மாட்டேன்.
இந்திரா காந்தி
இ·காங்கிரஸ் அல்லாத மாநில அரசுகள்



நம்ம இஷ்டத்துக்கு வண்டி ஓடாது போலிருக்கே!
ரெயில்வே இலாகா
முக்கட்டை புடிச்சு சீக்கிரம் வந்து ஏறு, சார்!
பஸ் கட்டண உயர்விலும் எதிர்பார்த்த வருமானம்
பல்லவன் நிர்வாகச் செலவு

வி. ஐ. பி. விமானங்கள்

பாரத ஜனநாயகத்தின் பெருமை வானளாவ உயர்கிறது!

ஒன்றுக்கு இரண்டாக வி. ஐ. பி. விமானங்கள் வாங்கப்படவிருக்கின்றன! கோடானுகோடி ஏழைகளின் அன்புக்கும் மதிப்புக்கும் பாத்திரமான பெரும் தலைவர்கள், ஜனநாயக காவலர்கள், ஏழைமையை ஒழிக்கப் போகிறவர்கள் பயன்படுத்த, இருக்கிற விமானங்களும் ஹெலிகாப்டர்களும் போதவில்லையே என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தோம். கவலை தீர்ந்து விட்டது; களிப்பெய்துகிறோம்!

பிரதமர், குடியரசுத் தலைவர் போன்ற பெரும்புள்ளிகள் பறப்பதற்குப் புத்தம் புதிய போயிங் வி. ஐ. பி. விமானங்கள் வந்தவுடனேயே அவர்களுடைய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ததாகி விடும்! பிறகென்ன, அவர்கள் இது போன்ற சின்ன கவலைகள் ஏதுமின்றி நிம்மதியாகச் செயலாற்றலாம்! நமது தேசத்தின் பொருளாதாரத்தையும் தொழில் வளத்தையும், 'சோஷலிஸ — ஜனநாயக — நாடாளுமன்ற — ஜனாதிபதி—மதச்சார்பற்ற' முறையில் ஓஹோ ஹோ என்று உயர்த்தி விட வி. ஐ. பி. விமானத்தில் பறந்தபடியே திட்டமிடலாம்; அறிக்கை விடலாம்!

புதிய வி. ஐ. பி. விமானங்கள் மேக மண்டலத்துக்கும் மேலே எவ்வளவு உயரத்தில் பறந்தாலும் சரி, விலைவாசிகள் மட்டும் விடு விடுவென்று சரிந்து தரைக்கே இறங்கி விடும்!

வாங்கப்பட்டுள்ள விமானங்களின் விலை அதிகமில்லை; 15 கோடிதான்! இதே போல் மக்கள் எல்லாரும் சிக்கனத்தைக் கடைப்பிடித்து, ஆடம்பரத்தைத் தவிர்த்து, அனாவசிய செலவினங்களைக் குறைத்து, தேவையற்ற பொருள்களை வாங்காதிருந்து தேசப் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவார்களாக!

''இந்தப் புதிய மாடல் வி. ஐ. பி. விமானங்கள் வேண்டாம்; ஏற்கெனவே உள்ள ஒரு TU 124 ருஷ்ய விமானமே போதும்; தேவையானால் அதையே கொஞ்சம் ரிப்பேர் செய்து வைத்துக் கொள்ளலாம்'' என்ற முன்னாள் பிரதமர் மொரார்ஜி தேசாயின் உத்தரவு எவ்வளவு முட்டாள்தனமானது என்று இப்போது புரிகிறது! இப்போது வாங்கப் படவிருக்கும் விமானங்களை இப்போது வாங்காமல், இன்னும் பத்து வருஷங்களுக்குத் தள்ளிப் போடுகிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். அப்போது இதை விட அதிகமாகத்தானே விலை கொடுத்து வாங்க வேண்டியிருக்கும்? அந்த அதிகப்படிச் செலவையும் ஏழை இந்தியன்தானே வரிச் சுமையாகத் தாங்க வேண்டியிருக்கும். அந்த அதிகப்படி பளுவைத் தவிர்க்கத்தான் இப்போதே வாங்கி விட்டார்கள்! வரி செலுத்தும் 'சராசரி' மீது ஆட்சியினருக்கு எவ்வளவு கருணை!

'பழைய ருஷ்ய மாடலே போதும்' என்றாரே மொரார்ஜி; கொஞ்சமாவது யோசனை பண்ணியிருந்தால் அந்த முடிவை எடுத்திருப்பாரா? அந்தப் பழைய விமானத்தில் ஆபீஸ் அறைகள் என்று தனியாக உண்டா? படுக்கை அறை என்று பிரத்யேகமாய் இருக்கிறதா? அமர்ந்து பேச ஓர் அறை, சமையல் அறை, சாப்பாட்டு அறை, விருந்தினர் அறை, வேலைக்காரர்களுக்கு அறை, குளியல் அறை என்றெல்லாம் தனித்தனியாக உண்டா? விமானம் என்பது பறக்கும் மாளிகையாகவே இருந்தால்தானே குடியரசுத் தலைவரோ அல்லது பிரதமரோ டில்லியிலிருந்து பம்பாய்க்கும் சென்னைக்கும் நிம்மதியாகச் சிரமமின்றிப் பயணப்பட முடியும்?

ஏழைமை ஒழியப் போகிறது, இதோ ஒழிந்து விட்டது என்று ஆசையோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் இந்தியனே, அண்ணாந்து பார்! நெஞ்சு நிமிர நில்! வி. ஐ. பி. விமானங்கள் பறப்பதைக் காண உன் மனம் பூரிக்கும்! மெய் சிலிர்க்கும்! ஏழைமை என்பதாக ஒன்று இருப்பதே உனக்கு மறந்து போகும்! கழுத்து வலிக்கிறதே என்று தலையை மட்டும் தாழ்த்தி விடாதே!

1980 நவம்பர் 16

ரௌத்திரி கார்த்திகை 1

மலர் 39 : இதழ் : 16



கல்கி

தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்





✖ ஜனாதிபதி தேர்தலுக்கு குடியரசு கட்சி வேட்பாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதும் மகிழ்ச்சியும் நன்றியும் தெரிவிக்கும் ரேகென் - நான்ஸி

புதிய ஜனாதிபதி

டெலிவிஷனில் கார்ட்டர் – ரேகென் விவாதத்தைப் பார்த்து, கேட்ட அமெரிக்கர்கள் பெரும்பாலோர் ரேகெனுக்கே வோட்டு என்று தீர்மானித்ததில் வியப்பில்லை. அந்த விவாதத்தை இந்தியாவிலும் அமெரிக்க கேந்திரங்களில் பார்க்க முடிந்தது. ரேகென் தன்னம்பிக்கையுடன், நெஞ்சுறுதியுடன் காணப்பட்டார். ஒப்பு நோக்குகையில் கார்ட்டரிடம் இவை தேவைப்பட்டன. ரேகனின் பேச்சில் தெளிவும் எளிமையும் இருந்தன. கார்ட்டர் சுற்றி வளைத்தார். கார்ட்டர் ஆட்சியைக் குறைகூறும் நிலையில் இருந்தார், ரேகென். கார்ட்டர் தம்மைத் தற்காத்துக்கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்.

விவாதத்தின் போது பத்திரிகையாளர்கள் நால்வர் ஒரு கேள்வியை இரு வேட்பாளர்களிடமும் கேட்கின்றனர். ஒரு பெண்மணியின் கேள்விக்கு கார்ட்டர் பதிலளித்த பிறகு அதே கேள்வியை அப்பெண்மணி ரேகெனிடம் கேட்டார். ரேகென், ''அம்மணீ! நீங்கள் இரண்டு தடவை அந்தக் கேள்வியைக் கேட்டுவிட்டீர்கள். ஒரு பதிலாவது உங்களுக்குக் கிடைக்க வேண்டாமா? இதோ சொல்கிறேன்'' என்று ஆரம்பித்த தன் மூலம் கார்ட்டரின் பதில் பதிலே அல்ல என்று ஒதுக்கித் தள்ளினார்!

உலகில் அணு ஆயுதப் பரவலைத் தடுப்பது மிக முக்கியமான பணி என்ற கார்ட்டர், தமது மகளிடம் அண்மையில் பேசிக் கொண்டிருந்தபோது உலகை அச்சுறுத்தும் மிகப் பெரிய ஆபத்து அணு ஆயுதங்கள் தான் என்று அவள் சொன்னதாகக் குறிப்பிட்டார் – குழந்தைகளுக்குக் கூட இந்த விஷயம் தெரிந்திருக்கிறது என்று உணர்த்துவதற்காக.

பின்னால் ஒரு நிருபர் இதுபற்றி ரேகெனைக் கேட்க, ''ஆமாம், ஆமாம், மௌரீனும், மைக்கேலும் குழந்தைகளாக இருந்தபோது அவர்களுடன் இது பற்றி நான் விவாதித்த நாட்கள் என் நினைவுக்கு வருகின்றன'' என்று கிண்டலான பதில் கிடைத்தது. ரேகெனின்

✖ குடியரசு கட்சி சின்னமான யானை மீது அமர்ந்துள்ள ரேகென்-ராணுவபலத்தைப் பெருக்கிக் கொள்ளவேண்டும் என்ற அவரது கொள்கையைக் கிண்டல் செய்யும் கார்டூன்.

மக்கள் மௌரீனுக்கும் மைக்கேலுக்கும் இன்று வயது முறையே 39, 35!

அமெரிக்காவில் சில காலமாகவே வேலையில்லாதோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. விலைவாசிகள் உயர்ந்து வருகின்றன. இவை கார்ட்டருக்குப் பாதகமாயின. ஈரானில் இருக்கிற பணயக் கைதிகள் பிரச்னை, கார்ட்டரின் சகோதரர் பில்லி கார்ட்டர் மீது சுமத்தப்பட்ட லஞ்ச ஊழல் குற்றச்சாட்டு ஆகியவையும் கார்ட்டருக்கு எதிராக மக்கள் அபிப்பிராயத்தை உருவாக்கின.

ரேகென் வரிகள் குறையும் என்று வாக்களித்தார். அதன் மூலம் புதிய தொழில்கள் தனியார் துறையில் உருவாகும். வேலை வாய்ப்புக்கள் பெருகும். பொருளாதாரம் பலப்படும். விலைவாசிகள் குறையும். உற்பத்தி அதிகரிக்கும்போது அரசுக்கு வருவாய் புதிய அம்சங்களில் கிடைக்க, குறைக்கப்பட்ட வரியை ஓரளவு ஈடுகட்டிவிடும். ரேகெனின் இந்த எளிய அடிப்படைப் பொருளாதாரக் கொள்கை அமெரிக்க மக்களுக்குப் பிடித்திருந்தது. வோட்டுக்கள் அவருக்குக் குவிந்தன.

''ராணுவ பலத்தை அதிகரிப்பேன் என்கிறீர்கள்; வரிகளைக் குறைப்பேன் என்றும் கூறுகிறீர்கள். ஒன்றுக்கொன்று முரண்பாடாகத் தெரிகிறதே'' என்ற ஒரு பத்திரிகையாளர் கேள்விக்கு, ''உற்பத்திக்கு உதவாத அனாவசிய அரசாங்கச் செலவினங்களைக் குறைத்துத் திசை திருப்பி விடுவேன்'' என்று உறுதியளித்தார் ரேகென்.

''நான் போரை விரும்புபவனல்ல. அணு ஆயுதங்களுக்கும் நான் எதிரிதான். ஆனால், அமெரிக்காவின் அமைதிப் பணியைப் பலவீன நிலையில் இருந்து கொண்டு நடத்த முடியாது. ராணுவ பலத்தைப் பெருக்கிக் கொண்டுதான் சமாதானக் கரம் நீட்ட வேண்டும்'' என்பது ரேகெனின் வாதம்.

இது ஆபத்தான கொள்கைதான் என்றாலும் இதற்கும் வோட்டுக் கிடைத்திருக்கிறது.

அமைதிப் பணி, அணு ஆயுதங்களையும் போர் விமானங்களையும் கப்பல்களையும் செய்து குவிப்பதன் மூலம் நடக்காது. சந்தேகப் பார்வையை ஒழித்து வல்லரசுகள் ஒருவரை ஒருவர் நம்பி, தம்மிடம் உள்ள யுத்த தளவாடங்களைக் குறைத்துக் கொள்வதன் மூலம் தான் நிறைவேற முடியும். ரேகென் ஜனாதிபதியாகியிருப்பது இதற்கு இடைஞ்சலாகவே இருக்கலாம்.

தமிழக முதல்வரை சினிமா பிராபல்யத்தினால் பதவிக்கு வந்தவர் என்று யாரும் இனி குறைகூறத் துணிய மாட்டார்கள். ஏனெனில் ரேகெனும் சினிமா நட்சத்திரமாகப் பிரகாசித்தவர்தான். சுமார் ஐம்பது படங்களில் நடித்திருக்கிறார். ஜனாதிபதி தேர்தலுக்கு வேட்பாளர் என்று அறிவிக்கப்பட்ட நாள் முதல் இவர் படங்கள் எதையும் அமெரிக்க டி.வி.யில் காட்டுவதில்லை. காரணம் எல்லா வேட்பாளருக்கும் சம அளவில் டி.வி.யில் நேரம் வழங்க வேண்டும் என்ற விதியை ரேகென் மீற விரும்பவில்லை!

1911ம் ஆண்டு பிறந்த ரேகென் பள்ளிப் படிப்பிலே ரொம்ப ஈடுபாடு கொள்ளவில்லை. பரீட்சைக்குச் சில தினங்கள் முன்பாக அதில் தேறக் குறைந்த பட்ச மதிப்பெண் பெற மனவுக்குப் புத்தகங்களைப் புரட்டுவார். நல்ல ஞாபக சக்தி கைகொடுத்து உதவியது. கல்லூரிப் படிப்பு முடிந்த பிறகு வானொலியில் விளையாட்டு நிகழ்ச்சிகளை ஒலிபரப்புகிறவராகப் பணியாற்றினார்.

சினிமாவில் நடிக்க வாய்ப்புத் தரவேண்டும் என்று ஒரு திரைப்பட ஏஜெண்டிடம் போய்க் கெஞ்சினார். ஏஜெண்டை அறுகவே சிபாரிசு தேவைப்பட்டது. அந்த ஏஜெண்ட் இவரை வார்னர் பிரதர்ஸ் நிறுவனத்துக்கு "மற்றொரு ராபர்ட் டெய்லர்" என்று அறிமுகப்படுத்தினார். எனினும் ரேகென் முதல் தர நடிகராக என்றுமே பெயர் பெற்றதில்லை. சதா இரண்டாவது கதாநாயகன்தான்!

சினிமாவை விட டி.வி.யில் அதிக பிராபல்யம் அடைந்தார் ரேகென். ஜனநாயகக் கட்சியிலிருந்து குடியரசுக் கட்சிக்குத் தாவினார். அப்போது நடந்த ஜனாதிபதி தேர்தலின்போது டி.வியில் குடியரசுக் கட்சி வேட்பாளர் பாரி கோல்ட் வாட்டர் சார்பில் பிரசாரம் செய்தார். இது அவருக்கு இருந்த அரசியல் திறமைகளை வெளிக் கொணர்ந்தது.

கலிபோர்னியா மாநில ஆளுனராக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டார் ரேகென். வழக்கமாக ஜனநாயகக் கட்சிக்கே வோட்டளிக்கும் அந்த மாநில மக்கள், 10 லட்சம் வோட்டு வித்தியாசத்தில் இவரை ஆளுனராக்கினர்.

இதற்கு முன்பே இரு முறை ஜனாதிபதி தேர்தலுக்கு நிற்க முயன்று கட்சியின் நியமனம் கிட்டாமல் தோல்வியுற்றவர் ரேகென். கட்சித் தேர்தல்களில் ஃபோர்டு, சில வாக்கு வித்தியாசத்தில் ரேகெனைத் தோற்கடிக்க முடிந்ததற்கு முக்கிய காரணமாக இருந்தவர் ரீட் என்பவர். அவர் பின்னால் ரேகெனிடம் வந்து மன்னிப்புக் கோரினார். "என் வாழ்நாளின் மிகப் பெரிய தவறு செய்து விட்டேன்" என்று கண்ணீர் விட்டார். ரேகென் அவரைத் தோளில் தட்டிக் கொடுத்து "எல்லாரும்தான் ஒரு சமயம் இல்லாவிட்டால் ஒரு சமயம் தப்புச் செய்கிறோம்" என்றார்.


ரேகெனுக்குக் கோபமும் வருமாம். ஆனால் "வந்த வேகத்திலேயே புகைந்து மறைந்தும் விடும்" என்கிறார் மனைவி நான்஺ஸி. இவர் ரேகெனின் இரண்டாவது மனைவி. முதல் மனைவி பிரபல நட்சத்திரம் ஜேன் ஒய்மன். பல ஹாலிவுட் திருமணங்கள் போல் இதுவும் விவாகரத்தில் முடிந்தது. முதல் மனைவியிடம் ஒரு குழந்தை மௌரீன்; மைக்கேலை சுவீகாரம் எடுத்துக் கொண்டார்கள். இரண்டாவது மனைவி மூலம் மேலும் இரண்டு குழந்தைகள். இவர்களுக்கு வயது 27, 22. அமெரிக்க ஜனாதிபதிகளிலேயே மிகவும் வயதானவர் ரேகென்தான். வயது 70. தாம் ஆரோக்கியமாக இருப்பதைத் தேசத்துக்கு உணர்த்த ஆறு டாக்டர்கள் தம்மைப் பரிசோதித்த பிறகு அவர்களை நியூயார்க் டைம்ஸின் டாக்டர் நிருபர் கேள்விகள் கேட்டுக் குடையச் சம்மதித்தார்.


தேர்தல் முடிவுகள் அதிகார பூர்வமாக அறிவிக்கப்படு முன்னமேயே கார்டர் விட்டுக் கொடுத்தார். "எனக்கு அடக்கத்தைக் கற்பித்த பல தருணங்களில் இதுவே மிக முக்கியமானது" என்றார் ரேகென். அடக்கத்துடனும் விவேகத்துடனும் உலக அமைதிக்கும் ஜனநாயகத்தின் வெற்றிக்கும் அவர் பாடுபடுவதைக் காண உலகம் காத்திருக்கிறது.

குட்டி கிருஷ்ணன்

✖ காத்திருக்க நேரும் சமயத்தில் பொழுது போக்க ரேகென் வரைந்த சித்திரங்கள் சில

✖ கலிஃபோர்னியாவில் தங்கள் பண்ணை வீடு முன்பாக ரேகென் தம்பதி.







உணர்வுகள் உண்மையாகும்போது

கமலா நடராஜன்

"கணவனை இழந்தவர்கள் மறுமணம் செய்துகொள்வது பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?"

சுஜா திடுக்கிட்டு நிமிர்ந்தாள்.

எந்த நோக்கில் அவன் இந்தக் கேள்வியைத் தன்னைப் பார்த்துக் கேட்கிறான்?

நோக்கம் எதுவானால் என்ன? இதைப் போன்ற கேள்விக்கு மிக உண்மையான பதிலை வேறு யாரிடமிருந்து எதிர்பார்க்க முடியும்? கணவனை இழந்த தன்னைப் போன்ற படித்த ஓர் இளம் பெண்ணிடம் தானே எதிர்பார்க்க முடியும்.

மனத்தில் தோன்றும் எதையும் மறைக்காமல் பேசிவிடுவதும், தங்களிடம் உள்ள குறைபாடுகளைக் கூடத் தயங்காமல் ஒப்புக்கொள்வதும் ஒருசிலரால் மட்டுமே முடியும்.

அந்தச் சிலரில் ஒருவன் — கௌதமன்.

அவனிடம் அவளுக்கு மிகவும் பிடித்த குணம், பிடிக்காத குணம் இரண்டுமே இது தான்.

"இதில் எவ்வளவோ கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன. பாதிக்கப்பட்டவர்களின் மன நிலையைப் பொருத்தது அது. ஒன்று மட்டும் நான் நிச்சயமாய்ச் சொல்வேன். மனத்தளவிலும் அந்த வாழ்க்கையை ஏற்க இயலாதவர்கள் ஒழுங்காக மறுமணம் செய்துகொள்வதில் தவறு எதுவுமில்லை."

அவன் மெல்லிதாகப் புன்னகைத்தான்.

"பல விஷயங்களில் நம் இருவரின் எண்ணங்களும் ஒத்திருப்பதே நமது நட்பின் பலம் என்று நான் நினைக்கிறேன்."

"அது சரி, திடீரென்று இப்படி ஒரு கேள்வி ஏன்?"

அவள் இப்பொழுது தன் சந்தேகத்தைக் கேட்க, அவன் அதே புன்னகையுடன் பதில் சொன்னான்.

"என் நண்பன் ஒருவன், அழகன்; படித்தவன்; கலா ரசிகன்; எந்தக் கோணத்திலும் சிறப்பித்துப் பேசப்படவேண்டியவன். அவன் அகால மரணமடைந்து இரண்டு ஆண்டுகளுக்குள் அவன் மனைவி எனது வேறொரு நண்பனை மணம் செய்து கொள்ளப் போகிறாள். இதோ அழைப்பிதழ் கூட வந்திருக்கிறது."

அவன் அதைப் பையிலிருந்து எடுத்து அவளிடம் காட்டுகிறான்.

மனத்தின் ஒரு மூலையில் ஏதோ ஓர் ஏமாற்ற உணர்வு அவளை நெருட—

கண் இமைக்கும் நேரத்தில் அவள் முகத்தில் தோன்றிய அந்த மாறுதலைக் கவனித்து விட்டவன்—

"ஓ ஐ ஆம் சாரி சுஜா, உங்க கிட்டே நான் இந்தக் கேள்வியைக் கேட்டது தவறோன்னு நினைக்கிறேன்" — குரலில் அனுதாபம் தெரிந்தது.

அவள் இப்போது அழகாகவே சிரித்தாள். ஆழ்ந்த கடலைச் சற்று நேரம் வெறித்தாள்.

தூரத்தில் எத்தனையோ புயல்களை உள்ளடக்கிக் கொண்டு எத்தனையோ அமைதியுடன் காட்சி தரும் அதனிடத்தும், ஓரத்தில் சிறிதும் பெரிதுமாகப் பல எண்ண அலைகள்.

"சரி போகலாமா?" — அவன் கேட்க, இருவரும் எழுந்தனர், நடந்தனர்.

கௌதம்!

அவளது மேலதிகாரி அவனை அவளுக்கு அறிமுகப்படுத்தியபோது, முதல் பார்வையிலேயே அவன் மீது தனக்கு ஒரு நல்லெண்ணமும் நம்பிக்கையும் எழுவதை சுஜா உணர்ந்தாள்.

வேஷ்டியும் சட்டையுமாய், தூய வெண்மையான உடையில் காட்சியளித்தான்.

அடுத்துப் பழகியபோதும்—

அவன் உடையில் மட்டுமல்ல; உள்ளத்திலும் வெண்மையாளன், உருவத்தில் மட்டுமல்ல, எண்ணங்களிலும் உயர்ந்தவன் என்பதை அவள் கண்டு வந்தாள்.

அவன் தன்னைப் பற்றிய எல்லா விவரங்களையும் அவளிடம் மனம் விட்டுப் பேசினான். இரண்டு வருடங்களுக்கு முன் தாயை இழந்தது, நோயாளியான தந்தையைப் பாதுகாக்க வேண்டிய முழுப் பொறுப்பும் தன்னையே சார்ந்து விட்டது. தன் நேரத்தில் பெரும் பகுதியை அவருக்குப் பணிவிடை செய்வதற்கே தான் செலவிட வேண்டியிருப்பது எல்லாவற்றையும் அவளிடம் கூறியபோது—

"நீங்கள் ஏன் உடனடியாக ஒரு கல்யாணம் செய்து கொள்ளக் கூடாது? நோயாளியான உங்கள் தந்தையைக் கவனித்துக் கொள்ள ஒரு மருமகள் இருந்தால் எவ்வளவு நலமாக இருக்கும்?"

"உண்மைதான். அப்பா கூட நான் படும் கஷ்டத்தைப் பார்த்துவிட்டு அடிக்கடி அப்படிச் சொல்வதுண்டு. ஆனால் எனது திருமணத்தைப் பொருத்தவரை என்னுள் எனக்கென்றே சில குறிக்கோளைக் கொண்டிருப்பவன் நான். "மற்றவர்கள் செய்யாததை, அல்லது செய்யத் தயங்குவதை நான் செய்வேன். வரதட்சிணை தர இயலாத ஓர் ஏழைப் பெண், அல்லது ஊனமுற்றவள், அதுவுமில்லாவிட்டால் ஒரு விதவை இப்படி எவரேனும் ஒருவரைத்தான் என் மனைவியாக்கிக் கொள்ளப் போகிறேன். அப்படி ஒருத்தி, அவளும் என்னை நன்கு புரிந்திருப்பவளாகக் கிடைக்கும்போது என் திருமணம் தானே நடக்கும்."

வியப்பினால் அவள் கண்கள் விரிகின்றன.

"கௌதம் உங்களது நல்ல உள்ளத்தை நான் பாராட்டுகிறேன்" — சொன்னாள்.

அதுமட்டுமா சொல்லத் தோன்றுகிறது இன்னும் ஏதோ ஒன்றை அவனிடம் கேட்க-யாசிக்கத் தோன்றுகிறதே!

என்ன... என்ன அது?

''எவ்வளவோ சொல்லிப் பார்த்துட்டேம்மா. எனக்காக நீ இன்னமும் டாக்டருக்குன்னும் மருந்துக்குன்னும் செலவு பண்ண வேண்டாம்னு இவன் கேட்க மாட்டேன்கிறான்'' – படுக்கையிலிருந்த கௌதமனின் தந்தை சுஜாவிடம் பெருமையோடு அலுத்துக் கொண்டபோது–

அவரது தலைமாட்டில் நின்றிருந்த அவன் லேசாகப் புன்னகைக்க அவள் மனம் அவனை எண்ணிப் பெருமையால் பூரிக்கிறது.

என்ன புண்ணியம் செய்தாரோ இந்தக் காலத்தில் கூட ஓர் உத்தம புத்திரன்!

''என்ன பாபம் செய்தாளோ மகாலட்சுமி மாதிரி வாழ வேண்டிய அவ தலையில் இப்படி எழுதியிருக்கு.''

சுஜா அங்கிருந்து சென்ற பின் அப்பா அவனிடம் அனுதாபப் பட்டுக்கொள்கிறார். அவன் உள்ளம் ஊமையாய்த் தவிக்கிறது.

அன்று–

''சுஜா சொல்றேன்னு தப்பா நினைக்காதே. மிஸ்டர் கௌதமனோடு நீ பேசறதையும் பழகறதையும் கொஞ்சம் குறைச்சுக்கோ. ஆபீஸிலும் வெளியிலும் உங்க ரெண்டு பேரைப் பத்திப் பேசறதைக் கேட்டால் உன்னால் தாங்கிக்க முடியாது.''

வித்யா சொன்னபோது சுஜா திடுக்கிட்டாள்.

சே, எப்படிப்பட்ட உலகம் இது! ஓர் ஆணும் பெண்ணும் நட்பு முறையில் பழகி வரும்போதே விபரீத அர்த்தம் கற்பித்து விடுகிறதே.

''மீண்டும் மதுரைக்கே மாற்றலாகிவிட முயற்சி செய்து கொண்டிருக்கிறேன் சுஜா.''

அந்தச் செய்தி அவளுக்குப் பெரும் அதிர்ச்சியைத் தருகிறது.

''தன்னுடைய இறுதி நாட்களைச் சொந்த ஊரில் கழிக்க வேண்டும் என்று அப்பா ஆசைப்படுகிறார். அவருடைய கடைசி விருப்



1981 டயரி

கல்கி வாசகர் பரிசுத்திட்டம் (நவம்பர்)

ஒரு புத்தாண்டுப் பிரதிக்ஞை மேற்கொள்ளுங்கள்!

முதல்தரமான சகின் டயரிகளை அதிர்ஷ்ட சாலிகளான **நூறு** கல்கி நேயர்களுக்கு அன்பளிப்பாக வழங்குகிறோம்.

நவம்பர் ஐந்து வாரக் கல்கியிலும் பிரசுரமாகும் ஐந்து கூப்பன்களை பூர்த்தி செய்து அனுப்ப வேண்டிய விலாசம்:

கல்கி டயரி பரிசு திட்டம்
தபால் பெட்டி எண் 3159
சென்னை-32

ஐந்தாவது கூப்பனில் உங்கள் புத்தாண்டு பிரதிக்ஞையும் விலாசமும் இடம் பெற வேண்டும்.

முடிவு தேதி டிசம்பர் 20உ

கூப்பன் நெ. 3.

கல்கி 1981 டயரி பரிசுத்திட்டம்

என் பெயர் ....

கையெழுத்து ....

பத்தை நிறைவேற்ற வேண்டியது என் கடமையாக இருக்கிறதே.''

''கௌதம், உங்க அப்பாவின் கடைசி விருப்பம் அது ஒன்றுதானா?''

''ஏன்? வேறு என்ன இருக்க முடியும்?''

''உங்கள் திருமணத்தைப் பற்றி....''

''அந்தக் குறை அவருக்கு நிறையவே உண்டு. அதே சமயம் எனது லட்சியம் என்ன வென்பதும் அவருக்குத் தெரியும். பழங்கால மனிதராக இருந்தாலும் அவர் சீர்திருத்த எண்ணங்கள் பல கொண்டவர். பழுத்த காந்திய வாதி. தன்னுடைய ஆசைக்காக அவர் என்னை இது விஷயத்தில் அவசரப்படுத்தவோ, கட்டாயப்படுத்தவோ விரும்பியதில்லை.''

அதை மிகுந்த பெருமையோடு அவன் சொல்லிக் கொள்கிறான்.

''நீங்கள் விரும்புவது போன்ற பெண்கள் தானே நிறையக் கிடைப்பார்கள். அப்புறமும் ஏன் இவ்வளவு தாமதம்?''

''உண்மைதான். ஆனால் அவள் புதியவளாக இருப்பதை விட, என்னை நன்கு புரிந்து கொண்டவளாக இருப்பது நல்லதல்லவா?''

அவன் வார்த்தைகளில் ஏக்கம் பிரதிபலிக்க—

அவள் மனம் உள்ளுக்குள் ஓலமிடுகிறது.

'இதோ... இதோ நான் இருக்கிறேனே கௌதம். என்னை உங்களால் புரிந்து கொள்ள முடியவில்லையா?'

அவனுக்கு மாற்றல் உத்தரவு கிடைத்து விட்டதைக் கூட அவன் முதன் முதலில் அவளிடம்தான் தெரிவித்தான்.

அங்கு அவன் வேலை பார்த்த ஓராண்டு காலமும் ஒரு விநாடி நேரமாய் ஓடிப்போய் விட்டதே!

ரயில் புறப்பட்டுக்கூட அவள் அவனிடம் ஏதேதோ பேசிக் கொண்டு வருகிறாள். கடைசியில் அதன் வேகம் அதிகரித்தபோது அவள் சொன்னாள்— ''உங்கள் திருமண அழைப்பிதழை ஒவ்வொரு நாளும் எதிர் பார்ப்பேன்.''

அவன் அதற்கு என்னவோ பதில் சொல்கிறான். காதில் விழவில்லை. அவன் கைகள் மட்டும் அசைந்து கொண்டிருக்கின்றன.

''தங்கமான பெண்ணடா கௌதம் இவள் பாவம், தாய் தந்தை உடன் பிறந்தவர் ஒருத்தரும் இல்லை. யாரோ உறவுக்காரர் ஆதரவில்தான் இருக்கிறதாச் சொன்னே, ஏதேதோ லட்சியம்னு சொல்லிக்கிட்டிருக்கிற நீ, இவளைப் போன்ற ஒரு பெண்ணுக்கு வாழ்வைக் கொடுத்தா எனக்குக்கூட எவ்வளவு திருப்தியா இருக்கும் தெரியுமா?' —அப்பா சொல்லிப் பெருமூச்சு விடுகிறார்.

''என்ன செய்வேன் அப்பா! அவளை நான் மனப்பூர்வமாகக் காதலிக்கிறேன். கல்யாணம் செய்துகொள்ளக் காத்துக் கொண்டிருக்கிறேன். ஆனால் அவளது அந்தரங்கம் என்ன என்பதை என்னால் அறிந்துகொள்ள முடியவில்லையே. அவள் மட்டும் என்மீது வேறு மாதிரியான அன்பு கொண்டிருந்தால் எப்போதோ என்னிடம் அதைத் தெரிவித்து விட்டிருப்பாள். ஏனென்றால் அவள் எதையுமே வெளிப்படையாகப்பேசிவிடும் வெள்ளை உள்ளம் படைத்தவள்!''

அவனது உள்ளம் ஊமையாக அழுகிறது.



''நீங்கள் மன்னரின் மைந்தர் கொள்கை பிரசாரம் செய்ததன் பலன் என்ன ஆச்சு தெரியுமா?''

''என்ன ஆச்சு?''

''நம்ம பெண்ணுக்காகப் பார்த்த லண்டன் வரன் வேண்டாமாம்! பக்கத்து போர்ஷன் பிள்ளையே போதும் என்கிறாள்!''

சர்வாதிகாரப் போக்குத்தான் சந்தேகமில்லை — ஜனா கிருஷ்ணமூர்த்தி

சென்ற இதழில் மூப்பனார் பேட்டியைப் படித்து விட்டு தமிழக பாரதிய ஜனதா கட்சி, திரு ஜனா கிருஷ்ணமூர்த்தி தொலை பேசியில் அழைத்து தாம் அந்தப் பேட்டி தொடர்பாகச் சில கருத்துக் களைக் கூற விரும்புவதாகச் சொல்ல நமது நிருபர் சென்று சந்தித்தார்:

மூப்பனார் பேட்டியைப் படித்துப் பார்த்தேன். கேள்விகளுக்கு நேரடியாகப் பதில் சொல்லாது நழுவிச் சென்றிருக்கிறார். இந்திரா அவர்கள் சர்வாதிகாரப் போக்குடையவரா? அல்லது ஜனநாயகவாதியா என்ற கேள்விக்கு அவரது முந்தைய தலைமுறையைச் சுட்டிக் காட்டி அந்தக் குடும்பத்தில் வந்த இந்திரா ஜனநாயகப் பாதையில் இருந்து விலக மாட்டார் எனக் கருதுவதாகக் கூறுகிறார். நேருஜி பெரும்பான்மையான முடிவு தமக்குப் பிடிக்கா விட்டாலும் கூட அதற்குத் தலை வணங்குபவர். ஆனால் இந்திராவோ 1969ம் வருடம் ஜனாதிபதி பதவிக்கு திரு சஞ்சீவ ரெட்டியைக் கட்சி ஏகமனதாகத் தேர்ந்தெடுத்ததும், அதற்கு விரோதமாக நடந்து கிரியை ஆதரித்துக் கட்சியையே உடைத்தவர். இது ஜனநாயக வாதியின் செயலா?

1975ல் எமர்ஜன்சி கொண்டு வந்ததன் பின்னணியை அனைவரும் அறிவர். எமர்ஜன்சியை அமுலாக்க அவர் எடுத்த முடிவை அவரது 'காபினட்' சக அமைச்சர்கள் கூட அறிந்திருக்கவில்லை என்பது வரலாற்று உண்மை. இந்தப் போக்கு சர்வாதிகாரப் போக்கு இல்லை என்றால் வேறு எது சர்வாதிகாரப் போக்கு என்று எனக்குத் தெரியவில்லை. சமீபத்திய பட்வாரி நீக்கத்தையே எடுத்துக் கொள்ளுங்களேன். ஜனநாயக மரபு வழுவாமல் நடக்கும் ஒரு பிரதமரின் நடவடிக்கையாக இது கருதப்பட முடியுமா?

ஒரு கட்சி ஜனநாயக ரீதியில் செயல்படுகிறது என்பதற்கு எடுத்துக் காட்டு, அக்கட்சியிலே தேர்தல்கள் நடத்தப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் கட்சிப் பொறுப் பேற்றிருக்கிறார்களா என்பதுதான். 1969ல் (இ) காங்கிரஸ் பிரிந்ததிலிருந்து இன்று வரை கட்சியில் தேர்தல் நடத்தப்படவில்லை. திருமதி இந்திரா மாநிலத் தலைவர்களை நியமிப்பதும், மாநிலத் தலைவர்கள் மாவட்டத் தலைவர்களை நியமிப்பதும், அந்த மாவட்டத் தலைவர்கள் அவர்களுக்குக் கீழ் உள்ள அமைப்புக்களின் தலைவர்களை நியமிப்பதும், இவ்வாறு நியமிக்கப்பட்ட தலைவர்கள் ஏனைய நிர்வாகிகளையும், கமிட்டி உறுப்பினர்களையும் நியமிப்பதுதான் (இ) காங்கிரஸில் காணப்படும் காட்சியாகும். எனவே தமது பதவியைக் காத்துக் கொள்ள திருமதி இந்திராவின் தயவை நாட வேண்டிய நிலையில் இருப்பவர்கள் இந்திராவின் விருப்பப்படி நடக்காது மாறுபட்ட கருத்தையா சொல்வார்கள்?



✖ திரு ஜனா கிருஷ்ண மூர்த்தி

அம்மாதிரி கூற எவருக்கேனும் துணிச்சல் இருக்குமா?

இது (இ) காங்கிரஸின் ஜனநாயகமாக இருக்கலாம். ஆனால் மக்கள் ஏற்கும் ஜனநாயகம் ஆகாது. அவரது நம்பிக்கைக்குப் பாத்திரமான சிலர் கூறுகின்ற தகவல்களின் அடிப்படையில் இந்திரா செயலாற்றும் போது, அத்தகவல்களே தவறாக இருந்தால் இந்திரா தவறு செய்து விட்டதாக எப்படிக் கூற முடியும் என்கிறார் மூப்பனார். தவறாகத் தகவல் கொடுக்கும் நபர்களை நியமிக்கும் இந்திரா அதன் விளைவுகளுக்கு எப்படிப் பொறுப்பாகாமல் இருக்க முடியும்?

ஏதோ ஒரு சீட்டையில் இருபத்தி நாலு மணி நேரத்தில் கையெழுத்திட்டு அனுப்பிவிடுகிறார் என்றால் அது இந்திராவின் துரித முடிவெடுக்கும் தன்மையை எடுத்துரைப்பதாகாது. டாக்டர் சென்னா ரெட்டி சட்டசபை இ. காங்கிரஸ்காரர்களின் நம்பிக்கையை இழந்து விட்டார் என்ற நிலை தெரிந்து நான்கு மாதம் ஆனது. ஜனநாயக ரீதியில் செயல் படுகிறவராக திருமதி இந்திரா இருந்திருந்தால் உடனடியாகச் சட்டசபைக் கூட்டத்தைக் கூட்டி, தேர்தலை நடத்திப் பெரும்பான்மை ஆதரவு பெற்றவரை முதல்வராக ஏற்றிருக்க வேண்டும். அதை விடுத்துத் தாம் முடிவு கூறுவதாகக் கூறி நூறு நாட்கள் தாமதப்படுத்தி அஞ்சையாவை நியமித்திருக்கிறார். இந்த நான்கு மாத காலத்தில் ஆந்திர மாநில நிர்வாகம் ஸ்தம்பித்துப் போயிற்று. இதற்குக் காரணம் இந்திராதானே?

நான்கு சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள், எழுபது உயர்நீதி மன்ற நீதிபதிகள் இன்னும் நியமிக்கப்படாது அந்த ஸ்தானங்கள் இன்னும் காலியாகவே உள்ளன. மத்திய அரசாங்கத்தின் தலைமைச் செயலகத்தில் பல

நவம்பர் 23
கல்கி வாசகர் சிறப்பிதழ்



உயர் அதிகாரிகள் பல மாதங்களாக எவ்விதக் குறிப்பிட்ட பொறுப்பும் அளிக்கப் படாது வீண் காலம் கழித்து வருகிறார்கள். நாட்டின் பாதுகாப்பைக் கவனிக்க ஒரு முழு நேரப் பாதுகாப்பு அமைச்சர் கிடையாது. அது போலவே மிக முக்கிய அமைச்சரகமான தொழில் துறைக்கும் ஒரு காபினட் அமைச்சரைப் பத்து மாதங்களாகியும் இன்னும் நியமிக்கவில்லை. இவையெல்லாம் இந்திரா துரித முடிவெடுப்பதை எடுத்துக் காட்டுகின்றனவா என நண்பர் மூப்பனாரைக் கேட்க விரும்புகிறேன்.

ஜனதா கட்சியில் அலங்கோலங்கள் இருந்தனவே தவிர ஜனநாயக ஆட்சி சிறப்பாகத் தான் நடைபெற்றது. இதனை மூப்பனாரும் மறுக்க முடியாது. 77–78–79 ஆகிய இரண்டு ஆண்டுகளில் ஜனதா ஆட்சி நடந்தபோது விலைவாசிகள் வியக்கத் தக்க முறையில் கட்டுப்படுத்தப்பட்டிருந்தன என நிதி அமைச்சர் வெங்கட்ராமன் பட்ஜெட்டுக்கு முன் பாராளு மன்றத்தில் சமர்ப்பித்த பொருளாதார அறிக்கையில் ஒப்புக்கொண்டிருக்கிறார். ஜனதா ஆட்சியில் இல்லாத ரேஷன் கார்டும், கியூ வரிசையும் இப்பொழுது இந்திரா ஆட்சியில் திரும்பி வந்துள்ளன என்பதை மூப்பனார் மறுக்க முடியுமா? உட் பூசல்களால் ஜனதா கட்சி உடைந்தது. அதனால் அதன் மீது மக்கள் கொண்ட கடுங் கோபம் இன்று இந்திராவை மீண்டும் ஆட்சியிலே அமர்த்தியிருக்கிறது.

இந்திரா காங்கிரஸ் பதவிக்கு வந்து ஒன்பது மாதங்களாகியும் என்ன சாதித்தது என்ற கேள்விக்கு நேரடியாகப் பதில் கொடுக்காது மூப்பனார் சாமர்த்தியமாக நழுவிவிட்டார். அனைத்துத் துறைகளிலும் இந்த ஒன்பது மாத இந்திரா ஆட்சி தோல்வியுற்று விட்டது. தமது தோல்விக்குப் பலி கடாக்களைத் தேடுகிறார் இந்திரா. ஆர். எஸ். எஸ், பாரதிய ஜனதா கட்சி, எதிர்க் கட்சிகள், நிர்வாகம், முந்தைய ஜனதா அரசு, அந்நியரின் கை, பாராளு மன்ற ஜனநாயக முறை ஆக இவை ஒவ்வொன்றையும் முறை வைத்துத் தம் ஆட்சியின் தவறுகளுக்கும் தோல்விகளுக்கும் காரணம் காட்டி வருகிறார் இந்திரா. மொத்தத்தில் இந்தப் பத்து மாத இந்திரா ஆட்சி மக்களுக்கு வேதனை அளித்ததுதான் சாதனையாகும்.

பேட்டி: அசோக் குமார்

புதிய எண்ணங்கள்; புதுப்புது அலங்காரங்கள்!




பி.ஏ. பட்டதாரியான திருமதி சியாமளா மகாதேவன் பத்திரிகைத் துறைப் படிப்பிலும் சிறப்பாகத் தேறியவர். வீட்டு அலங்காரக் கலையையும் ஒரு பாடமாக ஏற்றுப் படித்துள்ளார். விளைவு, அவ்வப்போது மாறும் வீட்டின் உட்புறத் தோற்றம். அடுத்து பிளஸ் பாயிண்ட், இசைத்திறமை. மெல்லிசை, கர்நாடக இசை இரண்டிலும் பயிற்சி பெற்றவர்.

''இன்டீரியர் டெகரேஷனில் எனக்குக் காதலே உண்டு. அந்தத் திறமை இருப்பதால் சோம்பேறித்தனம் குடி புகுவதில்லை. புதிய எண்ணங்கள் வீட்டின் புதிய அலங்காரங்களாக மாறுகின்றன- நல்ல பொழுதுபோக்கு. மனசுக்கு உற்சாகம் தரக்கூடிய இனிய கலை'' என்று கூறும் சியாமளாவுக்கு ஓவியம் தீட்டுவதிலும், ஆர்வம் உண்டு! பேட்டி : ''சிக்கி'' மேல்அட்டை வண்ணப்படம் எடுத்தவர் :

நரேந்

ஷீலா ஸ்பீக்ஸ்..



ஏ.வி.எம்.கணேஷ்

ஹலோ லிட்டர்ஸ்... குட் மார்னிங்—ஆஃப்டர்நூன் — ஈவினிங்.... லெட் மி டெல் யூ ய ஸ்டோரி.... ஷார்ட் ஸ்டோரி. ஸ்டோரின்னு சொன்னதுமே ஏதோ வரதட்சணைக் கொடுமையைச் சித்திரிக்கப் போறேன்னோ அல்லது ஏதோ ஒரு வாழ்க்கைத் தத்துவத்தை எழுத்துக்களாய்க் கோத்துச் சொல்லப் போறேன்னோ... ப்ளீஸ் டோண்ட் திங் ஸோ. நான் சொல்லப் போறது ஒரு லவ் ஸ்டோரி... டேமிட்... திஸ் இஸ் நாட் லவ். காதல் கதையில்லே இது. கொஞ்ச நாளைக்கு முன்னாலே எல்லோரும் பேப்பர் கிழிய எழுதினாங்களே நியூவேவ்ன்னு சொல்லி... அப்படியும் இல்லே... ரப்பிஷ்... அது என்ன நியூ வேவ்.... கள்ளக் காதலனை 'பாய் பிரண்டு'ன்னும், கள்ளக் காதலியை 'கேர்ள் பிரண்டு'ன்னும் அழகா தைரியமா சொல்ற ஒரு போலித்தனத்திற்கு 'நியூ வேவ்'ன்னு எவ்வளவு அழகான பெயர் இல்லே? எஸ்... கம் டு த பாய்ண்ட்.... முதல்லே....மீட் மிஸ்டர் ராஜேஷ். நான் சொல்லப் போற கதையின் ஹீரோ...

காங்கோ டிரம்ஸ் ஸ்டீரியோவில் பிளிறிக் கொண்டிருக்கிறது. தன்னுடைய தனி சாம்ராஜ்யமான அந்த மாடி அறையில் அவன் குறுக்கும் நெடுக்குமாக உலாவிக் கொண்டிருக்கிறான். சுவரில் ஒட்டப்பட்டிருக்கும் ஹேம மாலினிகளும்' சீமாக்களும் பர்வீன் பாபிகளும் மற்றும் சில பேபிகளும் கண் இமைக்காமல் பார்த்துக் கொண்டிருக்க அவன் அடிக்கடி ஜன்னல் ஓர விளிம்புக்கு வந்து எதிர்த்த பங்களாவின் போர்டிகோ



வினை இறக்க கோணத்தில் பார்த்துக் கொண்டிருக்கிறான்.

எத்தனையோ விதமான மலர்கள் 'விப்கையார்' வண்ணங்களில் அங்கே பூத்துச் சிரித்துக் கொண்டிருந்தாலும், அவனுக்குப் பிடித்தமான அந்த ரோஜாவைக் காணவில்லை. அன்று எப்படியும் பதித்துவிடுவது என்ற அசைக்க இயலா முடிவுடன் அவன் தேடிக் கொண்டிருக்கும் அந்த ஒற்றை ரோஜா காலை மணி பத்தாகியும் இன்னும் போர்டிகோவில் மலரவில்லை என்றால், அந்த ரோஜாவைப் பெற்றவன் அலுவலகத்துக்கும், பெற்றவள் சமூக சேவைக்கும் செல்லவில்லை என்று அர்த்தம்.

● யெஸ் ... ஓ. கே. ... கதாநாயகன் அறிமுகம் முடிந்தது. அடுத்து கதாநாயகி. மிஸ் ஸ்வர்ணலதா... here after refered to as லதா. நானும் எழுத்துப் படித்தவன். அதாவது எஸ். எஸ். எல். சி. ஆறுதல் உடவின் நெளிவு வளைவுகளை — மேடு பள்ளங்களைப் பொறுத்தவரையில் Q. M. C போண்ட் மிஸ்டேக் மீ... 'Q' for Queen 'M' for Marvellous and 'C' for Charming. காலை பத்து மணிக்கு ஆபீசுக்குப் புறப்படும் அப்பா மாலையில் ரம்மி ஆடிவிட்டு 'ஆடி'க் கொண்டே வீட்டுக்குத் திரும்பும்போது வீதியில் கூர்க்கா மட்டுமே நடமாடிக் கொண்டிருப்பான். அப்பாவின் கார் தெரு எல்லையைக் கடக்கும்போது அம்மாவின் கால்கள் காம்பவுண்டுச் சுவரைக் கடந்து முடிந்திருக்கும். எனவே வீட்டில் அவள் எப்போதும் தனியாக — தனிக்காட்டு ராணியாக .... விளைவு... ராணி... ராஜாவைத் தேட.... எதிர் வீட்டு ஜன்னல் எப்போதுமே திறந்திருக்க.... ராஜேஷ் அவளுடைய ராஜா வானான்.

''இஸ் இட் பாஸிபிள்? வீட்டிலே ஒரு பெண் தனியா இருந்தா லவ் பண்ணத்தான் அவளுக்குத் தோணுமா? வேற எதுவுமே

தோணுதான்னு'' நீங்க கேட்கிறது என் காதிலே விழுது... பட் ஒன் திங்... இந்தக் கதையைக் கேட்டுக் கொண்டிருக்கும் சகோதரிகள் மன்னிக்க.... வீட்டிலே கல்யாணமாகாத — எந்த வேலையும் இல்லாம இருக்கிற பெண்ணுங்களுக்குத் துணை என்ன?... பத்திரிகைகள்... ரேடியோ... டி.வி....... சினிமா.... பத்திரிகையைப் புரட்டுறப்போ இக்கு பேலே செக்ஸ்... ரேடியோ நாடகத்தைக் கேட்டா... ''என்னைக் கைவிட்டுடமாட்டீங்களே'' என்று ஒலிக்கிற சந்தேகக் காதல்... டி.வி.யில் ஒலியும் ஒளியும் நிகழ்ச்சியில் டூயட்... சினிமா... கேட்கவே வேண்டாம்... சரி.... கதைக்கு வருவோம். அதோ அம்மாவும் அப்பாவும் வெளி உலகுக்குச் சென்றதும் அதோ அந்த போர்டிகோவில் ராஜேஷின் ஒற்றை ரோஜா மலர்கிறது...

செந்தூர வண்ணத்தில் பாப்பப்பட்டிருந்த போர்ட்டிகோவில் நீல நிற மாக்ஸியில் தழையத் தழைய நின்றுகொண்டிருக்கிறாள் லதா. அவளைச் சுற்றி வளைய வளைய வந்து கொண்டிருக்கிறது அந்த நன்றியுள்ள ஜீவன் - அல்சேஷன். அவளின் பட்டு விரல் பிடிக்குள் சிக்கிக் கிடக்கும் 'எக்ளேயர்' சாக்லெட்டுக்காகச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்கிறது அது. நாயுடன் குழந்தைத்தனமாகக் கொஞ்சிக் கொண்டிருக்கும் பாவனையுடன் நின்று கொண்டிருந்தாலும் அவள் விழிகள் எதிர் மாடி ஜன்னலின் பின்னே பளபளக்கும் இரு விழிப் படலங்களை நாடித் துழாவிக் கொண்டிருந்த ஐந்தாவது நிமிடத்தில் ஜன்னலின் பின்னே விழிப் படலங்கள் மினுமினுக்க....

மென் விரல்களைப் பிரித்து முதல் சாக்லெட்டை உரித்து அந்தரத்தில் வீசுகிறாள். சீஸர் (ஷேக்ஸ்பியரே! எங்களை மன்னியும்!) கவ்விக்கொள்கிறது.


ராஜேஷ் பார்த்துக் கொண்டிருக்கிறான். அவன் அந்தரத்தை நோக்கி விசிறி எறியும் சாக்லெட்டுகளின் எண்ணிக்கையில் தான் அவன் துடிப்பு அடங்க வேண்டும். அவள் ஒரு சாக்லெட்டை வீசி எறிந்தால் வீட்டில் அப்பா இல்லை என்று பொருள். இரண்டாவது ஒன்றை எறிந்தால் அம்மாவும் இல்லை என்று அர்த்தம். மூன்றாவது சாக்லெட்டை எறிந்தால் நீ வரலாம் என்பது அவர்களிடையே நிலவும் குழூஉக் குறி.

முதல் சாக்லெட் மறைந்தது. இரண்டாவதும் எறிந்தாயிற்று. மூன்றாவது சாக்லெட் அந்தரத்தில் பல்டி அடித்து சீஸரின் பற்களுக்கிடையே நொறுங்கும்போது— ராஜேஷ் மாடிப் படிகளைக் கடந்து முடித்து விட்டான்.

● எஸ்... ரீடர்ஸ்... இனி நாம் கேட்கப் போவது அவர்களுடைய ரகசியங்கள்... கொஞ்சல்கள்... கெஞ்சல்கள்....

''வெல்கம் ராஜேஷ்...''

''குட் மார்னிங் ஹனி.''



லதா: ''சுத்தச் சண்டைப் போட்டிகளில் ரெகுலராக இருப்பவரைக் கல்யாணம் பண்ணிக் கொண்டு அவதிப் படறேண்டி!''

மாலா: ''ஏன்?''

லதா: ''பின்னே என்ன, டிபன் சாப்பிட உட்கார்ந்தால் 'ஒன்னு ரெண்டு'ன்னு பத்து இட்லிகள் வரை சாப்பிடறார்.. அப்புறம் இப்படியே மூணு நாலு வடையும் உள்ளே தள்ளிக்கிறாரே!''

ஜி. நடராஜன்

''உங்களுக்கு எவ்வளவு துணிச்சல்?''

''எதைச் சொல்றீங்க?''

''எவ்வளவு தைரியமா இங்கே வர்றீங்க....''

''வாசல்லேயே நின்னு எப்படி?''

''அப்புறம் எங்கே போறது...?''

''வீட்டுக்குள்ளே...''

''எதற்கு?''

''அங்கேதானே பெட்ரூம் இருக்கு...''

''சீ....சீ....''

● ரீடர்ஸ்... அதோ அவர்கள் படுக்கை அறையை நோக்கிச் செல்கிறார்கள். முன் ஹாலைக் கடந்து கொண்டிருக்கும்போதே அவர்கள் கால்கள் ஏதோ ஒரு மயக்கத்தில் தள்ளாடுகின்றன. அம்மி மிதிக்காமல் அருந்ததி நோக்காமல் நேரே சாந்தி முகூர்த்த அறைக்குச் செல்லலாமா ... ஹலோ ... யாரங்கே?.... என்ன சொல்றீங்க... நீங்க... என்னை விலகிப் போகச் சொல்றீங்களா... எனக்கு எதுக்கு வம்பு... விலகிக்கிறேன் நான்.

இரட்டைக் கட்டிலில் அவளைப் பரப்பி, அவள் பிடறியில் இடறிக் கொண்டிருந்த கூந்தல் சங்கத்துக்குள் வலது கையை நுழைத்து மாக்ஸியின் ஜிப்பைக் கீழ்நோக்கி இழுக்கத் தொடங்கும் போது...

''ப்ளீஸ்... ராஜேஷ்... லீவ் மீ...... ஐ டோண்ட் வாண்ட் தேட்....''

''பட்... ஐ வாண்ட்... இட்... டியர்....''

''மாக்ஸியை அவிழ்க்காதே ராஜேஷ்... ப்ளீஸ்....''

''கூல் டிரிங்ஸ் குடிக்கிறபோது கூட.... 'ஸ்ட்ரா' இல்லாமக் குடிக்கிறதுதான் எனக்குப் பிடிக்கும் டியர்....''

''ராஜேஷ்... என்னைக் கல்யாணம் பண்ணிக்குவியா?....''

''ஷ்யூர்... சத்தியமா....''

சேரன் செங்குட்டுவன் இளவலே! சிலப்பதிகாரம் யாத்த இளங்கோவடிகளே!.... பொய் கூறுபவர்களை சதுக்க பூதம் அடித்து நொறுக்கி விடும் என உங்கள் காப்பியத்தில் குறிப்பிட்டிருக்கிறீர்களே... வாட் எபௌட் ராஜேஷ்?

● ரீடர்ஸ்... ராஜேஷின் விரல்கள் அவள் முதுகுத்தண்டில் ஊர்ந்து அவள் உடலே மாக்ஸியின் பிடியிலிருந்து உருவி விடுவிப்பதற்கு முன் நாம் அவளைக் காப்பாற்றியாக வேண்டும். ராஜேஷின் விரல் நடமாட்டத்திற்கு அவளும் உடன்பட்டிருக்கும்போது உனக்கு

ஜப்பானுக்குச் சிலே

ஜப்பானில் உள்ள ஒரு கோவிலுக்காக 10 லட்சம் ரூபாயில் மங்களூரில் ஒரு புத்தர் சிலே தயாரிக்கப் படுகிறது. 64 பாகங்கள் கொண்ட சிலையை இரண்டு வருடங்களுக்கு முன்னால் செய்ய ஆரம்பித்தார்கள். 43 பாகங்கள் (சுமார் 400 டன் எடை) ஜப்பானுக்கு அனுப்பப்பட்டு விட்டது. மீதிபாகங்கள் இன்னும் நாலு மாதங்களில் அனுப்பப் படுமாம். சிலையைச் செய்பவர் ராதாமகா தேவ் ஷெனும் என்பவர்.

ஜப்பானின் புகழ் பெற்ற நிப்பன் பிலிம் கம்பெனி ஆட்கள் இந்த சிலையைப் பற்றிய டி. வி. டாக்குமெண்டரி தயாரிக்க மங்களூர் வந்துள்ளார்கள். - டைம்ஸ் ஆப் இந்தியா

தகவல்: - ஏஸ். சந்திரசேகர்



ஏன் இந்த வேண்டாத வேலே என்கிறீர்களா? ஏதோ ஒரு சிலிர்ப்பில் அவள் உடன் பட்டிருந்தாலும் நானே அவள் மட்டுமே நிர்ணயிக்க வேண்டியிருக்கும். அதைத் தடுக்க வேண்டியது என்னுடைய கடமை. என்னது.... நீங்கள் உதவிக்கு வரமாட்டீர்களா?... நாங்கள் வெறும் பார்வையாளர்களென்று சொல்கிறீர்கள்?... வெல்... நீங்கள் உதவிக்கு வராததால் அவளே அவன் களங்கப்படுத்த நான் அனுமதிக்கப் போவதில்லே. சீஸர் உன் எஜமானியைக் காப்பாற்றுவதற்காக என் விழிகளைப் பார்... கூர்மையாகப் பார்.... லுக் அட் மீ சீஸர்... லுக் அட் மீ....!

போர்ட்டிகோவில் படுத்தவாறே நாவைத் தொங்க விட்டுக் கொண்டிருந்த சீஸர் சிலிர்த்து எழுகிறது. பரபரப்புடன் முன் ஹாலேக் கடந்து படுக்கை அறைக்குள் நுழைந்து அவன் மீது சீறிப் பாய...."

"நோ.... நோ.... லதா... என்னைக் காப்பாற்று....

"சீஸர்.... அவரை விட்டுடு...."

சீஸரால் அந்தக் குரலேக் கேட்க இயலவில்லே. ராஜேஷின் கன்னம், மார்பு, வயிறு, கால், முதுகு.... அத்தனே பாகங்களேயும் சீஸரின் பற்கள் 'எக்ஸேயர்' மாதிரி மென்று குதறிக் குருதியைக் கொட்டச் செய்த பின்பு எஜமானியம்மாவின் காலடியில் நல்ல பிள்ளேயாகச் சுருண்டுகொள்ள... ராஜேஷின் ரத்தம் படுக்கை விரிப்பினே நனேத்து அவ்விரிப்பிற்குக் கீழே பதுங்கிக் கிடந்த 'டி ஃபோம்' மெத்தையின் நுரைப் பஞ்சுத் துவாரங்களுக்குள் நுழைந்துகொள்ள.....

லதா சிலேயாக நின்றாள்.

● டியர் ரீடர்ஸ்.... ஏன் அவசரமா ஓடுறீங்க... இரத்தம்ன்னு சொன்ன உடனே பயமா இருக்கா... இது என்ன ஸார் இரத்தம்.... போன மாதம் இதே நாளில் மத்தியானம் ஒரு மணிக்கு "ராஜேஷ்.... உன்னாலே நான் கற்பை இழந்து நிற்கிறேன்னு ரயில்வே ஸ்டேஷன்னு கூடப் பார்க்காம கொஞ்சம் உரக்கவே கேட்ட என்னே, 'வாய்ப்புக் கிடைக்காத வரை கண்ணகியும் கற்புக்கரசி தான்' என்று என் காதருகே கெக்கெத்து, பாய்ந்து வரும் மின்சார ரயிலின் முன்னே என்னேப் பிடித்துத் தள்ளிவிட்டுக் கூட்டத்துக்குள் அவன் கரைந்து சென்றபோது... அந்த இரும்புத் தண்டவாளங்களிடையே நீங்கள் என் இரத்தத்தைப் பார்த்திருக்க வேண்டும்.... அது சரி... என்ன கேட்டீர்கள்? 'நான் யார்?' என்று கேட்கிறீர்களா?... ஐயாம் மிஸ் ஷீலா... லேட் மிஸ் ஷீலா... ஓட்டேரி சுடுகாடு....சென்னே ஆறுலட்சத்து ஏழு.

அவன்: நம்ம டெஸ்பாட்ச் சாரங்கன் பொடி போடறதை நிறுத்திட்டான்!
இவன்: ஏன்.....?
அவன்: டேய் சர்ர்ர்ரங்கானு எல்லாரும் அவனேக் கூப்பிட ஆரம்பித்தது பிடிக்காமல் தான்!

உ. ராஜாஜி




தமிழுக்கு அமுதென்று பேர்...!
நல்ல காபிக்கு நரசுஸ் என்று பேர்...!
ஜீவனுள்ள ஒரே காபி!
நரசுஸ்
"தெர்மலோ" காபி!
நரசுஸ் காபி கம்பெனி
சேலம் 636 007.
கிளைகள்: தமிழ்நாடெங்கும்.
ADWAVE/NC/1370

வெந்து தணிந்த காடுகள்



இந்திரா பார்த்தசாரதி

2

ராதிகா சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டே அருணைப் பார்த்தாள்.

அவன் ஏற்றுமதி இறக்குமதி பற்றிய அரசாங்க விதிகளை மிகக் கவனமாகப் படித்துக் கொண்டிருந்தான். ஊசியின் காதளவு ஓட்டை இருந்தால் கூடப் போதும், ஒட்டகத்தை அதன் வழியே செலுத்திவிடக்கூடிய சாமர்த்தியமுடையவன் அவன். ஓட்டை நிச்சயம் இருக்க வேண்டும்... விதி வகுத்த அரசாங்க அதிகாரிகள் இந்த ஓட்டையைக் கண்டு பிடிக்கும் திறமைசாலிகளுக்குப் பலனளிப்பதன் மூலம் அவர்களும் பலன் பெறுகிறார்கள்.

ராதிகா அந்தத் தொழில் நிறுவனத்தில் உயர்ந்த பதவியில் இருந்தாள். அருணுக்கு அடுத்தபடியாகக் கெட்டிக்காரத்தனமுடையவள் என்ற பேர் பெற்றவள். அவளெழுப்பிய பிரச்னையைத்தான் அருண் இப்பொழுது ஆராய்ந்து கொண்டிருந்தான்.

இளம் வயதிலேயே உயர்ந்த பதவி வகிக்கும் ராதிகாவைக் கண்டு மற்றப் பெண்கள் பொறாமைப்பட்டார்கள் என்பது ஆச்சரியத்துக்குரிய விஷயமில்லை. அவள் அறிவைக் காட்டிலும் அவளுடைய அழகுதான் அவள் மூலதனம் என்று விஷமமாக அவர்கள் கூறுவதுண்டு. ஆனால் இதைப் பற்றியெல்லாம் ராதிகா கவலைப்பட்டதே கிடையாது.

ராதிகா எல்லா 'பார்ட்டி'களிலும் முக்கிய விருந்தினர்; அல்லது அவள் விருந்து அளிப்பவள். தான் 'பெண்' என்ற எந்த விதமான மனத் தடையுமில்லாமல், ஆண்களுடன் அவர்கள் 'பாஷை'யிலேயே பேசி அவளால் பழக முடியும். ஆண்கள் தங்களுக்குள் சென்ஸார் செய்யப்பட வேண்டிய நகைச் சுவைத் துணுக்கு சொல்வதாக இருந்தாலும் பெண்கள் இருக்கிறார்களா என்று அங்குமிங்கும் பார்த்துவிட்டு, ராதிகா இருந்தால் 'ஓ.கே.... ராதிகாதான் இருக்கிறாள்... பரவாயில்லை' என்று சொல்லக் கூடிய அளவுக்கு அவளுக்கு விருந்துகளில் செல்வாக்குண்டு.

ராதிகா யோசித்துக் கொண்டிருந்தாள். அவளெழுப்பிய பிரச்னையைப் பற்றி அல்ல. அருணைப் பற்றி, விம்மியைப் பற்றி, அவர்களிடையே இருக்கக் கூடிய உறவு முறை பற்றி... விம்மி மற்றப் பெண்களிடமிருந்து வேறுபட்டவள்தான். விருந்துகளில் பெண்கள் பேசும் 'இனிய வம்பளப்புகளில்' அவள் கலந்து கொள்வது கிடையாது. யார் என்ன சொன்னாலும் லேசான குறு நகைதான்... அவள் ஆழமானவளா அல்லது ஒன்றும் தெரியாதவளா என்று யூகிக்கவும் முடியவில்லை.

அருண் மிகவும் வெளியுலக ஈடுபாடு கொண்டவன். நடப்பியல் வாழ்க்கையில் வெற்றி என்பதைத் தவிர வேறு பாதை தெரியாதவன். விருந்துகளின்போது விம்மி நடந்து கொள்வதைப் பார்த்தால் அவள் வெறும் இயந்திரம்தானோ என்ற சந்தேகம் தோன்றும். விருந்தின் 'உச்ச' நிலையில், அருண் மிகுந்த உற்சாகத்தோடு ஆர்ப்பாட்டமாகப் பேசும்போது, விம்மி அவனை வெறித்த நோக்குடன் பார்ப்பதை அவள் கவனித்திருக்கிறாள். யாராவது அப்படிப் பார்ப்பதைப் பார்த்து விட்டால் போதும், உடனே அவள் முகத்தில் மிகவும் சுபாவமான முறையில் புன்னகை வந்துவிடும். விம்மிக்குள் இன்னொரு விம்மி இருக்கிறாளோ!

ராதிகா தன் கணவனைப் பற்றி யோசித்தாள். சொர்க்கத்தில் நிச்சயமான கல்யாணம். அவளுடைய அத்தையின் மகன். இன்ஜினியர். செங்கற்களையும், கான்க்ரீட்டையும் தவிர அவனுக்கு வேறொன்றும் தெரியாது. அவள் செல்லும் விருந்துகளுக்கோ, அல்லது அவள் அளிக்கும் விருந்துகளிலோ அவன் பங்கு கொள்வதில்லை. 'ப்ளீஸ் லீவ் மி அலோன்'... அவள் எல்லா ஆண்களுடன் எந்த விதமான தடையுமின்றி பழகுவது பற்றி அவனுக்குப் பொறாமை உணர்ச்சி கூடக் கிடையாது. இது அவளைப் பற்றி அவனுடைய அசாத்திய நம்பிக்கையா அல்லது அவளைப் பற்றி அவன் கவலைப் படவேயில்லையா என்று அவளுக்குப் புரியவில்லை.

அவர்களுடைய மகன் ராகுலிடம் கூட அவனுக்குப் பாசம் இருந்ததாக அவளுக்குத் தெரியவில்லை.

பார்க்கப்போனால் ராகுலும் ஒரு விசித்திரமான பையன். பதினான்கு வயதுதான் ஆகிறது. ஓர் 'அடல்ட்' போல் நடந்து கொள்கிறான். வளர்த்தியும் அப்படித்தான் இருக்கிறது. வயதுக்கு மீறிய பெரிய பெரிய

புத்தகங்களெல்லாம் படிக்கிறான். அவன் சிந்தனை முயற்சியைப் பார்க்கும்போது அவளுக்குப் பயமாக இருக்கிறது. அவன் தனக்கென்று ஒரு தனி உலகைப் படைத்துக் கொண்டு விட்டான். அப்பாவும் அம்மாவும் அவன் பிறப்பைச் சாத்தியமாக்கிய, தவிர்க்க முடியாத உறவுகள் என்று மட்டும்தான் அவன் நினைக்கிறானோ என்பது அவள் சந்தேகம்.

அவளுக்குச் சின்ன வயசிலேயே கல்யாணமாகிவிட்டது. பதினெட்டு வயதில் ராகுல் பிறந்தான். அவள் தொடர்ந்து படித்துப் பட்டம் பெற்று வேலைக்குப் போனாள். எந்த நிலையிலும் அவள் கணவன் ரமேஷ் இதற்கு ஆட்சேபம் தெரிவிக்கவில்லை.

அவளைப் பார்க்கின்றவர்கள் யாரும் அவளுக்குப் பதினான்கு வயதில் ஒரு பிள்ளை இருக்கிறான் என்று நம்ப மாட்டார்கள். ஒரு சமயம் அவள் வீட்டுக்கு வந்திருந்த ஒருவர் அவளைக் கேட்டார்: ''ராகுல் உங்களுடைய தம்பியா?'' இதை அவள் ராகுவிடம் சொன்னபோது, அவன் கையிலிருந்த புத்தகத்திலிருந்து பார்வையை மீட்காதவாறு, உதட்டில் ஒரு லேசான புன்னகையுடன் வினவினான்: ''ஸோ வாட்?'' அப்பொழுது அவனுக்கு வயது எட்டு....

''பிரச்னை தீர்ந்த மாதிரிதான்'' என்றான் அருண் ராதிகாவிடம் புன்னகையுடன்.

''எப்படி?''

''மூன் மாதிரிகள் இருக்கின்றன. யுனைடட் ஸ்டேட்ஸ் லோன் ஃபண்டிலிருந்து கடன் வாங்கி 30000 டன் ரயான் பல்ப் உற்பத்தி செய்ய 1967ல் இந்தக் குறிப்பிட்ட கம்பெனிக்கு அனுமதி வழங்கியிருக்கிறது மத்திய அரசாங்கம். பிறகு ஒரு பெரிய தொழில் நிறுவனத்தின் தலையீட்டின் காரணமாக இத்திட்டம் நிறைவேறவில்லை. ஆனால், லைசென்ஸை இன்னும் ரத்து செய்யவில்லை. இதை ஆதாரமாக வைத்துக் கொண்டு, D.G.T.D.யில் உள்ளவர்களுடைய மனச்சாட்சியையும் பர்ஸையும் திருப்தி செய்து விட்டால், பிரச்னை தீர்ந்துவிடும்.''

''பெரிய தொழில் நிறுவனம் நமக்குப் பச்சைக் கொடி காட்டிக் கொண்டு நிற்குமென்று எதிர்பார்க்கிறீர்களா?''

''பெரிய தொழில் நிறுவனம் சம்பந்தப்பட்ட ஒரு விவகாரத்தின் ஃபைல் என்னிடம் இருக்கிறது. ஆகவே அவர்களை எப்படிச் சரிக்கட்டுவது என்று எனக்குத் தெரியும்'' என்று கூறிக் கொண்டே ஒரு சிகரெட்டைப் பற்றவைத்தான் அருண்.

''விஷயம் அவ்வளவு சுலபமானது என்று நினைக்கிறீர்களா?''

''என்னைப் பொறுத்த வரையில் சுலபமானது. இவ்வளவு என்னைத் தெரிந்துவைத்துக் கொண்டும் நீ கேட்கும் கேள்வி எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. அது கிடக்கட்டும். நேற்றிரவு நடந்த விருந்தின் தொடர்ச்சியாக நாம் இப்பொழுது செய்யவேண்டிய காரியத்தைக் கவனிப்போம். நாம் உடனடியாக நாட்டில் காகிதப் பஞ்சம் ஏற்படும்படியாகச் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் எஸ். டி. ஸி.யால் முடியாத காரியத்தை நம்மால் செய்ய முடிகின்ற சூழ்நிலை உருவாகும்...



அரசாங்கம் நம்மிடமிருந்து 30000 டன் காகிதம் வாங்குவதற்கு அனுசரணையான நிர்ப்பந்தம்.''

''யு ஆர் எ ஜீனியஸ் அருண்.''

''லே இட் அகெய்ன்'' என்று சொல்லி விட்டுச் சிரித்தான் அருண்.

இவனுடைய தன் முனைப்புக்கு எவ்வளவு தீனி வேண்டியிருக்கிறது என்று நினைத்தாள் ராதிகா. கெட்டிக்காரன். சந்தேகமில்லே. எவ்வளவு தீனி போட்டாலும் தகும்.... தொழில் துறையில் இவனுக்குள்ள சாமர்த்தியத்தைப்பற்றி விம்மி நினைப்பதுண்டோ?..

அருண் விம்மியை எந்த அளவுக்கு நேசிக்கிறான் என்பது அலுவலகத்தில் உள்ளவர்கள் அனைவரும் அறிந்த விஷயம்தான். கிடைப்பதற்கரிய ஓர் அழகான பொம்மை தனக்குக் கிடைத்துவிட்டாற் போன்ற சந்தோஷம், பெருமிதம். விருந்தின்போது எல்லோருடைய முன்னிலையிலும் இடரென்று அவளை இறுகக் கட்டிக் கொண்டு 'மை சார்மிங் வொய்ஃப்' என்பான். ஆனால்... ஆனால்... விம்மி இவனுக்கேற்ற மனைவியா?

இது அருணின் பிரச்னை. தான் இதைப் பற்றி ஏன் சிந்திக்க வேண்டும்?—

''நேற்று கண்ணாடித் தம்ளரை நொறுக்கித் தள்ளினாரே, மிஸ்டர் சபர்வாலா, அவரைத்தான் நம்பி யிருக்கிறேன்... காகிதப் பஞ்சம் ஏற்பட அவர் உதவி செய்வார்.'' என்றான் அருண்.

''அத்தனை குடிச்சிருந்தாரா?''

அருண் அவளை ஆச்சரியத்துடன் நோக்கினான். ராதிகா சாதாரணமாகத் தமிழில் பேசுவதில்லை. அதுவும் குறிப்பாக அலுவலகத்தில். அவள் தமிழில் பேசுவதும் அவனுடன் பொருந்தியதாக அவனுக்குப்படவில்லை. இதற்கு என்ன காரணம் என்று சொல்ல முடியாது. இவள் கணவனைப் பார்த்தால்தான் இவர்களுடையது தமிழ்க் குடும்பம் என்று சொல்ல முடியும். ரமேஷ் விருந்துகளுக்கு வருவதே யில்லை. அவள் வீட்டில் விருந்து நடந்தால், நெற்றியில் திருநீறுடன் வேட்டியைக் கட்டிக்கொண்டு அவனுக்கும் அவ்வீட்டில் நடப்பதற்கும் சம்பந்தம் இல்லாதது போல் கையில் ஒரு புத்தகத்துடன் ஓரமாக உட்கார்ந்திருப்பான். இல்லாவிட்டால், வருகின்றவர்களைப் பார்த்து, 'வாங்கோ!' என்று சொல்லிவிட்டுப் போய்விடுவான். அவனை இஞ்சினீயரிங் புத்தகத்தைத் தவிர வேறு ஒன்றும் படிப்பதில்லை என்று ராதிகா கூறியிருக்கிறாள். ரமேஷ் இவளுக்கேற்ற கணவனா?—

இது ராதிகாவின் பிரச்னை... தான் இதைப் பற்றி ஏன் சிந்திக்க வேண்டும்?—

''குடிச்சிருந்தாரா இல்லையா தெரியாது. அவர் ஐ.ஏ.எஸ்.லே பாஸ் பண்ணாம இருந்திருந்தா ஒரு பெரிய ஜெஃப் தாம்ஸனா ஆயிருப்பாராம்.... விம்மிகிட்டே இதைத் தான் சொல்லிண்டிருந்தார்...''

''விம்மி சொன்னாளா?''

''இல்லே... நானே அவர் சொல்லிண்டிருந்ததைக் கேட்டேன். விம்மி பொதுவா இதைப் பற்றியெல்லாம் ஒண்ணும் பேசறதே கிடையாது.''

''ஏன்?''

''ஐ டோண்ட் நோ'' என்று தோள்களைக் குலுக்கிக் கொண்டான் அருண்.

''இந்த விருந்துகள்ளாம் அவளுக்குப் பிடிக்கிறதா?'' என்று கேட்டுக் கொண்டே இன்னொரு சிகரெட்டைப் பற்றவைத்துக் கொண்டாள் ராதிகா.

''ஏன்?... அவளுக்குப் பிடிச்சுத்தானிருக்கணும்....''

''என்ன அவசியம்?''

''அவ புருஷன் ஏற்பாடு செய்யற விருந்து அவளுக்குப் பிடிக்காம இருக்குமா?... வாட் நான்ஸென்ஸ்?... ஷி லைக்ஸ் மி ஸோ மச், ராது.''

ராதிகா ஒன்றும் பேசவில்லை. சில கணங்கள் மௌனமாக அவனை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

அருண் கீழே குனிந்து கொண்டு அவனெதிரே இருந்த புத்தகத்தின் பக்கங்களைப் புரட்டியவாறு சொன்னான்: ''அவளுக்கு 'விமன் லிப்'... இந்த மாதிரி விஷயங்களைப் பத்தியெல்லாம் ஒண்ணும் தெரியாது.''

''என்னைப் பத்தி என்ன நினைக்கிறீங்க அருண்?''

அருண் அவளை நிமிர்ந்து பார்த்தான். ''எதுக்கு இந்தக் கேள்வி?''

''ஜஸ்ட் ஐ வாண்ட் டு நோ.''

''நீ என்னுடைய லெஃப்டினண்ட். இதை விட உன் திறமைக்கு வேற என்ன அத்தாட்சி வேணும்?''

''நான் 'விமன் லிப்பர்'னு நினைக்கிறீங்களா?''

''உன்னுடைய சாமர்த்தியத்தையும் திறமையையும் நினைக்கிறபோது, நீ ஒரு பெண்ணுங்கிற நினைவே வர்றதில்லே....''

''Male Chauvrinism'' என்றாள் ராதிகா.

அருண் வாய் விட்டுப் பலமாகச் சிரித்தான்.

''உங்களுக்கு இருக்கிற இந்த ஆம்பிளை அகங்காரத்துக்கு விம்மி ஒரு 'விமன் லிப்பா' மாறியிருந்தாக் கூட ஆச்சரியப்படுவதற்கில்லே.''

அம்மா: தனிக் குடித்தனம் போன மகளைப் பார்க்கப் போனவர் ஏன் அழுதுக்கிட்டே வர்றீங்க?

அப்பா: கண்ணுக்குக் கண்ணா வளர்த்த என் செல்ல மகள் காலையும் கையுமா அடுப்படி வியர்வையில் அல்லாடும் காட்சியை நேரில் கண்டதும் மனசு தாங்கலேடி எனக்கு!

உ. ராஜாஜி



''நோ ஃபியர்ஸ்... விம்மி அப்படி மாறவே மாட்டா. அவ ஒரு தேவதை மாதிரி... 'ஸ்வீட், இன்னொஸன்ட் அன்ட் அன்ஸ்பாய்ல்ட்'....''

''ரமேஷைப் பற்றி நீங்க என்ன நினைக்கிறீங்க?''

அருண் சிறிது நேரம் அவனை உற்றுப் பார்த்தான். பிறகு புன்னகையுடன் கேட்டான்: ''இதைப் பத்தியெல்லாம் ஆபீஸ்லே விவாதிக்கணும்கிறது அவசியமா?''

''பின்னே எங்கே விவாதிக்கணும்?''

''எதுக்காக விவாதிக்கணும்? உன் அபிப்பிராயத்தைப் பற்றி எனக்கொண்ணும் தெரியாது. தெரிஞ்சுக்கணும்கிற ஆசையுமில்லே. ஆனா என் பொண்டாட்டியைப் பற்றி ஆஃபீஸிலே விவாதிக்க நான் தயாரா யில்லே... இது விவாதத்துக்குரிய விஷயமுமில்லே.. நௌ லட் அஸ் கோ பாக் டு மிஸ்டர் சபர்வாலா....''

ராதிகாவின் முகம் சிவந்தது. 'பாஸ்டர்ட். உலகத்தில் இவனும் இவன் குடும்பமும் தான் புனிதமான விஷயங்களென்று நினைக்கிறானோ? — அவளைப் பற்றி நினைக்கும் போது, அவள் பெண் என்ற நினைவே வருவதில்லையாம்....

இவன் தலை முழுவதும் இவனைப் பற்றிய நினைவே இவனுக்கிருப்பதால், மற்றவர்கள் இவன் தொடர்பாகத்தான் படைக்கப் பட்டிருக்கிறார்கள் என்ற நினைப்பு... '

விம்மிக்கு இவனைப் பற்றி என்ன அபிப்பிராயம் இருக்க முடியும்? இவன் நினைக்கிறபடி அவள் ஓர் எளிய சுபாவமுடைய பெண்ணாகத் தோன்றவில்லை... இவனுடைய எல்லையற்ற தன் முனைப்பு, இவனைத் தாண்டிய யதார்த்தமொன்று இருக்கும் என்று நம்ப மறுக்கிறது.'

''பெரிய தொழில் நிறுவனம் பற்றிய அந்தரங்கமான ஃபைல் என்னிடம் இருக்கிறது என்று சொன்னேனே, இது பற்றிச் சம்பந்தப்பட்ட மிகப் பெரியவர்களிடம் நாம் பேசியாக வேண்டும். இது 'ப்ளாக் மெய்ல்' என்று சொல்லக் கூடாது. தொழில் விவகாரங்களில் தர்மம், அதர்மம் என்று எதுவுமே கிடையாது. 'லாபம்' என்ற ஒன்றுக்குத்தான் அர்த்தமுண்டு.''

''வாழ்க்கையில் ஒவ்வொரு துறைக்கும் தனித் தனி அளவுகோல் உண்டா?'' என்றாள் ராதிகா.

''ஏன்?''

''உங்களுடைய தனிப்பட்ட வாழ்க்கை— அதாவது உங்கள் மண வாழ்க்கை — புனிதமானது என்று நீங்கள் கருதுகிறீர்கள்... தொழில் என்று வரும்போது நீங்கள் அடையும் வெற்றி ஒன்றுக்குத்தான் அர்த்தமுண்டு என்று நினைக்கிறீர்கள்.... இது ஒரு முரண்பாடாக உங்களுக்குத் தோன்றவில்லையா?''

''என் தனிப்பட்ட வாழ்க்கை எனக்குச் சொந்தமானது. தொழில் என்று வரும் போது சமூக வாழ்க்கை. ஒவ்வொன்றுக்கும் தனித் தனி அளவுகோல் இருப்பதில் என்ன தவறு?''

மனத்தில் இதைப் பற்றி எந்த விதச் சந்தேகமும் இல்லாமல் அவன் இதைப் பற்றிப் பேசியது, அவனுக்கு அவன் தந்தை அடிக்கடி அந்தக் காலத்தில் கூறியதை அவனுக்கு நினைவூட்டியது. அவன் தந்தை ஒரு தத்துவப் பேராசிரியர். ''இந்து மதம் ஒன்றில்தான் தனிப்பட்ட வாழ்க்கையில் ஒருவன் ஒரு நிலையிலும், சமூக வாழ்க்கையில் வேறொரு நிலையிலும் ஒன்றுக்கொன்று முரண் பட்டதாகத் தோன்றினாலும் — வாழ முடியும்... வெள்ளையர் ஆட்சியின்போது, 'சூட்' அணிந்து வேலை பார்த்த ஒருவன் வீட்டில் வேட்டி அணிந்து, திருநீறு பூசி, காயத்ரி சொல்லும் நிலையை, இந்தப் பின்னணியில்தான் புரிந்து கொள்ள முடியும். அவனைப் பொறுத்த வரையில் இரண்டு நிலைகளுக்கும் எவ்வித முரண்பாடும் இல்லை.''

அருண் இக்காலத்து இளைஞனாகப் பார்ப்பதற்குத் தோன்றினாலும், அடிப்படையில் அடி மனம் இந்தப் பாரம்பரியத்தின் வழி வந்ததுதான். தனிப்பட்ட வாழ்க்கை வேறு, சமூக வாழ்க்கை வேறு என்று அந்த அந்த வாழ்க்கைக்குத் தனித் தனி நியாயங்களைக் கற்பித்துக் கொண்டு அவனால் வாழ முடிகிறது.

''நீ இன்று நம் வேலைக்குச் சம்பந்தப்படாத பல விஷயங்களைப் பற்றிப் பேசுவது ஆச்சரியமாக இருக்கிறது'' என்றான் அருண்.

''விம்மியைப் பற்றி யோசித்தேன்..... அதன் தொடர்பாக உங்களுடன் பல விஷயங்களைப் பேச நேரிட்டது... மன்னிக்கவும்.''

''விம்மியைப்பற்றி என்ன யோசித்தாய்?''

''நீங்கள் விம்மியைப் பற்றி யோசித்ததுண்டா?''

''என்ன யோசிக்க வேண்டும்? அழகான பெண், நல்ல மனைவி, என்பதைத் தவிர வேறு என்ன யோசிக்கவேண்டியிருக்கிறது?''

''விம்மிக்கென்று ஒரு தனி வாழ்க்கை இருக்கக் கூடும் என்பதை நீங்கள் ஒப்புக் கொள்ள மறுக்கிறீர்களா?... உங்கள் மனைவி என்பதே ஒரு முழு நேர வேலை என்று நினைக்கிறீர்களா?''

''நீ என்ன சொல்ல நினைக்கிறாய்? விம்மியையும் வேலைக்கு அனுப்ப வேண்டுமென்கிறாயா?''

''விம்மி வேலைக்குப் போக விரும்புகிறாளா என்பது பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் அவள் ஓர் எளிய, மனச் சிக்கல் இல்லாத



''ஒன்னே ஒன்னுக்காகத்தான் என் மனைவி வேலைக்குப் போக நான் சம்மதிக்கிறேன்!''
''என்ன அந்த ஒன்னு?''
''என்னைவிட ஒரு ரூபாய் சம்பளம் அதிகம் வாங்குகிறாள்.'' அ. இராமதாஸ்

பெண்ணாக எனக்குப் படவில்லை. அவள் சமூக நியதிக்காக உங்களுடன் தன்னை இசைவுபடுத்திக் கொண்டிருக்கலாம். ஆனால் அவளுக்குள் இன்னொரு ஸிம்பி இருக்கிறாள் என்று எனக்குத் தோன்றுகிறது.''

''உனக்குள் இருக்கும் இன்னொரு ராதிகா யார்?''

''நான் எனக்காக வாழ்கிறேன். மற்றவர்களுக்காக நான் வாழ விரும்புகின்ற முறையை மாற்றி அமைத்துக் கொள்ள முயலவில்லை.... ரமேஷ் ஆட்சேபித்திருந்தால் நாங்கள் என்றோ பிரிந்திருப்போம்...''

''ரமேஷ் உன் வாழ்க்கையில் குறுக்கிடவில்லை என்பதை விட, உன்னைப் பற்றிக் கவலைப்படவே யில்லை என்றுதான் எனக்குத் தோன்றுகிறது'' என்றான் அருண்.

''எப்படி வேண்டுமானாலும் வைத்துக்-கொள்ளுங்கள். நாங்கள் சந்தோஷமாக இருக்கிறோம்.''

''உன் சுதந்திரம் உனக்கு அலுப்பைத் தரவில்லையா?''

''வாழ்க்கை என்பது ஒரு சுவாரஸ்யமான விஷயம்.... அநாவசியக் கட்டுப்பாடுகள் தனக்குத் தானே விதித்துக் கொண்டு, ஒரே பாதையில் சென்றால் ஆயாசம்தான்... ஏதாவது ஒன்றை எதிர்பார்த்துக் கொண்டே—அது எது என்று தெரிய அவசியமில்லை—ஆச்சர்யங்களுக்காகக் காத்துக் கொண்டிருந்தால் அதைப் போன்ற சுவாரஸ்யமான வாழ்க்கை வேறு எதுவும் இருக்க முடியாது... இப்படி வாழ்வதுதான் உண்மையான சுதந்திரம்.... அது அலுப்பைத் தருமென்று நினைக்கிறீர்களா?''

அருண் சிறிது நேரம் அவளை மௌனமாக உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான். பிறகு சொன்னான்: ''லட் அஸ் கோ பாக் டு சபர்வாலா.''

(தொடரும்)

கோலாலம்பூரில் ஒரு குட்டி சென்னை

கோலாலம்பூரில் ஜாலான் மஸ்ஜித் இந்தியாவுக்குச் சென்றால் சென்னையில் பூக்கடையில் இருக்கிறோமோ என்ற சந்தேகம் உண்டாகிவிடும். அவ்வளவு பூக்கடைகள். பூத் தொடுப்பவர்கள் யார்? தமிழ் நாட்டுப் பெண்கள். உண்மையில் மலாசியர்கள், தமிழ் இனத்தைச் சேர்ந்தவர்கள் என்று சொல்வது சாலப் பொருந்தும்.

மலாசியாவில் பெரும்பான்மையானவர்கள் மலாசியர்கள். அதற்கு அடுத்தபடி சீனர்கள்; இந்தியர்கள் 10 லட்சம் பேர்கள். அதாவது இந்திய வம்சா வழியினர்.

சுமார் 50 வருடங்களுக்கு முன்பு கூட இந்த இந்தியர்களுக்கு 'மலாசியாவிலேயே தங்குங்கள், அங்கு உங்கள் வருங்காலம் உள்ளது' என்று வற்புறுத்திச் சொல்லுவார் இல்லை. அப்படிச் சொல்லிஅவர்கள் வேரூன்றியிருந்தால் இந்தியர்களின் எண்ணிக்கை இன்று 30 லட்சம் கூட இருந்திருக்கலாம்.

மலாசியாவுக்குச் சென்ற நகரத்தார்கள் அங்கு தங்கள் லேவாதேவித் தொழிலை நடத்தி இந்தியாவுக்கு வந்து போய்க்கொண்டிருந்தார்கள். அவர்கள் குடும்பத்துடன் இருந்ததே கிடையாது.

ரப்பர் தோட்டம், டின் சுரங்கங்களில் இந்தியர்கள் இருந்து அவர்கள் குடும்பமும் அவர்களுடன் வளர்ந்ததால் இன்று எண்ணிக்கை 10 லட்சமாவது இருக்கிறது.

தமிழ் பேசுபவர்கள் எந்த நாட்டில் இருந்தாலும் அவர்கள் மொழிப் பற்று கட்டுக்கோப்பாக இருக்கிறது. நான் பாலஸ் ஹோட்டலில் தங்கியிருந்தேன். என் அறையின் ஜன்னலைத் திறந்து வைத்தால் பழைய புதிய சினிமாப் பாட்டுகள் முழங்கும்.

துங்கு அப்துல் ரஹ்மான் தெருவில் நடந்தால் நீங்கள் அது எஸ்பிளனேட் என்று பந்தயம் வைப்பீர்கள். அதுவும் குனோப் சிக் ஸ்டோருக்குச் சென்றால் முக்கால் வாசிக் கூட்டம் தமிழ்க் கூட்டம்.

ஒரு வரவேற்க வேண்டிய மாறுதல் என்னவென்றால், தமிழ் பெண்கள் மலேசியா—சிங்கப்பூரில் கொட்டிக் கிடக்கும் T. Shirt, skirt அணிகிறார்கள். அவைகளைத் துவைப்பது எளிது. விலையும் மலிவு. இந்த அம்சத்தில் கடைகளில் பணிப் பெண்களாக உள்ளவர்களுக்கு வெகு சௌகரியம்.

தேர்த் திருவிழா மாதிரி கூட்டம் உள்ள கடைகளில் வெளியூரிலிருந்து வந்த தமிழர் என்று பரிவுடன் கவனிப்பவர்கள் இந்தப் பெண்கள்தான்.

—கே.எஸ்.



தீர்க்க சுமங்கலி

பானுமதி ராஜகோபாலன்

சுந்தர் மரக்கட்டையாகப் படுக்கையில் விழுந்து கிடந்தான். உடம்பெல்லாம் சுருங்கி, தோலின் நிறம் மங்கி, கண்கள் குழி விழுந்து, முகமெங்கும் ரோமக்காடாய் வளர்ந்து தன்னிலை இல்லாமல் படுத்திருந்தான்.

ஆயிற்று. இன்றோடு அவன் படுக்கையில் விழுந்து முப்பது நாட்கள் ஆகிவிட்டன. பார்க்கப் பார்க்க வேணியின் உள்ளம் பதைத்தது.

''வேணி டியர்! கமான்! டயமாச்சு!'' என்று அன்பொழுக அழைத்த சுந்தர்தானா இவன்? அந்தக் கம்பீரமான தோற்றமும், சுருள் சுருளான கேசமும், நிமிர்ந்த முகவாயும், சிரிக்கும் கண்களும், குறும்புப் பேச்சுகளும் எங்கே போய் மறைந்துகொண்டன? ஒரே மாசத்தில் இப்படி உருக்குலைய வைத்துவிட்டதே விதி.

ஒரு நாள் மாலை ஆபிசிலிருந்து வரும்போதே சோர்வுடன் வந்தான். கார் சத்தம் கேட்டு வெளிவந்த வேணி அவன் முகத் தோற்றத்தைப் பார்த்துத் திகைத்தாள்.

''ஏங்க, உடம்புக்கு என்ன?'' என்று கேட்டவாறு அவன் நெற்றியில் கைவைத்தவள் திடுக்கிட்டாள். நெருப்பாகச் சுட்டது அவன் நெற்றி.

''மத்தியானத்திலிருந்தே ஒரே தலைவலி வேணி. வர வர ஜாஸ்தியாகப் போய்ச் சமாளிக்கவே முடியல்லே.'' ஆயாசத்துடன் சோபாவில் சாய்ந்தவன் அப்படியே மயங்கி விழுந்தான்.

வேணி பதறிப்போய் டிரைவரையும் சமையற்காரரையும் துணைக்கு அழைத்துச் சுந்தரைத் தூக்கிச் சென்று படுக்கையில் கிடத்தினாள்.

டாக்டருக்குப் போன் செய்து அவரும் வந்து பார்த்தார். ஏதேதோ மருந்துகள், மாத்திரைகள், இன்செக்ஷன்கள். மேசை நிறைந்து விட்டது.

அடுத்த இரண்டு நாட்களும் ஜுரம் அதிகமாகிப் பிதற்றிக் கொண்டே இருந்தவன் அப்புறம் அமைதியாகி விட்டான். எந்தவித சலனமும் இல்லை.


டாக்டரின் முகத்தில் கவலைக் கோடுகள் தெரிந்தன.

''அதிகமான ஜுரம் காரணமா 'கோமா'' ஏற்பட்டு விட்டது. இப்படியேதான் கிடப்பார். எப்போ நினைவு திரும்புமோ சொல்ல முடியாது....'' என்று தயங்கினார்.

மேற்கொண்டு அவளே புரிந்து கொண்டாள். அடிவயிற்றில் சுரீரென்று பயம் கிளம்பியது. கண்கள் குப்பெனப் பொங்கின.

''நோ நோ... கோமா கேஸிலே எல்லோருமே பெயிலியராயிடறதில்லே. பிழைக்கிறதும் உண்டு. தைரியமா இருங்க. நர்ஸ்





ஏற்பாடு பண்ணி யிருக்கேன். டியூப் மூலமா வேளா வேளைக்குக் குளுகோஸ் ஏற்றச் சொல்லி யிருக்கேன். பயப்படாதீங்க. நான் தினம் வந்து பார்க்கிறேன்.'' டாக்டர் ஆறுதல் கூறிவிட்டுப் போய் விட்டார்.

வேணி இடி விழுந்தது போல் உட்கார்ந்து விட்டாள். ஒரு வருஷமோ என்னமோதான் ஆகிறது சுந்தரை

மணந்து. அதற்குள் இப்படி ஒரு சோதனையா?

வேணி பிரபல 'வேணி எண்டர்பிரைஸஸ்' முதலாளியின் ஒரே மகள். கல்லூரி மாணவியாகச் சிறகடித்துப் பறந்துகொண்டிருந்தவளைச் சட்டென அடங்க வைத்தது சுந்தரின் அறிமுகம்.

''என் பேர் சுந்தர். எம்.ஏ. எக்கனாமிக்ஸ். மிஸ்டர் ராஜசேகர் என்னை வரச் சொல்லி அனுப்பினார்.'' வாசலில் நின்று பணிவாக, அடக்கமாகக் கூறிய அந்த வாலிபனைப் பார்த்துப் பிரமித்துத்தான் போனாள் வேணி.

''அடேடே! சுந்தர்! வாப்பா. ஏன் வாசல்லேயே நிக்கறே? உள்ளே வாயேன். இது என் ஒரே மகள் வேணி. யாருனு பாக்கிறியா வேணி? நம்ப கம்பெனிக்குப் புதுசா மானேஜர் போடப் போறேன்னு சொன்னேனே இவர்தான். நல்ல புத்திசாலிப் பையன். ஆனால் ஏழை. பாவம். அப்பா புரோகிதரா இருக்கார்..'' கலகலவெனப் பேசிக் கொண்டே மாடியிலிருந்து இறங்கி வந்தார் ராஜசேகர்.

வேணிக்கு அந்தக் கடைசி வார்த்தை மட்டும் பிடிக்கவில்லை. இத்தனை அழகான, படித்த வாலிபன், கடைசியில் ஏழைப் புரோகிதரின் மகன்தானா? மனம் சட்டென விழுந்தது.

ஆனாலும் அவளால் மனத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. ஆபீஸ் விஷயமாக அடிக்கடி வீட்டுக்கு வரும் சுந்தரைப் பார்க்காமலோ பேசாமலோ இருக்க முடியவில்லை. அவன் வீட்டுக்கு வராத நாட்களில் தவித்துத்தான் போனாள்.

ராஜசேகர் இதை ஜாடையாகக் கவனித்தார். சுந்தர் புத்திசாலியான பிள்ளை. பெண்ணுக்கு ஏற்றவன்தான். தனக்குப் பிறகு கம்பெனியையும் கவனித்துக் கொள்வான் என்ற நம்பிக்கை எழ, சுந்தரின் பெற்றோரைப் போய்ப் பார்த்துக் கல்யாணப் பேச்சை எழுப்பினார்.

அவர்களுக்கு முதலில் மகிழ்ச்சியாக இருந்தாலும் லேசாக ஒரு ஏக்கம் எழத்தான் செய்தது. அத்தனை பெரிய பணக்கார வீட்டுப் பெண் தங்களை மதிப்பாளா? பங்களாவில் வாழ்ந்தவள் குடிசைக்கு வருவாளா? திருமணம் நன்றாகவே நடந்தது. அவர்களின் சந்தேகமும் பலிக்கவே செய்தது.

வேணி ஒரு நாள் கூட சுந்தரின் வீட்டுக்கு வரவும் இல்லை, அவர்களைத் தன் மாமனார், மாமியாராக ஏற்றுக் கொள்ளவும் இல்லை. எப்பொழுதும்போல் தன் பங்களாவிலேயே வசதியாக இருந்தாள். சுந்தரும் மாமனார் வீட்டோடு குடியேறிவிட்டான்.

சொல்லி வைத்தாற்போல் மூன்றும் மாதமே, தன் பெண்ணையும் கம்பெனியையும் பொறுப்புள்ள ஒருவனிடம் ஒப்படைத்து விட்டோம் என்ற நிம்மதியிலோ என்னமோ காரில் உறவினர் கல்யாணத்துக்குச் சென்று கொண்டிருந்த ராஜசேகரும் அவருடைய மனைவியும் விபத்துக்குள்ளாகி உயிர் நீத்தனர்.

அந்த அதிர்ச்சியிலிருந்து மீளவே வேணிக்கு நான்கு மாதம் ஆயிற்று. பிறகு ஒருவாறு தேறிக் கிளம்புவதற்குள் கணவனுக்கு இப்படி ஒரு சோதனை ஏற்பட்டு விட்டது. அவளுடைய நெருங்கிய தோழிகள் வந்து பார்த்துவிட்டு ஆறுதல் தெரிவித்து விட்டுப் போனார்கள்.

''சொல்றேனென்னு தப்பா நினைக்காதே வேணி! உனக்கு இங்கே மனசளவிலே துணையாக இருக்கக் கூட ஒருத்தரும் இல்லே. அப்பா அம்மாவுக்கு அந்தக் கதி ஆகிவிட்டது. உன்னோட மாமனார், மாமியாரை வேணா இங்கே கொண்டு வந்து வச்சுக்கோயேன்.'' பக்கத்து வீட்டு மாமி தயங்கித் தயங்கிக் கூறினாள்.

சுட்டெரிப்பதைப் போல் பார்த்தாள் வேணி. ''எதுக்கு? அந்தத் தரித்திரங்கள் ஒண்ணும் இங்கே வேண்டாம். நான் அவுங்க குடிசைக்குப் போய்இருக்காமே, அவங்க பிள்ளையை இங்கே அழைச்சுண்டு வந்துட்டேன்னு ஏற்கனவே அவங்களுக்கு எரிச்சல். ஒருவேளை அவங்க வயிறெரிஞ்சு போட்ட சாபத்தாலேதான் அவருக்கு இப்படி ஆயிடுத்தோ என்னமோ.'' என்று பொரிந்து தள்ளினாள். மாமி வாயடைத்து விட்டாள்.

நாட்கள் ஓடின. சுந்தரின் நிலையில் எந்த வித மாற்றமும் இல்லை. விழித்த நாராக, எலும்பும் தோலுமாகக் கிடந்த அவனைப் பார்க்கவே வயிற்றைப் பிசைந்தது அவளுக்கு.

கோயில்களுக்கெல்லாம் பணத்தை வாரி இறைத்து அபிஷேகங்கள், பூஜைகள் செய்யச் சொன்னாள். நவக்ரஹ ஹோமங்கள், மிருத்யுஞ்ச ஜபம் என்று வீடு நாள்தோறும் மந்திர கோஷமாகவே இருந்தது.

சுந்தர் ஜடமாகவே கிடந்தான்.

''வேணி! நான் சொல்றதை நீ கோபப் படாமே கேட்கணும்.'' பக்கத்து வீட்டு மாமி மீண்டும் வந்தாள்.

மாங்கல்யம் பிழைக்க எதைச் செய்யவும் அவள் தயாராக இருந்தாள்.


''வேணி! பெரியவா ஆசீர்வாதம் பலிக்காமப் போகாது. அதிலும் சுமங்கலி வாயிலேயிருந்து வர வார்த்தை தேவ வாக்கு. ஒரு வெள்ளிக் கிழமை பெரிசா சுமங்கலிப் பிரார்த்தனை பண்ணு. நூறு சுமங்கலிகளைக் கூப்பிட்டுப் புதுப் புடவை கொடுத்துச் சாப்பாடு போட்டு, தாம்பூலம் கொடுத்து, அத்தனை பேரையும் நிக்க வெச்சு நமஸ்காரம்

''இந்த ஃபேனிலேதான்சார் ஆபீஸ்பாய் ஒருத்தன் தூக்கு மாட்டிக்கிட்டு செத்துப் போனான்!''

''ஐயையோ - அப்புறம்?''

''இப்போ 'ஆபீஸ் பேயா' உலவிக் கிட்டிருக்கான்!''

அ. இராமதாஸ்



மீண்டவள் மாண்ட கதை!



பிரசன்ன வதனிக்கு அப்போது வயது நான்கு. கார் பிரயாணத்தின்போது, கார் விபத்துக்குள்ளாகி பிரசன்னாவின் நினைவு பறி போனது. 'கோமா' நிலையில் இருபத்தி மூன்று நாட்கள் இருந்தாள்.

நரம்பியல் டாக்டர் பி. ராமமூர்த்தியின் நிபுணத்துவம் காரணமாய்ப் பிரசன்னாவின் நினைவு திரும்பியது. என்றாலும் வலப் பக்கத்தில் உணர்வு மரத்த நிலை. அதைக் குணப்படுத்தப் பரதம் கற்றுக் கொள்ளச் சொன்னார் டாக்டர் ராமமூர்த்தி!

மெல்ல மெல்ல கையசைத்து, காலசைத்து பிரசன்னா பரத நாட்டியம் கற்கத் தொடங்கினாள். சிறுமியின் வாழ்க்கை கலாக்ஷேத்ரா ருக்மிணி தேவியின் அரவணைப்பால் மலரத் தொடங்கியது.

பரதநாட்டியத்தில் சிறப்பாகத் தேர்ச்சி பெற்று கலாக்ஷேத்ராவின் நாட்டிய நாடகங்களில் பிரசன்னா முக்கிய பாத்திரங்களை ஏற்றாள். இந்திய நாட்டியங்களின் பெருமையை விளக்கும் விதமாகத் தபால் தலைகளை இந்திய அரசு வெளியிட்டபோது பரத நாட்டிய முத்திரையை வெளிப்படுத்த பிரசன்னாதான் தேர்ந்தெடுக்கப்பட்டாள். விரைவிலேயே கலாக்ஷேத்ராவின் ஒரு நாட்டிய ஆசிரியையாகவும் பொறுப்பு ஏற்றாள்.

பிரசன்னவதனி, சிறந்த எழுத்தாளர் சிவபாத சுந்தரம் அவர்களின் புதல்வி.

காலன் கடைசியில் சிரித்து விட்டான்! பிரசன்னவதனி அண்மையில் வீட்டிலேயே ஒரு விபத்தில் இறந்தாள். - பி.ரங்கநாயகி

பண்ணு. அத்தனை சுமங்கலிகளையும் அட்சதை போட்டு ஆசீர்வாதம் பண்ணச் சொல். அதிலே சுந்தர் கண்டிப்பா பிழைச்சுருவான்.''

வேணிக்குக் கண்கள் பனித்தன. பேசுவது மாமியா அல்லது கோவிலிலுள்ள அம்பாளா?

அடுத்த வெள்ளிக்கிழமை பங்களா கலகலவென்றிருந்தது. ஹால் கொள்ளாமல் சுமங்கலிகள். வரிசை வரிசையாக சிவப்புப் பட்டுப் புடவை அணிந்து உட்கார்ந்திருந்த சுமங்கலிகளுக்கு கூரைப் புடவை சரசரக்கத் தன் கையாலேயே பாயசம் பரிமாறினாள் வேணி.

சாப்பாடு முடிந்து வாய் நிறைய வெற்றிலையும் கழுத்து நிறையச் சந்தனமும் கால்களில் பூசிய நலங்கு மஞ்சளுமாக சளசளத்துக் கொண்டிருந்த பெண்களை ஒன்றாக நிற்க வைத்து நமஸ்காரம் செய்தாள் வேணி.

சடசடவென அட்சதையும் மலருமாக அவள் தலையிலும் முதுகிலுமாக விழுந்தன.

''தீர்க்க சுமங்கலியா இரு.''

''மஞ்சள் குங்குமம் நிலைச்சு இருக்கணும்''

என்று விதவிதமான ஆசிகள் ஒன்றோடொன்று கலந்து அவள் செவியில் மோதின. உணர்ச்சிப் பெருக்கில் நெஞ்சு விம்மியது.

அன்று இரவு வழக்கம் போல் பார்க்க வந்த டாக்டர் முகத்தில் ஒளி மின்னியது. ''நான் அப்பவே சொல்லலையா அம்மா! கோமா கேஸ் எல்லாமே ஃபெயிலியர் ஆகாதுன்னு. மூச்சு சீரா வரத் தொடங்கி விட்டது. இன்னும் ரெண்டு நாளிலே உடம்பிலே அசைவு ஏற்படும். இனிமே படிப் படியாகக் குணமாயிடும். கிட்டத்தட்ட மரணத்தோட எல்லைக்கே போய் மீண்டு வந்துட்டார் சுந்தர். இனி பயமே கிடையாது.'' டாக்டர் உற்சாகமாகக் கூறினார்.

வேணி மத்தியானம் ஆசி வழங்கிய நூறு சுமங்கலிகளையும் நன்றியுடன் நினைத்துக் கொண்டாள். அந்த அம்மாளில் ஒருவராவது மனமார வாழ்த்தினார் என்பது நிச்சயமாகி விட்டது.

கோவிலில் அம்பாள் சன்னதியில் நின்று புலம்பிக் கொண்டிருந்தாள் பார்வதி. இடுப்பில் சிவப்புப் பட்டுப் புடவையும், காலில் நலங்கு மஞ்சளும், கழுத்தில் சந்தனமுமாக:

''அம்பிகே! பராசக்தி! என் பிள்ளை சுந்தரை பிழைக்க வைச்சுடு தாயே! மனசார நாட்டுப் பெண்ணை ஆசீர்வாதம் பண்ணணும் என்கிறதுக்காகவே ஒளிஞ்சு, மறைஞ்சுண்டு நூறு சுமங்கலிகளோட ஒரு சுமங்கலியா போய் ஆசீர்வாதம் பண்ணிட்டு வந்துட்டேன். நல்ல வேளை அவள் என்னைக் கவனிக்கல்லை. நூறு சுமங்கலிகளிலே யார் ஆசீர்வாதம் பலிக்கிறதோ இல்லையோ என் ஆசீர்வாதம் கண்டிப்பா பலிக்கணும் அம்மா!''

அந்த அகில லோக நாயகி பார்வதியைப் பார்த்துப் புன்னகைத்தாள்.

அந்தி வானத்துக்குத்தான் எத்தனை அழகு! அதன் அழகை வர்ணிக்கும் கவிஞனாக இல்லையே என்று நான் பலமுறை ஏங்கியதுண்டு. கிணற்றடியில் உள்ள துவைக்கும் கல்லில் உட்கார்ந்துகொண்டால் மாலை நேரம் போவதே தெரியாது. இதோ, கொல்லையில் உள்ள தென்னை மரத்துக்குப் பறவைகள் திரும்பிவிட்டன. அவை எழுப்பும் அந்தப் பரபரப்பான சப்தத்தைக் கேட்டுக்கொண்டே இருக்கலாம். கொய்யா மரத்தடியில் கண்ணாமூச்சி விளையாடிக் கொண்டிருந்த இரு அணில்களும் சோர்ந்து வெவ்வேறு திசையில் ஓடிவிட்டன. சற்றைக்கெல்லாம் எல்லா ஓசையும் அடங்கி ஒரு வகையான அமைதி. இதுவரை சுற்றிலும் எழுந்த சப்தத்தில் லயித்திருந்த என் மனம் அதன் மௌனத்தில் கரைந்தது.

''சௌம்யா... இராத்திரி சமையலுக்கு ஏற்பாடு செய்யாமல் அங்கே என்ன இருட்டில் செய்திண்டிருக்கே?'' மாமியாரின் குரல் என்னை இவ்வுலகத்துக்குக் கொண்டு வந்தது.

''இதோ வந்துட்டேம்மா!'' — நான் உள்ளே சென்றேன். சமையல் முடித்து வெளியே வரும் பொழுது சுவர்க் கடிகாரம் ஏழு அடித்து ஓய்ந்தது.

கூடத்தில் உஷாவும் குமாரும் படிப்பதாகப் போக்குக் காண்பித்துக் கொண்டிருந்தனர். என் தலையைக் கண்டதும் குமார் என்னிடம் ஓடிவந்தான். ''அம்மா! எங்க டீச்சர் 'அவர் பேமிலி' கட்டுரை எழுதிட்டு வரச் சொன்னாங்க. எழுதிக் கொடு!''

''அதெல்லாம் முடியாது. நீ எழுதிட்டு வா நான் திருத்திக் கொடுக்கிறேன்'' என்று நான் என் வகுப்பு 'காம்போஸிஷன்' நோட்டுக்களைத் திருத்துவதில் முனைந்தேன்..

''அம்மா!'' மறுபடியும் குமாரின் குரல்!

''என்னடா?''


''உஷா பழைய நோட்டில் எழுதியிருக்காளாம். அவங்க டீச்சர் திருத்தியிருக்காங்க. நான் பார்த்து எழுதிக்கவா?''

''போடா போக்கிரி, நோட்டும் பென்சிலும் கொண்டு வா. சொல்லித்தரேன்''என்று கூறவும் குதித்துக் கொண்டு ஓடினான். திருத்திக் கொண்டிருந்த நோட்டை மூடிவிட்டு அவனுக்குச் சொல்லிக் கொடுப்பதில் முனைந்தேன். வாசலில் அவர் ஸ்கூட்டர் சப்தம் கேட்டது.

''அப்பா வந்துட்டாங்க'' — குழந்தைகள் இரண்டும் சிட்டாகப் பறந்தன.

''என்ன குட்டிகளா! படிப்புக்கு மட்டமா, படிச்சிங்களா'' என்று கேட்டவாறு உள்ளே குழந்தைகளுடன்சென்றுவிட்டார்.

அடுத்த அரை மணி நேரத்தில் மாமியாரின் குரல் அடுப்படியிலிருந்து



அறிமுக எழுத்தாளர்



எனது பள்ளி, கல்லூரிப் படிப்பு மதுரை, கன்னியாகுமரி மாவட்டங்களில். கல்லூரியில் எனது பாடம் ஆங்கில இலக்கியம். தற்போது சின்மயா வித்யாலயாவில் ஆசிரியை. எனது முதல் கதை ஒரு தோப்பில் தனிமரம்!

- என். எஸ். சௌந்தரம்

கேட்டது. ''ஏம்மா, சௌம்யா, தட்டுப் போடலையா?'' நான் உள்ளே சென்றேன்.

சாப்பாடு போட்டுக் குழந்தைகளைப் படுக்க வைத்து வேலையை முடித்து, மீதமிருந்த காம்போஸிஷன் நோட்டுக்களுடன் படுக்கை அறைக்குள் நுழையும்பொழுது அவர் புரட்டிக் கொண்டிருந்த பைலை மூடி வைத்தார்.

என் கையிலிருந்த நோட்டுக்களைப் பார்த்ததும், ''என்ன மேடம் இன்னும் வேலை முடியலையா? அப் டு நைன் தர்ட்டி தி டைம் இஸ் யுவர்ஸ். ஆஃப்டர் தெட் இட் இஸ் மைன்!'' என்று அவற்றை வாங்கிக் கீழே வைத்தார்.

சுவர்க் கடிகாரம் பதினொன்று அடித்து ஓய்ந்தது. பக்கத்தில் அவர் அயர்ந்த உறக்கம். தோட்டத்துப் பவள மல்லிகையின் மணம் என்னை ஈர்த்தது. மெதுவாக ஜன்னல் திரைகளை ஒதுக்கினேன். ஜன சஞ்சாரமற்ற வீதி கண்ணுக்குத் தெரிந்தது. மாலையில்தான் அந்த வீதியில் எத்தனை நெரிசல்! 'ஜனக் கூட்டம் நிறைந்த வீதியிலும் வீதி மாத்திரம் தனிமையில் தவிக்கிறது' என்ற தாகூரின் கவிதை என் நினைவுக்கு





போட்டிக் கதை–11

'தோப்பில் ஒரு தனிமரம்'

'ஊர்மிளா'

வந்தது. எனக்கு நினைவு வந்ததன் காரணம் என்ன? என்னிடமிருந்து வெளிப்பட்டது ஒரு நீண்ட பெருமூச்சு.



ஒரு ஜோரும் விவாதம்!
நாடாளுமன்ற ஜனநாயகமா? அல்லது ஜனாதிபதி ஆட்சிமுறையா? என்பது பற்றி நாடளாவிய விவாதம் நடைபெற வேண்டும் என்று பிரதமர் கூறியுள்ளார்!
"அம்மா, தாயே...!"
"ஒண்ணுமில்லேப்பா!"
"பிச்சை கேக்கலீங்க!... ஜனாதிபதி ஆட்சி முறை வேணுமா? நாடாளுமன்ற ஜனநாயகம் வேணுமான்னு வீட்டுக்கு வீடு கேட்டுக்கிட்டு வரேன்!"
மொராதாபாத் கலவரம்
பயில் விபத்து
கற்பழிப்பு
துப்பாக்கி சூடு
ஜனாதிபதி ஆட்சி முறையா? நாடாளுமன்ற ஜனநாயகமா? என்ற சர்ச்சையில் இரு கும்பல்களுக்கிடையே மோதல் ஏற்பட்டதால் போலீஸார் துப்பாக்கிச் சூட்டில் 20 பேர் ...
கலப்பட வியாபாரி: "என்னக் கேட்டா... ஜனாதிபதி ஆட்சி முறையிலே பாதி..., பார்லிமெண்ட் ஜனநாயகத்திலே பாதி... அதாவது 'ஜனாதிபதி ஆட்சிக்குட்பட்ட பார்லிமெண்ட் ஜனநாயக ஆட்சி'ன்னு கலப்படமா இருக்கணும்!"
ஜனாதிபதி ஆட்சி முறையா? பார்லிமெண்ட் ஜனநாயகமா? உங்க கருத்தைத் தெரிஞ்சுக்கிட்டுத் தான் உங்க பொண்ணு கழுத்திலே தாலி கட்டுவேன்!
"இல்லே...இல்லே...ஜனாதிபதி ஆட்சி முறைதான் வேணும்!... இன்னும் மணிக்கணக்கில், நாள் கணக்கில் நான் விவாதிக்க முடியும்!"


''நான் இன்னா ஸார் பண்ணுவேன்! ஜனாதிபதி ஆட்சி முறையை ஆதரிக்க நீ பேசினதைக் கேட்டுட்டு ஸோடாவுக்கே கோபம் தாங்காம உம் மேலே 'புஸ்'ஸுனு வெடிக்குது!''
''அய்யாவ்! நம்ம வீட்டைப் பொறுத்த வரைக்கும் ஜனாதிபதி ஆட்சி முறைக்கு நீ ஒத்துக்கிட்டு தான் ஆகணும்!''
''ஜனாதிபதி ஆட்சி முறை வேணுமா? பார்லிமெண்ட் ஜனநாயகம் வேணுமா? சொல்லுங்க ஸார்!''
''இரண்டு நாளா பட்டினி! நீ இப்படி கம்னு குந்தினிறு....''
''ஏ கஸ்தே! இன்னா 'பசி' 'பசி'ன்னு புலம்பினு கிறே? ஜனாதிபதி ஆட்சியோ? பார்லிமெண்டு ஆட்சியோன்னு யோசி! பசி தன்னாலே பறந்து போகும்!''

அத்தியாயம் 16

ஜெயா உள்ளூறத் துவண்டு போனாள்.

கணவர், மாப்பிள்ளை ராஜாமணி கடந்த சில வருடங்களாக அவளுடைய பேச்சுக்கு மதிப்புக் கொடுப்பதில்லை. மூத்த பிள்ளை வக்கீல் நோட்டீஸ் அனுப்பி அப்பனைக் கோர்ட்டுக்கு இழுத்தது குடும்பத்தையே பாதித்த அவமானம்தான். ஆனால் அவளால் கணவருடைய கோபத்தில் பங்கு கொள்ள முடியவில்லை. அவளுடைய பாசம் பிள்ளையிடம் அடிக்கடி இழுத்தது. கோவை



சென்று பார்த்து வந்தாள். இது மாப்பிள்ளையின் ஆத்திரத்தை அதிகமாக்கியது. ஜி. எச்.சில் அவள் அவரைச் சந்தித்த போது வாங்கிக் கட்டிக் கொண்டாள். அதுவும் முந்நூறு ரூபாய் சம்பளம் வாங்கும் ஒரு தற்காலிகப் பணிப் பெண் முன்னிலையில்.

அதன் பிறகு அர்ஜுனைத் தேடிச் சென்ற போது, அவன் ஒரு பரட்டைத் தலை 'அழுக்கு'க் கிழவியைக் கையால் பிடித்து அழைத்துப் போன காட்சி கண்றாவியாகப் பட்டது. அப்பன் ஒரு மாதிரி என்றால் பிள்ளை இன்னொரு மாதிரி. இந்த அர்ஜுன் மீது அவள் எப்படியெல்லாம் ஆசையைக் கொட்டி இருக்கிறாள்? ஆனால் அவன் அவளை லட்சியமே செய்வதில்லை. அப்பாவுடன் சேர்ந்து கொள்கிறான்.

மல்லிகா வேறு அவளை முறியடித்தாள். தான் எவ்வளவு தூரம் அழைத்தும் அந்தப் பெண் மசியவில்லை. அவனுடன் காரில் ஏறி வீட்டுக்கு வர முடியாது என்று கூறிவிட்டாள்.

ஆத்திரம் பொங்க அவள் வீட்டை அடைந்தாள். வேம்பு மாமி மீதுதான் கொட்டிக்கொள்ள முடியும்.

''வா ஜெயா!'' என்றாள் வேம்பு மாமி.

GH

பி.வி.ஆர்

''ஏண்டி வேம்பு, இங்கே என்ன நடக்கிறது?'' என்று கேட்டாள் ஜெயா.

''எல்லாம் அப்புறமாச் சொல்றேன். முதல்லே என்ன சாப்பிடறே?''

''இப்ப எனக்கு வர்ற ஆத்திரத்திலே முதல்லே உன்னைக் கடிக்கக் குதறணும் போல இருக்கு....''

''செய். அதான் எனக்கும் நல்லது. அடி நாளிலிருந்து இங்கே இடுப்பை ஒடிச்சுண்டு வேலை செய்யறேன். பாரு. அதிலே என் தோல் கடினமாயிடுத்து. அதைக் கடிக்கக் குதறு.''

''ஒரு ஸாரிடானும் காப்பியும் கொண்டு வா.''

ஜெயா சோபாவில் உட்கார்ந்தாள். அருகே ஒரு டீப்பாயின் மேல் ஒரு புதுப் புடவையும் சோளியும் டவலும் கிடந்தன.

வேம்பு ஷிபான் புடவையோ உள் பாவாடையோ அணிய மாட்டாள். பதினெட்டு முழம். இவையெல்லாம் அந்த மல்லிகாவின் துணிகள்.

வேம்பு காப்பியுடன் பிரவேசித்தாள். மாத்திரையையும் கொண்டு வந்தாள்.

திடீரென்று ஜெயாவுக்கு ஓர் எண்ணம் அவளுடைய தலைவலிக்கிடையிலும் உதித்தது.

''ஏண்டி, இதென்ன கண்றாவி?'' என்று டீப்பாயைச் சுட்டிக் காட்டினாள்.

வேம்பு மாமிக்குப் புரிந்தது. ஆனால் முட்டாளாக நடித்தாள்.

''எதைச் சொல்றே ஜெயா?''

''கோழி முட்டை மாதிரி கண்ணை வைச்சுண்டு கேட்கிறியே.... இதோ இந்தப் புடவை....'' காப்பியுடன் ஸாரிடானை முழுங்கினாள்.

''ஏன், உன் பிள்ளையைக் கேட்கிறது தானே?''

''அவனை இன்னும் நான் பார்க்கவில்லை.''

''அவன் கூட ஒரு சிறுக்கி ஒய்யாரமா ஓடி ஆடறாளே, அவளையாவது பார்த்தாயா?''

''அப்படியா? யார் அவள்?''

ஜெயா அழகாக, முகம் கோணாமல் பொய் சொல்லுவாள். சாதுரியம் என்று வரும் போது அவள் மனத்தில் என்ன இருக்கிறது என்று வேம்பு மாமியால் கூட அறிந்து கொள்ள முடியாது.

''மல்லிகான்னு பேரு. மாப்பிள்ளைக்கு சிசுருஷை செய்ய உன் பிள்ளை அவளை அமர்த்தியிருக்கான். நீ இங்கே வந்தாப் படுத்துப்பியே அந்த ரூமில்தான் அவ படுத்துக்கிறா....''

''அவன்?''

''புரியலே?''

''என் பிள்ளை எங்கே படுத்துக்கிறான்னு கேட்டேன்.... இதுகூடப் புரியவில்லையா வேம்பு?''

''வர வர என் புத்தி மழுங்கிண்டு வர்றது ஜெயா. உன் பிள்ளை எனக்குத் தெரிஞ்சவரை இந்த வீட்டிலே ஏதும் வைச்சுக்கலே..... வெளியே எப்படியோ?''

''அது எப்படி உனக்குத் தெரியும்?''

''எது?''

''இந்த வீட்டிலே ஏதும் வைச்சுக்கலேனு?''

''அவ ரூம்லே உள் தாப்பாள் போட்டுண்டா. நான் வெளியே பூட்டிக் கதவண்டை படுத்துண்டேன். அர்ஜுன் ஒரு தடவை கூட ராத்திரி ரூம் பக்கம் வரலே... ஆனால் மெட்ராஸ்லே ஆயிரம் ஓட்டல் இருக்கு.''

''எப்படி இருப்பா அந்தப் பெண்?''

''எப்படீன்னு கேட்டா?''

''லட்சணம்.''

''சொல்ல மனசு வரலே. ஆனா இந்த வேம்பு பொய் சொன்னான்னு வரப்படாது. தங்க விக்ரகம் மாதிரி இருக்கா. அழகு சொட்டறது. அர்ஜுன் பிடிச்சாலும் பிடிச்சான். நல்ல சுந்தர்வப் பெண்ணாப் பார்த்துத்தான் பிடிச்சிருக்கான்.''

''உனக்கு அட்வகேட் குஞ்சிதபாதத்தைத் தெரியுமா வேம்பு?''

''தெரியாது.''

''தெரியாதா? அங்கேயிருந்து போன் கூட வந்திருக்குமே?''

''வந்தது. ஆனா குஞ்சிதபாதம் பண்ணலே. அவர் மனைவி பண்ணினாள். இன்னும் கொஞ்ச நேரத்திலே இங்கே வந்தாலும் வருவா.''

''அர்ஜுனுக்கு அவா வீட்டுப் பெண்ணைப் பார்க்கிறோம்.''

''அப்படித்தான் இருக்கணும்னு நானும் நினைச்சேன். ஆனா உன் பிள்ளை தலையை ஆட்டணுமே.''

''உனக்கு என்ன தோணறது, வேம்பு?''

''தலையை ஆட்ட மாட்டான்னு.''

''ஏன், இந்தப் பெண் இருக்கான்னா?''

''எனக்கென்னமோ அப்படிப் படறது... ஜெயா!''

''என்ன?''

''நீ ஒரு ஏழை வீட்டுப் பெண் மருமகளா வந்தாக் குத்தமில்லேன்னு நெனைச்சா, இந்த மல்லிகாவையே ஏத்துக்கலாம். என்னைக் கண்டா அர்ஜுனனுக்குப் பிடிக்கலேன்னாலும் எனக்கு அவன் மேலே எரிச்சலோ வெறுப்போ இல்லே. அவனுக்கு மல்லிகா ஏத்த பெண். மாப்பிள்ளைக்கும் பிடிச்சிருக்கு போலிருக்கு.''

''எனக்கு நீ உபதேசம் செய்யறியா?''


''செஞ்சா நீ சும்மா இருப்பியா ஜெயா.''

''குஞ்சிதபாதம் பெரிய அட்வகேட். அவர் மனைவி சுந்தரி போன்லே பேசியே என்னோடு பிரண்டாயிட்டா. அவ பெண்

''ஹலோ! சிஸ்டர்!

''வாட்! மிஸ்டர்?''

''ஸாரி! சிஸ்டர்!''



பாமா எதுவரையிலும் போய்ப் படிச்சிருக்கான்னு நினைக்கிறே? அமெரிக்கா.''

''இதையெல்லாம் நீ பெரிசா நினைக்கிறே, ஜெயா. உன் பிள்ளை துச்சமாத் தூக்கி எறிவான்.''

''அதையும் பார்க்கிறேன்.''

''அதோ சுந்தரியே வந்துவிட்டாள். நான் உள்ளே போறேன். என்னைக் கண்டால் அவளுக்குப் பிடிக்காது.''

''உன்னைக் கண்டா யாருக்குத்தான் பிடிக்கும். வர வர எனக்கே...''

வேம்பு உள்ளே போய்விட்டான். ஜெயா சுந்தரி வரும் வரையில் சோபாவிலேயே அழுந்தி உட்கார்ந்துவிட்டு அவள் ஹாலினுள் பிரவேசித்ததும்எழுந்திருப்பது போலப் பாவனை செய்துவிட்டு மேலும் அழுந்தி உட்கார்ந்தாள்.

''வாங்கோ, சுந்தரி.''

''நமஸ்காரம். நீங்க அப்படிக் கூப்பிடக் படாது'' என்ற சுந்தரி நின்றாள்.

''ஏன் தப்பாப் பேசிட்டேனா?''

''ஆமாம், நீங்க எவ்வளவு பெரிய வீட்டிலே பிறந்து புகுந்தவள், என்னைப் போய் நீங்கன்னு....''

''எங்க ஜில்லா கோயமுத்தூர். அங்கே மரியாதை கொஞ்சம் அதிகம். வயசோ அந்தஸ்தோ மரியாதைக்குக் குறுக்கே வர்ற தில்லே. ஆனா உன் மனசு கஷ்டப்படறது எனக்குப் பிடிக்கலே. உட்கார்!''

சுந்தரி உட்கார்ந்தாள். உள்ளூறப் பல்லைக் கடித்துக் கொண்டாள். உட்கார்! என்ன தோரணை!

''என்ன சாப்பிடறே?''

''இப்பத்தான் வீட்டிலேந்து புறப் படறப்போ கொஞ்சம் லஸ்ஸி குடிச்சேன். அவர் எப்படி இருக்கார்?''

''நான் இன்னும் ஜி. எச்.சுக்குப் போகலே. சௌக்கியமா இருக்கார்னு சொன்னா.'' ஜெயா தனது சாதுரியத்தை நம்பினாள். பொய் பொல பொலவென்று உதிர்ந்தது.

''நாளைக்கு நல்ல நாள்.''

''ஆமாம்.''

''ஜாதகம் இப்படி அப்படின்னு இல்லே. கனஜோராப் பொருந்தி யிருக்கு...''

''செவ்வாய் தோஷம்னு...''

''அதுதான் ரெண்டு பேருக்கும் இருக்கே. ஒண்ணை ஒண்ணு அடிச்சுண்டு போயிடும். அப்புறம் பிள்ளையும் பெண்ணும்தான் மிஞ்சுவா.''

''ஆமாம்.''

''நாளைக்கு மத்தியானம் மூணு மணிக்கு நீங்க பிள்ளையையும் அழைச்சுண்டு வந்தேன்னா.....''

''வந்துடறேன். அர்ஜுன் போன் பண்ணினான். மூணு மணி நேரம் நோட்டீஸ் கொடு அம்மான்னான்'' என்றாள் ஜெயா. உள்ளூற பயம் அப்போதே பிடித்துவிட்டது. அர்ஜுன் பிடிவாதம் பிடித்தால்?

''ரொம்பச் சந்தோஷம். பெண்ணைப் பிடிக்காதுன்னு வராது.''

''இந்தக் காலத்திலே நாம எதையும் நிச்சயமாச் சொல்றதுக்கில்லே.... அர்ஜுன் ஒரு மாதிரி.''

''ரொம்பக் கெட்டிக்காரர்னு கேள்விப் பட்டேன். மாப்பிள்ளையை அவன்தான் முழுக்க முழுக்கக் கவனிச்சுக்கிறானாமே?''

''அப்படித்தான் சொல்றா.''

''என் பெண் அமெரிக்காவுக்கு ரெண்டு மூணு தடவை போயாச்சு...''

''இப்பத்தான் ரொம்பப் பேர் எங்கெல்லாமோ போயிட்டு வர்றாளே. அது சரி, உன் பெண் அமெரிக்காவைப் பத்தி ஏதாவது பத்திரிகையில் எழுதினாளோ?''

''இல்லே. ஏன்?''

''கண்ட கண்டவனெல்லாம் வெளி நாடு போயிட்டு வந்ததும், நம்ம நாட்டிலே இல்லாத பெருமைகளெல்லாம் அங்கே இருக்கிறதாக் கதைக்கிறா. ஃபைவ் ஸ்டார் ஓட்டல்லே இருபத்தெட்டாவது மாடி ரூம்லே தொண்டை வரை குடிச்சுட்டு ஊரைப் பார்க்காமலே எழுதற புள்ளிகள் இருக்கிறார்களே... நான் ஒரு பயணக் கட்டுரை விடறதில்லே. பாதிப் பேர் பயணக் கதைன்னு போட்டு எழுதிடலாம்.''

''நன்றாச் சொன்னீர்கள்.''

''எதுக்கும் உன் பெண்ணும் ஒரு தொடர் எழுதி அனுப்பட்டும். உன் புருஷர் நிச்சயமா ஒண்ணு ரெண்டு பத்திரிகைக்கு வக்கீலா இருப்பார்....''

''என் பாமாவுக்கு சிபார்சுன்னு பிடிக்காது.''

''அதே போறுமே. இதை வைச்சுண்டு ஒரு பேட்டியே கொடுக்கலாம்... ஆமாம், நீ ஒண்ணும் சாப்பிடவில்லையே... வேம்பு, வேம்பு.....''

''ஏதும் வேண்டாம், மாமி.''

''ஏன் என்னை மாமின்னு கூப்பிடறே, சுந்தரி? ஜெயான்னு கூப்பிடு... நாம சம்பந்தி ஆகப் போற வாய்ப்பு இருக்கு.''

''பெரியவள்....''

''அதுக்காக?.... வேம்பு, சுந்தரிக்கு டிபன் காப்பி கொண்டு வா.... என்ன டிபன்?''

''வெல்ல அவலும் புளி உப்புமாவும்.''

''ஏண்டி எனக்குப் பிடிச்சதைப் பண்ணினே. சுந்தரிக்குப் பிடிக்குமோ என்னமோ?''

''அப்படிச் சொல்லாதீர்கள் ஜெயா. உங்களுக்கு என்ன பிடிக்கிறதோ அது எனக்கும் பிடிக்கும்.''

''சரிடி... அவளுக்கும் பிடிக்குமாம். ஒரு பிளேட்லே ஸ்பூன் போட்டுக் கொண்டுவா.''

வேம்பு உள்ளே சென்றாள். 'வெல்ல அவல்! புளி உப்புமா! வேண்டுமென்றே எனக்குப் பிடிக்காத இரண்டு ஐட்டங்களைப் பண்ணித் தொலைத்திருக்கிறாள். அர்ஜுனுக்கு இது இரண்டும் பிடிக்கும் என்று பண்ணியிருக்கிறாள். இருக்கட்டும் இந்தச் சுந்தரி ஒரு பிளேட் கொட்டிண்டு போகட்டும். அப்புறம் வேம்புவைக் கிழிக்கப்போடறேன்.'

''என்ன, உங்களுக்குள்ளே ஏதோ பேசிக்கிறேள்!''

''ஒண்ணுமில்லே, சுந்தரி. ஊர்லே வீடு நிறைய அவல் கொட்டிக் கிடக்கு. வீட்டிலே இடிச்ச அவல்! ஒரு மரக்கால் கொண்டு வராமல் போனேனேன்னு மண்டையில் அடிச்சுக்கிறேன். உங்க வீட்டுக்குக் கொஞ்சம் அனுப்பியிருக்கலாம் இல்லையா!'' வார்த்தைகள் பிரவாகமாக ஓடிவந்தன.

• • •

'சங்கராபரணத்'தைப் பார்த்து, ஓட்டலில் இரவு உணவையும் முடித்துக்கொண்டு ஹபிபுல்லா சாலையை அடைந்தபோது இரவு மணி பத்தரை.

''உங்க அம்மா என்னை விழிகளாலேயே எரிக்கப் பார்த்தாள். முடியலே. இப்ப என்ன நடக்கப் போறதோ!'' என்றாள் மல்லிகா.

''பேசாமல் இரு. நான் பார்த்துக்கொள்றேன்!''

''போறுத குறைக்குப் பொன்னியும் வந்தாளாம்னு வேம்பு மாமி வேறே இருக்கா...அவளும் தூபம் போட்டிருப்பா.''

''பேசாம இருக்க மாட்டே?''

கார் வீட்டை அடைந்தது.

''குடுகுடுன்னு இறங்கி முன்னால் நடக்காதே மல்லிகா. என் பின்னால் வா!''

ஜெயா இரண்டு கால்களையும் சோபாவின் மேல் போட்டுக் கொண்டு சப்புணமாக உட்கார்ந்திருந்தாள். அர்ஜுனைக் கண்டதும் கண்ணாடியைக் கழற்றிக் கையில் வைத்துக் கொண்டாள். புத்தகம் மடியில் விழுந்தது.

''ஹலோ அம்மா... எப்ப வந்தே?'' அர்ஜுன் தாவிக்கொண்டு அருகில் சென்றான்.

''அப்பா சொல்லலியா?''

''உன் பேச்சையே அப்பா எடுக்கலே.''

''உன் பின்னாலே இருக்காளே அவள் சொல்லலியா?''

''ஓ, மல்லிகாவைச் சொல்றியா..' சொன்னா. ஆனா நீ எப்ப மெட்ராஸுக்கு?''

''அதிருக்கட்டும். நான் ஒண்ணு கேட்கணும்.''

''ஒண்ணு என்ன, ஆயிரம் கேளு, அம்மா''

''ஆனா உங்கிட்டேதான் பேசணும்.''

''ஓ இவ கேக்கப்படாதுங்கறியா, ஓ.கே! மல்லிகா, நீ காதைப் பொத்திக்கோ!''

''என்னடா அர்ஜுன், எல்லாம் விளையாட்டாப் போச்சா உனக்கு? உன் அப்பா



ஹாய் டார்லிங்!

என்றுமே ஆபீஸ் பக்கம் வராதவள் அன்று தன் மானேஜர் கணவனுடன் ஆபீஸ் வந்து கொண்டிருந்தாள். வழியில், மானேஜருடைய அழகிய செக்ரெட்டரி அவரைப்பார்த்து 'ஹாய் டார்லிங்' என்றாள். பின்னர் மானேஜருடைய மனைவியைப் பார்த்து, அவள் யார் என விசாரித்தாள். அதற்கு அந்த மனைவி சொன்னாள்; ''நான் தான் மிஸஸ் டார்லிங்''

-எஸ். சந்திரசேகர்

இவ முன்னாலே என்னை அவமானப்படுத்தினர். இப்ப, நீ இவ முன்னாலே....''

சொன்ன ஜெயா திரும்பிப் பார்த்தாள்.

மல்லிகா வாசலை நோக்கி நடந்து போய்க்கொண்டிருந்தாள்.

ஒரு கணம் அர்ஜுன் திகைத்தான்.

அவன் பின்தொடர்ந்தான்.

''மல்லிகா....''

அவன் ஒரே எட்டில் தாவினான். இருட்டில் அவளுடைய உருவம் மட்டுமே தெரிந்தது.

அவளுடைய தோள்பட்டையைப் பிடித்து இழுத்தான். அவள் கீழே விழப் போனாள்.

அவன் தாங்கிக்கொண்டான்.

''மல்லிகா....''

''நான் போகிறேன், அர்ஜுன்.''

''ஓகே. நீ போ. ஆனா இப்ப இல்லே. இந்த ராத்திரி வேளையில் இல்லே.''

''நான்....நான்....''

''எனக்குப் புரியறது, மல்லிகா. ஆனா, நீயும் என்னைக் கொஞ்சம் புரிஞ்சுக்கோ. உனக்கு நான் இருக்கேன் என்கிறதைப் புரிஞ்சுக்கோ.

மல்லிகாவை அணைத்துக் கொண்டு அவன் நடந்தான்.

ஆனால், இருட்டில் ஜெயாவின் கண்ணுக்குத் தெரியவில்லை. (தொடரும்)

பாதம் படாத பழநி தரிசனம்

பரம்பொருள் வீற்றிருக்கின்ற பழநி மலையில் நமது பாதம் படக்கூடாதென நினைக்கிற பாலசுப்பிரமணியக் கவுண்டர், உடலால் உருண்டு (அங்கப் பிரதட்சணம்) மலை ஏறி படித்தபடியே பழநி ஆண்டவரைத் தரிசிக்கிறார். பின் உருண்டவாறே மலையினின்றும் இறங்குகிறார்.

ஐப்பசி, கார்த்திகை, மார்கழி ஆகிய மூன்று மாதங்கள் கடுமையான வைராக்கியத்துடன் விரதமிருந்து, தை முதல் நாள் இரவு 3 மணிக்கு பழநி அடிவாரத்திலிருந்து பாதம் படாத பழநி தரிசனத்தை மேற்கொள்ளும் இந்தப் பக்தர், மலையின் மேல் சென்று பழநி ஆண்டவரைத் தரிசித்து, திரும்பவும் அடிவாரத்தை அடைய எடுத்துக்கொள்ளும் காலம் நான்கு மணி நேரமே!

தரிசனம் நிறைவெய்தியதும் பழநி சாது மடத்தில் பல்லாயிரக் கணக்கான ஏழைகளுக்கு அன்ன தானம் செய்யும் பாலசுப்பிரமணியக் கவுண்டர், கோயம்புத்தூர் கிராஸ் கட் சாலையில் வாழும் பெரும் செல்வந்தர் ஆவார். 'பைசன் பாலசுப்பிரமணியம்' எனக் கோவைப் பகுதியில் குறிப்பிடப்படுகிறார்.

—குன்றக்குடி பெரிய பெருமாள்

✖ படிகளில் அங்கப் பிரதட்சணம்.



✖ பழனியாண்டவரைத் தரிசிக்கிறார்.


✖ தரிசனம் முடிந்து பக்தர்களுக்குத் தீ நீறு வழங்குதல்.







பிலிப்ஸ் மெயின்ஸ் ரேடியோக்கள்
உங்கள் குடும்பத்திற்கேற்ற, மற்ருெரு நல்ல குடும்பம்


ப்ரைடு
■ சாலிட் ஸ்டேட் 3-பாண்டு மெயின்ஸ் ரேடியோ.
ரூ. 675/-*





மைனர்
■ 2-பாண்டு மெயின்ஸ் ரேடியோ-2000 mW உயர்வான அவுட்புட் கொண்டது.
ரூ. 460/-*





ப்ரெஸ்டிஜ்
■ சாலிட் ஸ்டேட் 4-பாண்டு மெயின்ஸ் ரேடியோ.
ரூ. 875/-*

மேஜர்
■ 4-பாண்டு சாலிட் ஸ்டேட் ரேடியோ உயர்ந்த ஒலியைத் தரும்வகையில் அமைக்கப்பட்ட டீக் வினியர்டு வுடன் காபினட்.
ரூ. 1075/-*

* சில்லறை விற்பனை உச்சவிலை, எக்ஸைஸ் வரி உள்ளிட்டது. மாநில விற்பனைவரி மேலும் இதர தலவரிகள் தனி.


மேலானதை உங்களுக்கு வழங்குவதே எங்கள் நோக்கம்.

பைகோ எலக்ட்ரானிக்ஸ் அண்ட் எலக்ட்ரிகல்ஸ் லி.

பிலிப்ஸ்

CASPP-717-104 TM

ஆபத்தான நேரங்களில் நீங்கள் அவசர செலவுகளை சமாளிக்க முடியுமா?



நாளை நடப்பதை எண்ணிப் பாருங்கள். என்றும் போல, மற்றொரு நாளாக அது கழிந்து விடலாம். யார் கண்டது? எதிர்பாராத சம்பவங்களும் நடக்கலாம்— நோய்வாய்ப்படுதல், விபத்து, பில்களுக்கு அவசரமாக பணம் கட்டவேண்டிவருதல் —இவைபோல.

இம்மாதிரி நேரங்களில், ஆபத்தான நிலைமைகளைச் சமாளிக்க உங்களுக்கு பணம் தேவைப்படுகிறது. தடைப் பட்டுப்போன, கிடைக்காத பணம் இவற்றிற்கு பயன்படாது.

விரைவில் சுலபமாக உங்கள் கைக்கு வந்தடையக்கூடிய பணம்தான் தேவை. நீங்கள், பாங்கில் ஏன் சேமிக்கவேண்டும் என்பதற்கு நல்ல காரணங்கள் உண்டு. நீங்கள் விரும்பும் போதெல்லாம் பணம் எடுக்கவும், கடன் பெறவும் முடியும். மிகவும் அவசரமாக தேவைப்படும்போது, சுலபமான வழியில் நீங்கள் பணம் பெற முடியும்.

எனவே, இன்றே சேமிக்கத் தொடங்குவீர்—நாளைய அவசரச் செலவுகளுக்கு. பப்ளிக் செக்டர் பாங்கில் சேமிப்பீர்—இந்தியாவில் உள்ள 30,000-த்திற்கும் மேற்பட்ட கிளைகள் ஏதாவதொன்றில்.

ஜாயின்ட் பப்ளிசிட்டி கமிட்டி
பப்ளிக் செக்டர் பாங்குகள்

உறுப்பினர் பாங்குகள்

பப்ளிக் செக்டர் பாங்குகள்–
எங்கிருந்தாலும் என்றும் உங்கள் வாழ்வோடு இணைந்தவை.

‘தற்கால தமிழ் இலக்கியம் மற்றும் பண்பாட்டிற்கான காலாண்டு இதழ்’ என்கிற வர்ணனையுடன் ‘¼’ என்கிற விநோதப் பெயரைத் தாங்கி ஒரு பத்திரிகை வெளிவந்துள்ளது. ஆசிரியர் மலர்மன்னன். அவரைச் சந்தித்து உரையாடியபோது அவர் வெளியிட்ட சில கருத்துக்கள்:



‘¼’

‘‘கனமான விஷயங்களை ஆழ்ந்து விரிவாகப் படிக்க வேண்டும் என்கிற எதிர்பார்ப்புடன் சில வாசகர்களாவது இருப்பார்கள். ஆனால் தமிழில் அத்தகைய வாசகர்களின் தேவையைப் பூர்த்தி செய்யும்படியாக ஒரு பத்திரிகைகூட இல்லை. தமிழ்ப் பத்திரிகைகள் கனமான விஷயங்களை எழுதாமல் இல்லை. ஆனால் அவற்றை மிகவும் மேலெழுந்தவாரியாக, வாசகர்களைக் கஷ்டப்படுத்தக் கூடாது என்கிற ஒரே நோக்கோடு மட்டுமே வெளியிடுகிறார்கள்.

வெளி நாட்டில் வசிக்கும் வாசகர்களுக்கும் மேற்குறிப்பிட்ட பத்திரிகைகளே போவதால் தற்காலத் தமிழ் எழுத்தின் பரிமாணமே இவ்வளவுதான் என்று அவர்கள் உள்ளங்களில் ஒரு கணிப்பு ஏற்படுகிறது.

கல்வியாளர்கள் சிலப்பதிகாரம், மணி-மேகலையைத் தாண்டித் தமிழ் இலக்கியத்தை இனம் கண்டு அங்கீகரிக்க முன்வர மாட்டேன் என்கிறார்கள். தற்காலத்திய இலக்கியப் படைப்பாளிகளும் கல்வியாளரைப் புறக்கணிக்கிறார்கள். சிறப்பான தற்கால தமிழ்ப் படைப்புகளும் இலக்கியமாக ஏற்றுக் கொள்ளப்படும்போது கல்வியாளர்கள் மூலமாகத்தான் மாணவர்களுக்குப் போதிக்கப் படவேண்டிய நிலையில் இருக்கிறோம். ஆகவே இவ்விரு சாராருக்கும் இடையே ஒரு பாலம் தேவைப்படுகிறது.

இந்தக் காரணங்களை அடிப்படையாகக் கொண்டு தொடங்கப்பட்டதுதான் இப் பத்திரிகை.’’

கே. பத்திரிகையில் ஆசிரியர் மலர்மன்னன் என்று காணப்படுகிறது. உங்கள் ஒருவரால் அங்கீகரிக்கப் படுவதுதான் இலக்கியப் படைப்பு என்பதும், உங்கள் ஒருவரால் மட்டுமே தமிழ் இலக்கியப் படைப்புகளை இனம் கண்டுகொள்ள முடியும் என்பதும் எவ்விதத்தில் சரியானதாகக் கருதுகிறீர்கள்?

பதில்: நான்தான் இதனைச் செய்ய முடியுமென்றோ, நான் குறிப்பிடுவது மட்டும்தான் இலக்கியம் என்றோ நான் மார் தட்டிக்கொள்ளவில்லை. தமிழில் இம் மாதிரிப் படைப்புகள் வெளியாகப் பத்திரிகைகள் இல்லை. ஏதாவது செய்தாக வேண்டும் என்று எனக்குத் தோன்றியது. இரண்டாண்டுகள் மனத்தில் அசைபோட்டு இவ்வாண்டு பிப்ரவரி மாதம் முதல் தீவிரமாக ஈடுபட்டுச் செயலில் இறங்கியுள்ளேன். ‘கல்கி’யில் சில மாதங்கள் முன்பு நான் எழுதிய ஒரு சிறு கதையிலும் இதனைக் குறிப்பிட்டுள்ளேன். சுமார் இருபது ஆண்டுகளாக ஏராளமாகப் படித்தும், எழுதியும் வருகிறேன். இத்தகைய அனுபவத்தால் எவை இலக்கியப் படைப்பாக ஏற்றுக்கொள்ளத் தகுதியுடையவை, எவை அத்தகுதிக்கு ஏற்காதவை என்று பிரித்தறியும் தகுதி எனக்கு இருப்பதாக நான் நம்புகிறேன். என்னைப் பற்றி என்னோடு பழகியவர்கள் அறிவார்கள்!

கே. முதல் இதழைப் பார்த்தேன். ஏதோ கல்லூரி பாட புத்தகத்தைப் போன்றுதான் உள்ளதே தவிர பத்திரிகையாக நினைக்கத் தோன்றவில்லையே! லக்ஷ்மி கண்ணன் எழுதிய சிறுகதை தவிர மற்ற கதை கட்டுரைகள் எல்லாம் படிப்பவர்களைக் கஷ்டப்படுத்தவே எழுதப்பட்டவை போல் தோன்றுகின்றனவே?

பதில்: இப்பத்திரிகைக்கும் பாடப் புத்தகத்துக்கும் இடையே ஏராளமான வித்தியாசம் உண்டு. இப்பத்திரிகையில் வெளியான கட்டுரைகள் ஆராய்ச்சி பூர்வமாகப் புதிய அணுகுமுறையில் எழுதப்பட்டவையாகும். ஜனரஞ்சகமான பத்திரிகை அல்ல இது. ஆழமான விஷயங்களைப் படிக்க மனப் பக்குவம் வேண்டும். அத்தகைய மனப் பக்குவம் உடையவர்களுக்குப் படிப்பது கஷ்டமாகத் தெரியாது.

கே. 96 பக்கங்களே உள்ள இப் பத்திரிகைக்கு ரூ 15 என்று விலை வைத்துள்ளீர்களே! அதிகமில்லையா?

பதில்: ‘க்வார்டர்’ சைஸ் பத்திரிகை இது. பாதுகாக்கப்பட வேண்டியது என்பதால் உயர் ரகத் தாளில் அச்சிடுகிறேன். கனமான அட்டை உண்டு. ஆயிரம் பிரதிகளே அச்சாகின்றன. படைப்பாளிகளுக்கு சன்மானம் உண்டு. சிறப்பான படைப்புக்கு ஆண்டுதோறும் பரிசளிக்கும் எண்ணம் கொண்டுள்ளேன். எல்லாவற்றுக்கும் மேலாக இது தனிமனிதன் முயற்சி. கணக்குப் போட்டுப் பார்த்தால் இவ் விலைப்படி ஆயிரம் பிரதிகள் விற்றாலும் முதலாண்டில் சுமார் ஆறாயிரம் ரூபாய் வரை நஷ்டம் வரும். இதுவரை பத்திரிகையில் விளம்பரம் வெளியிடுவது பற்றி முடிவு செய்யவில்லை. எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்று சொல்ல முடியாது.

கே. முதல் பிரதி வெளியாகி இரண்டாவது அச்சுக்கும் போகும் நிலையில் இருப்பதாகக் குறிப்பிட்டீர்கள். வரவேற்பு எப்படி?

பதில்: எதிர்பார்த்த வரவேற்பு உள்ளது. மனத்துக்கு மகிழ்ச்சியாக உள்ளது. எத்தனையோ தனி மனிதர்கள் தாமாக முன்



கொண்டாடுவது ஏன்?

ஐன்ஸ்டைனும் சார்லி சாப்ளினும் ஒரு திரைப்பட விழாவுக்குக் காரில் சென்று கொண்டிருந்தனர். அப்போது பொது மக்களில் பலர் அவர்கள் ஏறிச்சென்ற காரை வழி மறித்து இருவருக்கும் மலர்ச் செண்டு அளித்துத் தங்களது ரசிகத் தன்மையைக் காட்டிக் கொண்டனர். ஐன்ஸ்டைனுக்கு இவர்கள் ஏன் இப்படித் தம்மைக் கொண்டாடுகிறார்கள் என்று புரியவில்லை. சார்லி சாப்ளினை விளக்கம் கேட்டார். அவர் கூறிய பதில்:

''மக்கள் உங்களைக் கொண்டாடுவதின் காரணம் அவர்களில் யாருக்குமே உங்களைப் புரிந்து கொள்ளும் சக்தி இல்லாததுதான். என்னைக் கொண்டாடுவதின் காரணம் என்னைச் சகலரும் நன்றாகப் புரிந்து கொண்டிருப்பதுதான்.''

-மேக்ஸ் முல்லர் பவனில் ஒரு கண்காட்சி வாசகம்
தகவல்: ''சங்கபுத்திரன்''

வந்து ஆண்டுச் சந்தா கட்டி சந்தாதார் ஆகியுள்ளனர். தமிழ் நாட்டில் வசிக்கும் தமிழர்களை விட மேல் நாடுகளில் உள்ள தமிழ் அறிந்தோரிடையே வரவேற்பு அதிகம். French Institute of Indologyல் இப்பத்திரிகையை அவர்கள் மொழியில் மொழிபெயர்க்க முன்வந்துள்ளனர்.

கே. முயற்சியில் வெற்றி பெற முடியும் என்ற நம்பிக்கை உங்களுக்கு இருக்கிறதா?

பதில்: எவ்வித சுயநோக்கமும் இல்லாத ஆத்மபூர்வமான ஓர் உந்துதலுக்கு இலக்காகி இதனைத் தொடங்கியுள்ளேன். இத னால் எனது சொந்தப் படைப்பின் பரிணாமம் பாதிக்கப்படும். ஆனாலும் நல்ல விஷயம் ஒன்று செய்ய வேண்டும் என்று தோன்றிவிட்டதும், அதனைப் புறக்கணித்தல் தர்மமாகாது என்பதால் இப் பத்திரிகை ஆரம்பித்துள்ளேன். இது தோல்வியுற்றால் நஷ்டம் வாசகர்களுக்கும் தமிழ் எழுத்துலகுக்கும் தான்!

பேட்டி: **பி. ரங்கநாயகி**

'!' மலர் மன்னன் வெளியீடு. ஆசிரியர்: மலர் மன்னன். 25, நல்லதம்பி முதலி தெரு சென்னை-600005. தனிப் பிரதி ரூ. 15. ஆண்டுச் சந்தா ரூ. 50.



கழுகு பதில்கள்!

✠ பி. வி. சீனிவாசன், சென்னை-28

கே. "சட்டம் ஒரு கழுதை." கழுதை சட்டத்தின் நண்பனா?

ப: ஆம். 'சட்ட'மாக இருப்பதை விட அது மேலல்லவா?

✠ கருணாமணாளன், திருநெல்வேலி


கே. பஜ்ஜி, சொஜ்ஜி என்கிறார்களே, சொஜ்ஜி எப்படி இருக்கும்?

ப: சொஜ்ஜி என்பது ரவா கேசரியைக் குறிக்கும். சூஜி என்றால் இந்தியில் ரவையைக் குறிக்கும். சூஜிதான் சொஜ்ஜி ஆகிவிட்டது.

✠ ஸ்ரீ. செல்வகுமார், சென்னை-62

கே. தாலிக்குத் தங்கம் கிடைக்காத நேரத்தில் மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்கு 15 லட்சம் செலவில் தங்கத்தேர் தேவை தானா?

ப: தாலிக்குத் தங்கம் கிடைக்கவில்லை என்று யார் சொன்னது? 1200 ரூபாய்விலைக்கு எத்தனை சவரன் வேண்டுமானாலும் கிடைக்கிறதே!



✠ பரமையம் மௌலானா, பேட்டை நகரம்

கே. தமிழ் நாட்டு முஸ்லிம் எழுத்தாளர்களில் நல்லவர் உங்களைக் கவர்ந்த எழுத்தாளர் யார்?

ப: மதம், ஜாதி இவைகளின் அடிப்படையில் எந்த எழுத்தாளரையும் படித்ததில்லை. அப்படிப் படிப்பதோ பாராட்டுவதோ தவறு என்பது என் கருத்து.

✠ மு. பாஸ்கரன், புதுவை-5

கே. பொருட்பாலுக்காகக் காமத்துப் பாலை விற்பவர்களைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: இது அறத்துப் பாலுக்கு அப்பால் செய்யப்படும் பாவங்கள்.

✠ சுதா மணிமேகலை, வேலூர்

கே. போளி செய்வதற்கு வெல்லத்திற்குப் பதில் சர்க்கரை சேர்த்துச் செய்யலாமா?

ப: வெல்லம் போட்டால்தான் போளி; இல்லாவிட்டால் போனி.

✠ சித்திரலேகா, கோவை

கே. 'மீரா'வின் கவிதைகளை ரசிப்பது உண்டா?

ப: உண்டு. சமீபத்தில் ரசித்த சில வரிகள்:

ஒரு பாவை வயிற்றினிலே
கருவாய் வளர்த்துக்
கணக்காக சுமந்து
மாதத்தில் காணும்
மணிக் 'குழவி' மூன்றெழுத்தே
மோதும் பிறமொழியின்
மோகத்தால் சில தாயர்
'அம்மா' வென்றக் குழவி
அழைப்பதனை விரும்பாமல்
'மம்மி' யென்றே சொல்லப்
பயிற்றுவிப்பார்; புரியாமல்
அம்மி யெனக் கூறும்!



அது சரிதான். குழவிக்கு ஓர் அம்மிதானே அன்னை?

✠ மதுரைக்கண்ணன், அம்பாலா

கே. என் நண்பன் பார்ப்பதற்கு நன்றாகத்தான் இருப்பான். இதுவரை எந்த பெண்ணும் அவனைப் பார்த்துச் சிரித்தது கூட கிடையாது. ஏன் அப்படி?

ப: உங்கள் நண்பருக்குச் சொன்னது எனக்கும் பொருந்தும். ஹூம். (பெருமூச்சு!)

✠ மைதிலி கண்ணன், வேலூர்

கே. மகிழ்ச்சியாக மணவாழ்க்கை அமைவதற்கு வழி என்ன?

ப: சமீபத்திய ரீடர்ஸ் டைஜஸ்டில் போட்டிருக்கிறார்கள். இதற்கு ஒரு சின்ன ஆலோசனை: வீடு பற்றி எரிந்தால் தவிர மற்ற சமயங்களில் ஒருவரைப் பார்த்து ஒருவர் சப்தம் போடாதீர்கள்!

✠ ரேணுகா மனோகர், பங்களூர்-27

கே. அசட்டுத்தனமாகப் பேசி உங்களை யாராவது போரடித்தால் எப்படி சமாளிக்கிறீர்கள்?

ப: வைரத்தை வைரத்தால் அறுக்க வேண்டும் என்பது எனக்குத் தெரியுமே!

✠ பி. தங்கவேலு, மைசூர்-4

கே. பத்திரிகையாளர்களுக்குள்ளேயும் நிறைய கெகிக இருப்பதாக பராசக்தியார் கூறியுள்ளாரே அப்படியானால் உமக்கும் தெரிந்திருக்க வேண்டுமே. ஏதாவது ஒன்று...

ப: பராசக்தி கூறியிருப்பது உண்மைதான். ஊரில் உள்ளவர்கள் யாரைப் பற்றி வேண்டுமானாலும் கிசுகிசு எழுதலாம். ஆனால் பத்திரிகையாளரைப் பற்றி எழுத முடியாது. இவர் ஒரு கிசுகிசு எழுதினால் அவர் பதிலுக்குத் தன் பத்திரிகையில் வெளுத்து வாங்குவார். பத்திரிகை என்னும் ஆயுதம் இல்லாதவர்களைத்தான் கிசுகிசுவால் தாக்க முடியும். ஆகவே, எக்ஸ்க்யூஸ் மீ ப்ளீஸ்!

பரிசு பெறுபவர்:

பி. தங்கவேலு
630, 2வது கிராஸ் சாம்ராஜா டபுள் ரோடு,
மைசூர்-570004

அத்தியாயம் 2

பார்வதம் அந்த வயதில் ரொம்ப அழகாக இருப்பாள். அளவெடுத்தாற்போல் உடல் அமைப்புகள். ஒரு கம்பீரமான வளர்ச்சி! நன்ருக உடை உடுத்தி, கேசத்தைக் கோதி, 'பன்' வைத்துப் பின்புறம் கட்டிவிட்டால் கல்லூரி விரிவுரையாளர் போல் இருக்கும்.

அந்த முப்பத்தைந்து வயதிலும் தன் மேனி அழகையும் கட்டுக் கோப்பையும் ரொம்பவும் கவர்ச்சிகரமாக அவளால் பராமரித்துக் கொள்ள முடிகிறது. சில சமயம் சுமங்களா, அவளுடைய துல்லியமான அழகில் மயங்கிப்போய் அவளையே பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்த நாட்களும் உண்டு.

அப்பாவுக்கும் அவளுக்கும் ஒரு பெரிய சண்டையும், அதன் பின் நிகழ்ந்த நிரந்தரமான பிரிவும் சுமங்களாவைத்தான் ரொம்பவும் பாதித்தது. காரணம்: பர்வதத்தைக் கண்டால் அவளுக்கு ரொம்பவும் பிடிக்கும்.

ஓர் அந்நியோன்யமும் அன்பும் காட்டிய பெண் திடீரென்று வீட்டுக்கு வருவதை நிறுத்திக் கொண்டு விட்டாளே...! அந்த ஏக்கம் அவளை மிகவும் பாதித்தது. தகப்பனாரிடமும் கேட்க முடியவில்லை. பர்வதத்திடம் கேட்கவும் என்னவோ போல் இருந்தது.

பல நாட்களுக்குப் பிறகு...

பர்வதத்தைக் காண வேண்டும் போல் இருக்கவே தாளுகவே ஒரு நாள் அவள் வீட்டுக்குப் போய்ப் பார்த்தாள்.

அங்கே...

பர்வதம்....

தனியாக இல்லை.

எப்படி அப்பாவுடன் ஒரே படுக்கையில் நெருக்கமுடன் உட்கார்ந்து பேசிக்கொண்டிருப்பாளோ....

அதே போல.....

வேறு ஒருவருடன்!

சுமங்களா வெளியே நின்று கவனித்தாள்.

பர்வதம் எவ்வித அதிர்ச்சியும் அடையவில்லை. அவளை அன்புடன் தன்னருகே உட்கார வைத்துக் கொண்டாள்; முகத்தை அழுந்தத் துடைத்து விட்டாள். கலைந்திருந்த கேசத்தை அவிழ்த்து எண்ணெய் தடவி வாரி, சிக்கெடுத்துப் பின்னிவிட்டாள்.

அவளுடைய உடை அழுக்காக இருந்தது.

''இதை இங்கேயே கழற்றிப் போடு. நல்லா சோப்புப் போட்டுத் துவைச்சு எடுத்து வைக்கிறேன். நாளைக்கு வந்து எடுத்துக்கிட்டுப் போ...'' என்று சுமங்களாவிடம் சொல்லிவிட்டு ''இந்தா... ரெடிமேட் கடையிலே இதுக்குப் பொருத்தமா ஒரு செட் பாவாடை சட்டை எடுத்துக் குடு. இது போட்டுக்கிட்டுப் போகட்டும். இது என்னோட மவ!'' என்ருள், அருகில் இருந்த புதியவனைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே.

அதன் பிறகு சுமங்களா அந்த வீட்டின் பக்கமே போகவில்லை. வேறு ஒரு புதியவனுடனான பர்வதத்தின் புதிய நெருக்கத்துக்குண்டான அர்த்தங்கள் அன்று அவளுக்குப் புரியவில்லை. எனினும் அதில் உள்ள வெட்கப்படக் கூடிய அம்சம் ஒன்று மட்டும் புரிகிற மாதிரி இருந்தது — அவ்வளவுதான்.





ராதா கல்யாண பஜனை ஒலி...

மடத்தின் விஸ்தாரமான வெளிப்புறத் திண்ணையில் அவள் உட்கார்ந்திருந்தாள்.

உள்ளே,

இரண்டு சிறுவர்களுக்கு ராதாகிருஷ்ணு வேஷம் போட்டுப் பௌராணிகர்கள் பாடுவதும் சிறுவர்கள் உடன் பாடுவதும்.... பெண்கள் கும்மியடித்துச் சுற்றுவதுமாக இருந்தனர்.

கடந்த சில ஆண்டுகளாகவே அவள்தான் ராதா வேஷதாரியாகவோ கிருஷ்ணுகவோ அவதாரம் போட்டுக் கொண்டிருக்கிறுள்.

தந்தை இறந்து பத்து நாட்கள் கூட ஆகவில்லை. எனவே அவள் அந்தக் கேளிக்கையிலிருந்து ஒதுங்கியிருந்தாள். என்ருலும் அந்தக் கேளிக்கையில் உள்ள ஈடுபாட்டினுல் பெரிய மடத்தின் வெளிப்புறத் திண்ணையில் கண்ணீர் வழிய விட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

அப்பொழுதுதான் பார்வதம் வந்தாள். ராதா கல்யாண உற்சவத்துக்குத் தன் காணிக்கையாக இரண்டு மரக்கால் அரிசி ஒரு வீசை வெல்லம், மற்றும் எண்ணெய், நெய் ஆகியவைகளை மடத்தினுள் கொடுத்துவிட்டுப் பார்வதம் வெளியே வந்தபோது, அழுத வண்ணம் தாழ்வாரத்தின் ஒரு கோடியில் கமங்களா உட்கார்ந்திருந்ததைப் பார்த்துவிட்டு, அவளை அழைத்துக்கொண்டு தன் வீட்டுக்கு வந்தாள்.


கமங்களாவின் பின்னணி வாழ்க்கை என்பது தந்தையால் பாழடிக்கப்பட்ட வாழ்க்கையாக அமைந்து விட்டது. ஓர் இயல்பான குடும்பப் பெண்ணுக்கு இருக்க வேண்டிய கண்ணியமான பின்னணியாக அது இல்லாமற் போய்விட்டபடியால் அவள் கேட்பாரற்றவளாகவும் பின்பு யாராலும் ஆதரிக்கப்படாதவளாகவும், அன்பு காட்டப்படாதவளாகவும் போன பின்பு பார்வதத்தின் அனுதாபத்தை மட்டுமே பெற முடிந்தது.

அப்பொழுது அது தேவைப்பட்டது; அவசியப்பட்டது. வேறு வழியில்லை. வெய்யிலுக்கும் மழைச் சாரலுக்கும் வாசல் தாழ்வாரத்தில் ஒதுங்கி நிற்பது போல நின்றவள் அவள்.

பார்வதம் அவளை வளர்த்தாள்; படிக்க வைத்தாள்; ஆளாக்கினுள்; எல்லாரிடமும் 'என் மகள், என் மகள்' என்று உரிமையுடன் கூறினுள். அவள் காட்டுகிற அன்பில் களங்கம் தெரியாதபடி இருந்தாள் கமங்களா. இதற்கெல்லாம் அடிப்படையிலே உள்ள நீரோட்டத்தின் ஸ்திதி அன்று அவளுக்குத் தெரியவில்லை.

பார்வதத்தை அவள் எப்பொழுது முழுமையாகப் புரிந்து கொண்டாளோ அப்பொழுதிலிருந்தே தன்னைச் சுற்றி ஒரு வளையத்தைப் பின்னிக் கொண்டு விட்டாள்.

''உனக்கென்ன, நான் கைநிறையச் சம்பாதிக்கணும்... உன்னுடைய வாழ்க்கையும் என்னுடைய வாழ்க்கையும் பிரச்னை இல்லாமப் போவணும்... அவ்வளவுதானே?... அதுக்கு நானுச்சு. வாழ்க்கையில் ஒரு குறையும் வராமல் நான் பார்த்துக் கொள்கிறேன். எவ்வளவு பெருந்தன்மையுடன் என்னை வளர்த்து ஆளாக்கிப் படிக்க வெச்சிருக்கே! ஒரு பட்டதாரி ஆக்கியிருக்கே, என்னை! நான் பெரிய உத்தியோகத்துக்குப் போய், கை நிறையச் சம்பாதிச்சு... நீ ஆசைப்படுகிற அளவுக்கு உன்னை உயர்ந்த நிலைக்குக் கொண்டு போய் உட்கார வைக்கிறேனு இல்லையா பாரு! என்மேல் நம்



பிக்கை வைத்து என்னை என் வழியில் போக விடு!'' என்று கெஞ்சுவாள்.

அதற்கும் பார்வதம் இணங்கின மாதிரி தான் தோன்றுவாள். பிறகு அவளுடைய உபதேசம் வேறு மாதிரியாக இருக்கும்.

சில ஆண்டுகள் பார்வதம் சுமங்களாவின் தந்தையின் ஆசை நாயகியாக இருந்தாள். பிறகு அவளுக்கும் அவருக்கும் மனஸ்தாபமேற்படவே பிரிந்து போனாள். இவை சுமங்களா புரிந்து கொண்ட உண்மைகள். என்றாலும், பார்வதம் தவறான நடத்தை உள்ளவள் என்று அவள் கருதினது இல்லை.

அவள் நல்லவள், தனி மரமான வாழ்க்கையில் மற்றோர் ஆண் துணையின்றி வாழ இயலாது என்பதால் புதிய கணவனைத் தேடிக்கொண்ட விதத்தில் அதிகமான குழப்பத்துக்குள் சிக்கத் தயாராக இல்லை.

''நான் கண்டவனிடம் வாழவில்லை. முதலில் உன் அப்பனைத்தான் மலைபோல் நம்பி வீட்டை விட்டு ஓடிவந்தேன். அவன் என்னை ஆயுள் பூராவும் வைத்துக் காப்பாத்துவான் ஒருவேளை கஞ்சியாவது ஊத்துவான்னு நம்பினேன்!'' என்று கண்ணீர் விட்டிருக்கிறாள் பார்வதம்.

அப்படியிருந்தும் கூட அவளை மோசமான பெண் என்று சொல்லிவிட முடியாது. நல்ல ஆண் துணையுடன் கூடிய கண்ணியமான எதிர்கால வாழ்வை விரும்பிய அவள் விருப்பத்தில் கண்ணியக் குறைவு இருப்பதாகக் கூற முடியாது.

''பரமேஸ்வரன் பெரிய பணக்காரன்; தனியானவன். சமுத்திரம் போன்ற சொத்தில் அவன் பகுதியை மடை திருப்பிக் கொண்டு வந்து விட்டான்'' என்கிறாள்.

அவனை எப்படியாவது தன் கைக்குள் போட்டுக் கொண்டு விட வேண்டும் என்று பார்வதம் விரும்புகிறாள். இதைத் தவறு என்று எப்படிக் கூற முடியும்?

அருணாசலம் தன் வியாபாரத்தை விரிவு படுத்திக்கொள்ள ஆசைப்படுகிறார். இதையும் தவறென்று எப்படிக் கூற முடியும்?

''பஞ்சு கச்ச வேட்டி ரெடிமேடிலே தைத்தது இருக்கா?''



இதை அவர்கள் நடைமுறைக்குச் சாத்தியமாக்கிக் கொள்ளச் செய்கிற முயற்சிகள் தான் அவ்வளவு கண்ணியமானதாகப் படவில்லை அவளுக்கு.

பரமேசுவரன் பெரிய பணக்காரன். ஒண்டிக்கட்டை என்பதெல்லாம் சாதகமான அம்சங்கள்தான்.

அவனைக் கல்யாணம் செய்துகொள்ள எந்தப் பெண்ணும் தயங்க மாட்டாள்.

கன்னிமாரா நூல்நிலையத்து முன் மண்டபத்தின் முகப்பில் படிகளில் உட்கார்ந்திருந்தாள் சுமங்களா.

அதற்குப் பின்புறமுள்ள எக்மோர் பகுதியில் இருந்த பெண்கள் விடுதியொன்றில் அவளுடைய தோழிகள் பலர் குடியிருந்தனர்.

கல்லூரியில் படிப்பவர்கள், படித்துவிட்டுக் காரியாலயங்களில் வேலை பார்ப்பவர்கள் என்று பலர் இருந்தார்கள். அவர்களுடைய வாழ்க்கைப் பின்னணி ஓரளவு சுமங்களாவுக்குத் தெரியும்.

தன்னை நம்பியுள்ள குடும்பத்தைச் சேலத்தில் வைத்துவிட்டு, இங்கே சென்னையில் வேலையில் சேர்ந்து மாதம் தவறாமல் வீட்டுக்குப் பணம் அனுப்பும் அகிலா....

கல்லூரியில் சேர்ந்து இறுதியாண்டு பி. எஸ்.ஸி படிக்கும் மதுரைக்காரப் பெண் மீனாட்சி....

சென்னையில் குடும்பம் இருந்தும் அவர்களுடன் வாழாமல் தனியே இருக்கும் கல்லூரி புரொபஸர் கோமதி..

அருணாசலமும் பார்வதமும் பெரிய மனசு வைத்து சுமங்களாவை பி. எஸ்ஸி வரை படிக்க வைத்தார்கள். அதற்கு மேலும் படிக்க அவளுக்கு ஆசைதான். தன் விருப்பத்தின் பேரில் பிடிவாதமாக நின்று நிறைவேற்றிக்கொள்ள இவர்கள் என்ன பெற்றோர்களா?

நூலகத்திலிருந்து எடுத்து வந்த புத்தகத்தைக் கையில் எடுத்துக்கொண்டு எழுந்த போது கோமதி எதிரே வந்து நின்றாள்.

''நூலகத்திலிருந்து புத்தகம் எடுத்துக் கொண்டு விட்டாயா?''

''உம்...''

''நாளைக்குக் கல்லூரியில் காலேஜ்டே.... நான் அதில் பேச இருக்கிறேன்.''

''எதைப் பற்றி?''

''கல்லூரிப் படிப்புக்குப் பின் பெண்களின் வாழ்க்கை!....''

''நல்ல டாப்பிக்.''

இருவரும் பேசிக் கொண்டே எதிரே இருந்த புல்வெளியில் வந்து உட்கார்ந்தனர்.

கோமதி நல்ல அழகி. வயது முப்பதை நெருங்கிக் கொண்டிருந்த போதிலும் அவள் தன் அழகை மிகவும் கவனமாகப் பாதுகாத்துக் கொண்டிருந்தாள்.

சற்றே ஒல்லியான உருவம். பெண்மையின் பூரிப்பான வெளிப்பாடுகளில் எவ்விதக் குறையும் இல்லை. நீளமான முகம். அழகான நாசி. வெளிர் சிவப்பு. அதிகமான டிஸைன்கள் உள்ள புடவைகளை அவள்



''எனக்கு ஒரு ஜிப்பா தைச்சுத் தரணும்!''
''ஸாரி சார்! நான் மெத்தை உறை தலையணை உறை தைப்பது இல்லே.''

அணிவதில்லை. பிளேன் அல்லது சின்னச் சின்னப் புள்ளிகளாக உள்ள கட்டாவ் வாயில்களை அணிவாள். காதிலே மெல்லிய வளையங்கள் உண்டு. எப்பொழுதும் இல்லா விட்டாலும் எழுதும்போதும் படிக்கும் போதும் கண்ணாடி தேவை.

பேச்சில் வயதை மீறிய விரக்தி இருக்கும். சமுதாயக் கொடுமைகளைச் சாடுகிற பேச்சுக்கள். நிதர்சனமான கருத்துக்கள். ஆண், பெண் யாராக இருந்தாலும் அவர்களிடம் குற்றங்களைப் பார்த்த மாத்திரத்தில் சாடித் தீர்க்கின்ற ஆவேசம் எல்லாம் அவளிடம் உண்டு.

அவளுடைய வீடு சென்னையில்தான். வீடு என்றால் அவளுடைய சொந்த வீடு அல்ல. சொந்த வீடு என்று சொல்ல அங்கே யார் இருக்கிறார்கள்?

''ஒரு பெண்ணுக்குத் தாய் தந்தை இருவரும் இருந்து அங்கே அவள் வாழ்கிற போது அது அவள் சொந்த வீடு. புருஷன் இருந்து அவனுடன் வாழும்போது அது சொந்த வீடு. அவளுக்கு அவை இரண்டும் இல்லாதபோது அவள் எல்லா இடத்திலும் அந்நியமானவளே!'' என்பாள் கோமதி.

இதற்கு அவளிடத்தில் சோகமான பின்னணி ஒன்று உண்டு.

அவளுடைய பெற்றோர் இருந்தவரையில் அவள் நலன்கள் பாதுகாக்கப் பட்டன. இரண்டு தங்கைகளுடனும் இரண்டு மூத்த சகோதரர்களுடனும் பிறந்தாள்.

ஆரம்பத்தில் ஏதோ மன வெறுப்பு காரணமாகத் தனக்கு விவாகம் வேண்டாம் என்று கூறிக்கொண்டிருந்தபோது.... அவளுக்கு இளையவர்கள் எல்லாம் விவாகம் செய்து கொண்டு விட்டார்கள்.

அப்பொழுதும் அவள் சம்பாதித்துக் கொண்டுதான் இருந்தாள். பெற்றவர்கள் ஒருவர் பின் ஒருவராக மரித்த பின்னர் அவள் வீட்டிலிருந்து ஒவ்வொருவராகத் தனிக் குடித்தனம் போகத் தொடங்கி விட்டனர். அவளுடைய சம்பாத்தியம் தேவைப்பட்டவர்கள் அவளைத் தங்களுடன் வந்துவிடும்படி வற்புறுத்தினர்.

வீட்டில் அவள் சொல்வதை யாரும் கேட்கவில்லை. ஆனால், தங்கள் வீட்டின் பிரச்னைகள் ஒவ்வொன்றையும் அவளிடம் கொண்டு வந்து அவளை மையப் படுத்தப் பார்த்த போது, அந்தப் போலித்தனமான பாசம் அவளுக்குப் பிடிக்கவில்லை. அவள் அதில் சம்பந்தப்பட விரும்பவில்லை. சம்பாதிக்கின்ற மூத்த சகோதரர்கள் இருக்கும் போது தங்கைகள் அவளைச் சரண்டவந்தனர். அதிலிருந்து விடுதலை பெற விரும்பினாள்.

அவளுடைய நலனையோ, எதிர்காலம் பற்றியோ சிறிதுகூட அக்கறை காட்டாத அவர்களுக்குக் கொடுத்துத் தியாகியாக விரும்பவில்லை.

ஒரு நாள் பெட்டி படுக்கையுடன் தனியாக ஹாஸ்டலை நாடி வந்துவிட்டாள். யார் வீட்டுக்கும் அவள் போவதில்லை. இந்தத் தனிமை வாழ்க்கை ஓரளவு வேதனையாகவும் துக்கமாகவும் இருந்தது. மற்றொருபுறம் நிம்மதியாகவும் இருந்தது..

கோமதியும் சுமங்களாவும் தோழிகள். சுமங்களாவின் பி.எஸ்.ஸி இறுதி ஆண்டின் போது அவர்கள் நட்புத் தொடங்கியது. கல்லூரிப் பாடங்களில் சந்தேகங்களை நிவர்த்தி செய்துகொள்ளவும், மனம் விட்டுப் பேசவும் என்று நெருக்கமாகப் பழகினார்கள்.

கல்லூரி நாட்களில் சுமங்களாவைக் காதலித்தவர்களும் கோமதியைக் காதலித்தவர்களும் தோல்வி கண்டு திரும்பினபோது இவர்களுடைய நட்பின்பேரில் அவர்கள் ஆபாசச் சேற்றை வாரி இறைத்து விட்டுப் போனதும் உண்டு. இதனால் அவர்களிருவரின் நட்பும் கெடவில்லை. மாறாக நட்பில் இன்னும் அதிகமான இறுக்கம் ஏற்பட்டது. அது இன்றுவரை செழித்து வளர்ந்து பசுமை குன்றாமல் இருக்கிறது.

சுமங்களாவுக்குத் தாய் தந்தை இல்லை என்பதும் பார்வதம்—அருணாசலம் தம்பதிகளிடம் அவள் எப்படி எந்த நிலைமையில் வந்தாள் என்பதும் கோமதிக்குத் தெரியும். பார்வதம் அருணாசலம் தம்பதி பற்றி வெளியில் பரவலாகப் பேசப்படும் பேச்சுக்களும், தங்களுடைய சுயநலத்துக்காக அவர்கள் என்ன வேண்டுமானாலும் செய்வார்கள் என்பதும் ஊரறிந்த உண்மை!

சுமங்களாவை அவர்கள் வைத்துப் பராமரிப்பதில் ஆரம்பத்தில் வெளிப்படாத வக்ர புத்தி சிறுகச் சிறுக வெளிப்பட்ட போதுதான் சுமங்களா அதிர்ந்தாள். அவளுடைய சிநேகிதி கோமதியும் அதிர்ந்தாள்.

''அவன் பெயர் என்ன சொன்னே?''

''பரமேஸ்வரனும். பரசு என்று செல்லமாக அழைப்பார்களாம்.''

''யாருக்கெல்லாம் அவன் செல்லமாம்?''

''அதை அவனிடம்தான் கேட்க வேண்டும். அவன் நான் போகிற இடத்துக்கெல்லாம் வருகிறான். அதுதான் வேடிக்கை! பொது நூலகம், டான்ஸ் ப்ரோக்ராம்...

நான் போகிற இடம் அவனுக்கு எப்படித் தான் தெரியுமோ... எனக்குத் தெரியவில்லை''

''நீ சரியான மக்கு. உன்னைத் தேடிக் கொண்டு அவன் வீட்டுக்கு வரும்போது பார்வதம் சொல்லலாம் இல்லையா? உன் ப்ரோக்ராமை முன்கூட்டியே தெரிந்து கொள்ளும் அவள்தான் இதை அவனிடம் சொல்பவளாக இருக்க வேண்டும்.''

கோமதி இப்படிச் சொன்னபோதுதான் சுமங்களாவுக்கு ஓர் உண்மை புலப்பட்டது. அண்மைக் காலமாகத் தன்னை இம்மாதிரி நிகழ்ச்சிகளுக்குப் போகும்படி தூண்டிவிடும் பார்வதத்தின் மனப் போக்குப் புரிகிற மாதிரி இருந்தது. வெளியில் பரசு தன்னைச் சந்திக்கிறான் என்பதைத் தெரிந்து கொண்டே அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் நடிக்கிறாள்! இது ஒரு வகை நாகரிகமோ? அல்லது அனுமதியன்றி வேறென்ன?

''இதுவரை அவன் என்னைப் பல இடங்களில் சந்தித்து விட்டான்.''

''அவன் எப்படி இருப்பான்?''

''ஆளைப் பார்த்து உன்னால் ஒன்றும் நிர்மானிக்கவே முடியாது. சில நாள் காரில் வருகிறான். சில நாள் மோட்டார் சைக்கிளில் வருவான். நான் வீட்டில் இல்லாவிட்டால் நீண்ட நேரம் பார்வதத்துடன் பேசிக்கொண்டிருப்பான். நான் உள்ளே நுழைந்தவுடன் 'வா...வா... இவர் உனக்காகத்தான் காத்துக்கொண்டிருக்கிறார்' என்று கூறிவிட்டு, அவள் உள்ளே போய்விடுவாள்.'' என்றாள் சுமங்களா.

கோமதி சிரித்துக் கொண்டாள். இம்மாதிரி செய்கைகளுக்கு அவள் புரிந்து கொள்கிற அர்த்தம் சுமங்களாவுக்குப் புரியவில்லையே!

''நீ அவனை வெறுப்பதற்குத் தனிப்பட்ட காரணங்கள் இருக்கிறதா? பார்வதம் இருக்கட்டும்... நானே கேட்கிறேன். அவனை நீ விரும்பாமல் போவதற்குக் காரணம்?''

சுமங்களாவின் கண்ணில் கண்ணீர் பளபளத்தது.

''அவர் மேல் எனக்கு வெறுப்பும் இல்லை, விருப்பும் இல்லை.''

''உன் மனத்துக்குப் பிடித்திருந்தால்... உன் வாழ்வை அவனிடம் ஒப்படைக்க ஏன் தயக்கம்?''

''அந்தத் தயக்கம்கூட எனக்கு இல்லை. என்னை முழுமையாக ஒரு நல்ல மனிதன் கையில் ஒப்படைத்துக் கொள்ள நான் தயார்.''

''அவன் நல்ல மனிதனா இல்லையா என்பது தெரிய வேண்டும், இல்லையா?''

''ஆமாம்.''

''அவனை உன்னால் புரிந்து கொள்ள முடியவில்லை?''

''ஆமாம்.''

''ஒன்று செய்... நாளைக்கு நீயே வலுவில் அவனை ஏதேனும் ஓரிடத்தில் சந்திக்க வரச் சொல். மனம் விட்டுப் பேசு. அவனைப் புரிந்துகொள். பிறகு மேற்கொண்டு பார்க்கலாம்'' என்று கோமதி ஓர் உபாயத்தைக் கூறினாள். சுமங்களா அதை ஏற்றுக்கொண்டாள்.

நீண்ட நேரம் இருவரும் பல்வேறு விஷயங்களைப் பற்றிப் பேசிவிட்டுப் பிரிந்தனர்.

(தொடரும்)



அருள் வாக்கு

ரிஷிகள் தந்த பத்திரிகை

❋ வேதத்தில் இருப்பவற்றை நம் கண்ணாலும் காதாலும் யுக்தியாலும், புத்தியாலும் பரீட்சிப்பது சரியல்ல. வாஸ்தவத்தில் நம் கண்ணுக்கும் காதுக்கும் புத்திக்கும் யுக்திக்கும் எட்டாததைச் சொல்லவே வேதம் இருக்கிறது. நமக்கு நேரில் தெரிவதை நாமே தெரிந்து கொள்கிறோம். அதற்கு வேதம் என்று வேண்டியதேயில்லை. எதை ருசுவினால் நிரூபிக்க முடியாதோ, எங்கே புத்தி எட்டாதோ, அப்படிப்பட்ட பரம சத்தியங்களைத் திவ்விய திருஷ்டி உள்ள முனிவர்கள் அறிந்து வேதமாகத் தந்திருக்கிறார்கள். அந்நிய தேச விவகாரங்கள் நம் கண்ணுக்குத் தெரிவதில்லை. அங்கிருந்து வருகிற பத்திரிகைகளிலிருந்து தெரிந்துகொள்கிறோம். உடனே நம்பிவிடுகிறோம். லோகத்திலுள்ள கருவி எதனாலுமே தெரிந்து கொள்ள முடியாத விஷயங்களைத் தெரிந்து கொள்வதற்காக வேத மந்திரங்கள் என்ற பத்திரிகையை ரிஷிகள் தந்திருக்கிறார்கள். அவற்றை நம்பிக்கையின் மேல்தான் ஏற்கவேண்டும். கொஞ்சம் நம்பி ஏற்றுக்கொண்டால் தானே அதன்பலன் தெரிந்து, போகப்போக இதுவே சத்தியம் என்று நிச்சயமாக அறிந்து கொள்வோம்.

— ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சந்திர சேகரேந்திர சரஸ்வதி சங்கராசார்ய சுவாமிகள்



● உமாபதியின் அட்டைப் படத்தையும் உள்ளே 'அண்ணன் வீட்டுக் கல்யாண'த் துக்குத் தம்பியின் பூரிப்பான வரவேற்பு மடலையும் கண்டு வாசகர்களாகிய நாங் களும் பூரிப்படைந்தோம்.

எண்ணற்ற 'பாரதிப் பூக்கள்' எழிலுடன் முதல் பக்கத்தில் காட்சி தருவதைக் கண்டு மெய் சிலிர்த்துப் போய் விட்டோம்.

இராஜபாளையம் எஸ். விஜயன்

● விகடனும் வாசனும் தமிழ் மக்கள் நெஞ் சில் நீங்காத இடம் பெற்றவர்கள். அவர்களை கௌரவிக்கும் வகையில் ஜெமினி ஸ்டுடி யோவுக்குப் பக்கத்தில் உள்ள நுங்கம்பாக்கம் சாலைக்கு எஸ். எஸ். வாசனின் பெயரைச் சூட்டுவது பண்பான செயலாக அமையும். தமிழக அரசு இதற்கு ஆவன செய்யத் தமிழ் மக்கள் சார்பில் வேண்டுகிறேன்.

சென்னை-78 மா. மணி

● தலையங்கம் வழக்கத்துக்கு மாறுபடு கிறதே! என்ன நேர்ந்தது?

சென்னை-25 சிவராம நமசிவாயம்

● கார்ட்டூனில் தாக்கிவிட்டு, தலையங்கத் தில் கலைஞரைத் தூக்கிவிட்ட உமது நடு நிலையைப் பாராட்டாமலிருக்க முடியவில்லை.

சிந்தாதிரிப்பேட்டை பா. உதயா

● சென்னையிலிருந்து பெயர்த்தெடுத்து, மதுரைக்குப் போய்விடப் போகிறதோ என்ற நிலையில் இருக்கும் குதிரைச் சிலையின் மீதுள்ள வீரனின் உருவத்துக்குக் கலைஞர் கொடுத்த 'மாடல்' கல்கி எழுதிய பொன்னியின் செல் வனில் வரும் கதாநாயகன் வந்தியத்தேவனது உருவமே! கலைஞரது கலாரசனைக்கு ஓர் எடுத்துக்காட்டு.

திருச்சி-18 என். பானு

● ரொம்ப ஆச்சரியமாக இருக்கிறதே நீங்கள் கூட 2–11–80 இதழில் எம். ஜி. ஆர். அரசைக் கண்டித்துப் பூவால் அடிப்பது போன்று தலையங்கம் தீட்டி விட்டீர்களே. ஆனால் இந்திராவைத் தாக்கும்பொழுது மாத்திரம் இந்த மென்மையும் குழைவும் எங்கே போய் ஒளிந்து கொள்கின்றன?

மேலப்பாளையூர் எஸ். மகாலிங்கம்

● வெள்ளி விடுமுறை கட்டுரை படித்தேன். நாகர்கோவில் நகரில் மத்திய அரசு, மாநில அரசு ஸ்தாபனங்கள் தவிர அனைத்து தனியார் ஸ்தாபனங்களுக்கும் வெள்ளிக் கிழமைதான் விடுமுறை. புதிதாக வரும் ஒருவர் முதல் தடவையாக நாகர்கோவி லுக்கு வெள்ளிக் கிழமை வந்தால் இன்று ஞாயிறோ என்றுதான் நினைப்பார்.

திருவனந்தபுரம் எஸ். எஸ். மணி

● டி.வி.எஸ். ஸ்தாபனம் கடைப்பிடித்த எரிபொருள் சிக்கன முறையைக் கையாண் டால், நாம் போக வேண்டிய இடத்துக்குப் போய்ச் சேர முடியாது ஐயா. ஏனென்றால் அநேக வாகனங்கள் Starting trouble உடன் ஓடிக்கொண்டு இருப்பவை.

திருச்சி வ. ஜெயபாலன்

● ''முட்டிக்கப் போனாலும் மூகராசி வேண்டும். அது எனக்குச் சிட்டிகை அளவு கூட இல்லை.'' இது நான் எழுதிய 'லிப்ட்' டின் காரெக்டருக்கு மட்டுமின்றி எனக்கும் சாலப் பொருந்தும். முதன் முதலில் அச் சேறியிருக்கிற என் கட்டுரைக்கு 'கவிசா' என்ற என் புனை பெயர் தவறாக அச்சாகி யிருப்பதைப் பார்த்து நான் என் அதிர்ஷ் டத்தை நொந்துகொள்வதைத் தவிர வேறு வழி தெரியவில்லை.

சென்னை எஸ். சந்திர மௌலி

● இந்த வாரம் பெரியவாளின் அருள் வாக்கில் இருந்த உயர்ந்த கருத்தும், எளிய உவமையும் என்னுள் ஆழ்ந்த சிந்தனையை ஏற்படுத்தி ஒரு அரை மணி நேரம் ஒன் றுமே செய்யத் தோன்றவில்லை.

திருநெல்வேலி டாக்டர் எஸ். ராமநாதன்

● ஸ்ரீவித்யாவின் சிந்தனைச் சிதறல்கள் பிர மாதம். முடிந்து விட்டதே என்றிருக்கிறது.

மதுரை எஸ். செல்வம்

● ராஜேஷ்குமார் எழுதிய ''தாமரைபெண் பார்க்கப்படுகிறாள்'' சிறந்த சிறுகதை. வெங்கடேஸ்வரனைப் போல் இருப்பவர்கள் பெண் பார்க்கும் புனிதமான வைபவத்தை ஒரு பொழுது போக்காக நினைப்பது கண்டிக் கத்தக்கது. கதாசிரியர் இவர்களுக்குச் சவுக்கடி கொடுத்து விளாசியிருக்கிறார்.

சென்னை-44 ஏ.கே. சங்கர்

● போட்டிக் கதையான ''தாலி இங்கே தங்கம் எங்கே?'' தற்போதைய அரசியல் வாதிகளின் போக்கை அப்படியே மெய்ப் பிப்பதாக அமைந்திருந்தது. அக்கண்ணுக் குப் பாராட்டு.

மதுரை-9 திசையன்விளை முத்து

● மேற்கு ஆசியா, ஸ்ரீலங்கா, மலேசியா பர்மா, சிங்கப்பூர், இந்தோனேஷியா ஆகிய நாடுகளில் தங்கியுள்ள அயல் தேச இந்தியர் களின் பிரச்னைகளை இன்று நாடாளு மன்றக் குழு ஒன்று ஆராய்ந்து வருகிறது. இந்திய அரசு தலையிட்டுச் சரிப்படுத்தக் கூடிய பிரச்னை களைப் பற்றி அறிந்த தனி நபர்கள் அல்லது சங்கங்கள் அல்லது நிறுவனங்கள் தங்கள் அனுபவங்களையும் யோசனைகளையும் பின் வரும் விலாசத்துக்கு எழுதலாம்.

Chairman, Estimates Committee,
52-B, Parliament House New Delhi-110001

புதுடில்லி கே. எஸ். பல்லா

அத்தியாயம் 68

போர் நாளைக்கு

பூர்ணகட்டுக்குச் சிறிது தூரத்தில் மாக்ரே மறுநாள் தோன்றினானென்றால் அனந்த் முதல் நாளே காஸண்ட்ராவில் போரை எப்படி நடத்த வேண்டும் என்பதை நிர்ணயிக்கக் கப்பல் தலைவர்களின் கூட்டமொன்றை நடத்தினான். இரவு மூண்ட சமயத்தில் காஸண்ட்ராவுக்கு துலாஜியுடன் வந்த அனந்த் நேராக டெய்லரின் அறைக்குச் சென்று அங்கு கையில் கட்டுப் போட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்த டெய்லரை நோக்கி, ''காப்டன்! எனது நண்பன் முக்கிய செய்தி கொண்டு வந்திருக்கிறான். நாளை மாலையில் இங்கு மாக்ரே நம்மைத் தாக்கத் திட்டமிட்டிருக்கிறான். ஆகையால் நாம் நமது திட்டத்தையும் நிர்மானிக்க வேண்டும். இங்க்லண்டையும் வில்வரையும் வரவழையுங்கள்'' என்று மிகுந்த கவலையுடன் பேசினான்.

பதிலுக்கு டெய்லர் ''யூ ஹாவ் த அடாஸிடி டு கம் ஹியர் ஆப்டர் ஷூட்டிங் மி? (என்னைச் சுட்ட பின்பு இங்கு வர உனக்கு என்ன துணிவு?)'' என்று சீறினான்.

''ஐ ஆம் ஸாரி டு ஹாவ் ஷாட் அட் எ ப்ரண்ட் பட் யூ மேட் மி டு இட் (ஒரு நண்பனைச் சுட்டதற்கு வருந்துகிறேன். ஆனால் அதைச் செய்யத் தூண்டியது நீதான்)'' என்ற அனந்த். ''அவர் குவாரல்ஸ் கான் வெய்ட், லெட் அஸ் டிஸ்கஸ் அபௌட் த எனிமி (நமது சச்சரவுகளைப் பிறகு வைத்துக்கொள்ளலாம். முதலில் எதிரியைப் பற்றிச் சிந்திப்போம்)'' என்றான்.

கப்பலில் உட்கார்ந்திருந்த டெய்லர் அதற்கு மேல் ஏதும் பேசவில்லை. கையைத் தட்டி ஒரு மாலுமியை அழைத்து இங்க்லண்டையும் வில்வரையும் அழைத்து வர ஏவினான். அவர்கள் வந்ததும் அனந்த் தாமதமின்றி விஷயத்தைத் துவங்கினான். ''துலாஜி வந்துவிட்டான். மாக்ரே இங்கு நாளை மாலை நம்மைத் தாக்கப் போவதாகச் சொல்கிறான்'' என்று.

''மாக்ரே என்னை எதிர்க்க வருகிறானா? ஒரு நாளும் இருக்காது. இந்த காஸண்ட்ராவைப் பார்த்ததும் ஓடிவிடுவான்'' என்றான் டெய்லர்.

''ஓடமாட்டான்'' என்று திட்டமாக அறிவித்தான் துலாஜி. ''நாட் ஒன்லி தட் ஹி ஹாஸ் ப்ராமிஸ்ட் டு காட்ச் யூ (அதுமட்டுமல்ல, உங்களைப்பிடித்து விடுவதாகச்சபதமும் செய்திருக்கிறான்)'' என்றும் அறிவித்தான்.

டெய்லரின் முகத்தில் வியப்பு மிக அதிகமாகப் படர்ந்தது. இங்க்லண்டை நோக்கி ''இங்க்லண்ட்! மாக்ரே மஸ்ட் ஹாவ் பீகம் மாட்? (இங்க்லண்ட் மாக்ரேக்குப் பைத்தியம் பிடித்திருக்க வேண்டும்)'' என்றான்.

இங்க்லண்டுக்கு மட்டும் சிறிது சந்தேகம் உதயமாயிற்று. ''டெய்லர்! எ மான் டஸ் நாட் ஆல்வேஸ் ரன் (டெய்லர் ஒரு மனிதன் எப்பொழுதும் ஓடுவதில்லை)'' என்றான், மெதுவாக.

அப்பொழுது வில்வர் தலையிட்டு ''நாம் மாக்ரேயைப் பற்றி விவாதிப்பதை விடப் போரைப்பற்றி விவாதிப்பது நல்லது. மாக்ரே தைரியத்துடன் வருகிறானென்றால் அவனுக்கு ஏதோ புதுத் துணை இருக்க வேண்டும்'' என்று கூறிவிட்டு அனந்தை அடிக்கண்களால் கவனித்தான்.


அனந்தின் முகத்தில் கவலைக் குறியைத் தவிர வேறு எதையும் காணோம். ''நாம் அனாவசிய விஷயங்களைப் பேசிக் கொண்டிருக்கிறோம். இதற்காக நான் வரவில்லை'' என்றான்.

''சரி, போரைப் பற்றிப் பேசுவோம்'' என்றான் டெய்லர்.

''மாக்ரே ஐந்து கப்பல்களுடன் வருகிறான். நம்மிடம் ஏழு கப்பல்கள் இருக்கின்றன'' என்றான் அனந்த்.

''வேறு என்ன வேண்டும் நமக்கு? காஸண்ட்ராவிடம் முந்நூற்றி எண்பது பீரங்கிகள் இருக்கின்றன. காஸண்ட்ரா பத்துக் கப்பல்களுக்குச் சமானம்'' என்று சுட்டிக் காட்டினான் டெய்லர்.

''ஆனால் அதன் வேகம் குறைவு'' என்றான் அனந்த்.



டெய்லரின் விழிகள் கோபத்துடன் விழித் தன. அனந்தை நோக்கின. ''ஹௌ டேர் யூ இன்ஸல்ட் மை ஷிப் (என் கப்பலைப் பற்றிக் குறை சொல்ல உனக்கு என்ன துணிச்சல்?)'' என்று சீறினன் டெய்லர்.

''ஐ ஆம் ஸ்டேட்டிங் எ ட்ருத் (நான் உண்மையைச்சொல்கிறேன்)''என்று அனந்த் மேலும்விளக்கலானுன்.''தேவ்கட்டிலிருந்தே இதன் வேகத்தைக் கவனித்து வருகிறேன். இதன் மூன்று பாய்மரங்கள் நன்ருகத் தான் காற்றில் விரிந்து கிடந்தன. இருப் பினும் தள்ளாடியது கப்பல்'' என்று கூறிய அனந்த் மேலே பேசவில்லை. டெய் லர் கேட்டான், ''இதன் எடை அதிக மில்லையா?'' என்று.

''எடைக்கும் வேகத்துக்கும் சம்பந்தம் இல்லை'' என்ற அனந்த் சட்டென்று ஒரு கேள்வி கேட்டான். ''டெய்லர்! ஹௌ லாங் வர்ஸ் இட் ஸின்ஸ் யூ கார்ீன்ட் திஸ் ஷிப்? (டெய்லர் இந்தக் கப்பலின் அடியைச் சுரண்டி எத்தனை நாளா கிறது?'')


இதற்கு இங்க்லண்ட் பதில் சொன்னுன்: ''காஸண்ட்ராவைக் கைப்பற்றிய பிறகு நாங்கள் அதைச் சுத்தம் செய்யவில்லை'' என்று.

''நீண்ட நாளாக நீங்கள் சுத்தம் செய் யாததால்,நீண்டகாலப் பயணத்தால் இதன் அடியிலும்பக்கவாட்டிலும்,பாசிகளும்,கிளிஞ் சல்களும், இதர பூச்சிக் கூண்டுகளும் டன் கணக்கில் அடைந்து கிடக்கின்றன. இதைத் தரையில் இழுத்துச் சுரண்டி யிருந்தால் இதன் வேகம் தடைப்பட்டிருக்காது. இருப் பினும் இது நல்ல கப்பல். நல்ல பலமுள்ளது. பட் வென் இட் கம்ஸ் டு எ வார் ஸ்பீட் கௌண்ட்ஸ் வெரிமச் (ஆனுல் போர் என்று வரும்போது வேகத்தின் உதவி மிக அவ சியம்)'' என்று விளக்கினுன் அனந்த்.

இதை ஸில்வர் இங்க்லண்ட் இருவருமே ஆமோதித்தார்கள். டெய்லர் ஆமோதிக்கா விட்டாலும் எதிர்க்கவில்லை. அப்பொழுது வீசினன் முக்கிய வினக் கணையை அனந்த் ''டெய்லர்! நாம் எப்படிப் போரிடுவது?'' என்று.

''நீயே சொல்'' என்ருன் டெய்லர்.

''காஸண்ட்ராவின் பீரங்கி பலம் யாருக்கும் இல்லை. ஆகையால் மாக்ரே வந்ததும் அவன் கப் பலை நீ தாக்கு. நீ நேர் எதிராகத் தாக்கினுல் அவன் உன்னிட மிருந்து தப்பவும் உனக்கு அப்பால் வளைந்து நிற்கும் ராணி யின் துணைக் கப்பல் களைத்தாக்கவும் முயல் வான். அவன் ஐந்து கப்பல்களுடன் உனக் கும் கடல் ராணியின் துணைக் கப்பல்களுக் கும் இடையில் நுழை வான். அப்பொழுது அந்த ஐந்து கப்பல்கள் ஒரு புறத்திலிருந்து அவனைத் தாக்கும். நீ இன்னெரு பக்கத்தி லிருந்து அவனைத் தாக்குவாய். உனக்கும் லாபூஷேக்கும் இடை யில் மாக்ரே நசுக் குண்டு போவான்'' என்று கூறிய அனந்த் மற்றவர்கள் யோச னைக்குக் காத்திருந் தான்.



சாண்டில்யன்

''லாபூஷே கடல் ராணியில் இருக் கிறுன். துணைக் கப்பல் களில் இல்லை'' என்று குறிப்பிட்டான் இங்க்லண்ட் தீவிர சிந்தனை யுடன்.

அனந்த் புன்சிரிப்புக் கொண்டான். ''லா பூஷேயைக் கடல் ராணியை விட்டு மற்ற ஐந்து கப்பல்களில் ஒன்றுக்கு அனுப்பி விடு கிறேன்'' என்ருன்.

இதைக் கேட்ட டெய்லர் கடகடவென நகைத்தான். ''யூ வில் ஸெண்ட் லா பூஷே? ஹு ஈஸ் யுவர் ஸர்வெண்ட்?'' என்றான் நகைப்பின் ஊடே.

அனந்த் அந்த நகைப்பை லட்சியம் செய்யவில்லை. ''லா பூஷே வில் கோ ஹொயர் பிராபிட் லைஸ் (லாபமிருக்கும் இடத்துக்கு லா பூஷே போவான்)'' என்று கூறினான் அனந்த்.

''ஷ்யூர்'' என்றான் இங்கிலண்ட்.

''லா பூஷே நாளைக் காலையில் கடல் ராணியிலிருந்து படகில் செல்வதை நீங்கள் பார்க்கலாம்'' என்று திட்டமாகச் சொன்னான் அனந்த்.

''சரி கடல் ராணி என்ன செய்யும்? லா பூஷே இல்லா விட்டால் அதை யார் நடத்துவார்கள்?'' என்று ஸில்வர் வினவினான்.

''யார் பெயரை அந்தக் கப்பல் தாங்குகிறதோ அவரே நடத்துவார்'' என்று அனந்த் சொன்னான் மகிழ்ச்சியுடன்.

''யார் கடல் ராணியா! ரத்னாவா!'' என்று கேட்டான் ஸில்வர்.

''தட் உமன்?'' என்று டெய்லர் அலுத்துக் கொண்டான்.

''கடல் போரில் அவள் ஆண்களை விட வல்லவள். நாளைப் போரில் பார்க்கப் போகிறாய் அதை'' என்று அனந்த் திட்டமாகச் சொன்னான். அடுத்து அனந்த் விளக்கினான் ஆங்கிலத்தில். ''யூ அடாக் மாக்ரே பஸ்ட். ஹி கெட்ஸ் இன் பிட்வீன் யூ அண்ட் த ஃபைவ் ஷிப்ஸ் ஆஃப் ராணி. தென் யூ ஆன் ஒன் ஸைட், த ஃபைவ் ஷிப்ஸ் கமாண்டட் பை லா பூஷே ஆன் த அதர் ஸைட். அடாக் மாக்ரேஸ் ஃபைவ் ஷிப்ஸ் வென் ஹி கெட்ஸ் இன் பிட்வீன் யூ. மாக்ரே வில் ட்ரை டு என்டர் த ஹார்பர் பார் ப்ரொடக்ஷன். கடல் ராணி வில் பார் த வே அண்ட் வில் ஃபைட் (நீங்கள் முதலில் மாக்ரேயைத் தாக்குங்கள். மாக்ரே உடனே உங்கள் கப்பல்களுக்கும் ராணியின் ஐந்து கப்பல்களுக்கும் இடையே வருவான். அப்பொழுது நீங்கள் ஒரு பக்கத்திலும், லாபூஷேயால் நடத்தப்படும் ஐந்து கப்பல்கள் இன்னொரு புறத்திலும் மாக்ரேயைத் தாக்குகிறீர்கள். மாக்ரே அப்பொழுது தற்காப்புக்காகத் துறைமுகத்துக்குள் நுழைய முயல்வான். அவனைக் கடல் ராணி தடுக்கும்)'' என்றான். ''இந்த நிலையில் கடல் ராணி, காஸண்ட்ரா, லாபூஷே இந்த மூன்று சக்திகளுக்கிடையே மாட்டிக் கொள்கிறான் மாக்ரே. ஐ திங் யூ நோ த ரிஸல்ட் (முடிவு உங்களுக்குத் தெரியும் என்று நினைக்கிறேன்)'' என்றும் சொன்ன அனந்த் எழுந்தான் போக.

டெய்லர் தனது கட்டிலிலிருந்து எழுந்து இடது கையை நீட்டினான் அனந்தை நோக்கி. ''அனந்த் யூ ஆர் எ கிரேட் பிளானர். யூ ஆர் எ ஜீனியஸ். ஐ குட் ஹாவ் ஆபர்ட் யூ மை ரைட் ஆர்ம். பட் யூ ஹாவ் டாமேஜ்ட் இட் (அனந்த் நீ திட்டமிடும் நிபுணன். நீ மேதை. என் வலது கையை நீட்டியிருப்பேன் குலுக்க. ஆனால் அதை நீ கட்டு விட்டாய்)'' என்றான். டெய்லரின் இடது கையைத் தனது இடது கையால் பற்றிய அனந்த், ''டெய்லர்! எனி ஹாண்ட் ஈஸ் குட் வென் த இன்டென்ஷன்ஸ் ஆர் குட் (டெய்லர்! நமது எண்ணம் சரியாயிருந்தால் எந்தக் கையும் நல்ல கைதான்)'' என்றான். அத்துடன் மற்றவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு துலாஜியுடன் கடல் ராணிக்குப் போனான்.

தளத்தில் அவனுக்காக லா பூஷே காத்திருந்தான் இரு பெண்களுடன். அனந்த் தளத்தில் கால் வைத்ததும் ''டெய்லர் இணங்கி விட்டானா?'' என்று வினவினான்.

''இணங்கிவிட்டான்'' என்றான் அனந்த்.

''அப்படியானால் அந்த ஐந்து கப்பல்களுக்கு நான் போகிறேன்'' என்ற லாபூஷே ''நௌ வி க்வீன் வில் ஹாவ் எ ப்யூடி க்வீன் பார் இட்ஸ் காப்டன் (இப்பொழுது கடல் ராணிக்கு ஓர் அழகு ராணி தலைமைக்குக் கிடைத்தாள்)'' என்று கூறிப் புன்முறுவல் கொண்ட லாபூஷே பக்கத்தில் நின்ற ரத்னாவைத் தலை குனிந்து வணங்கி ''காப்டன் டேக் சார்ஜ்'' என்றான். பிறகு நூலேணியில் இறங்கிச் சென்றான். நூலேணியில் இருந்து கொண்டே சாருவையும் ராணியையும் நோக்கி, ''கேர்ல்ஸ்! யுவர் லவர் ஈஸ் தேர். யுவர் இம்பெடிமெண்ட் கோஸ் (பெண்களே! உங்கள் காதலர் அதோ இருக்கிறார். தடங்கல் போய்க் கொண்டிருக்கிறது) என்று அனந்தையும் தன்னையும் காட்டி நகைத்துக் கொண்டே இறங்கினான் நூலேணியில்.

''இந்த பிரெஞ்சுக்காரர்களுக்கு எப்பொழுதும் பெண் பித்து'' என்று சீறினான் அனந்த்.

''உனக்கு மட்டும் என்னவாம்?'' என்று துலாஜி நகைத்துவிட்டு தளத்தின் வேறு பகுதிக்குச் சென்றான். பெண்களிருக்கும் இடத்தை அடைய சங்கர்பந்த் அவனெதிரே வந்தார். ''கொல்லன் பட்டறையில் ஈக்கு என்ன வேலை? வாருங்கள் இப்படி'' என்று அவரைத் தன்னுடன் இழுத்துக் கொண்டு சென்றான் துலாஜி.

அவன் கண்ணுக்கு மறைந்ததும் இரு பெண்களும் அனந்தை நோக்கி வந்தார்கள். ''போர் நாளைக்குத்தான். இன்றைக்கல்ல!'' என்ற அனந்த் கப்பல் தலைவன் அறையை நோக்கி நடந்தான் அவர்களிடமிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு. அந்த அறையைப் பார்த்ததும் பிரமித்தான். பின்னால் வந்த இரு பெண்களும் நகைத்தார்கள்.

(தொடரும்)

''அங்கே என்ன பார்வை?''

''மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டாமே நிஜமா?''



மனவாசம்

கண்ணதாசன்

1. வேதாளமும், முருங்கை மரமும்

அவன் சரியாகச் சிந்திப்பான்; ஆனால் தவருகச் செய்து முடிப்பான். சுபாவம் இது தான்; பழக்கமும் இதுதான்.

வாழ்க்கையில் அவன் பெற்ற தோல்விகளுக்கு மற்றவர்களையே குற்ற சொல்வதில் அர்த்தமில்லை.

ஓட்டுகிறவன் சரியாக ஓட்டினால் வண்டி மாடு சரியாகத்தான் ஓடும். அவனது உள்ளப் பாங்கு சரியாக இருந்திருந்தால், வாழ்க்கையும் ஒழுங்காகவே இருந்திருக்கும்.

1961 ஏப்ரல் 9ந் தேதி தி.மு.க.வை விட்டு விலகியதில் அவனுக்குப் பரம திருப்தி.

நாகரிகமற்ற ஒரு கூட்டத்திலிருந்து வெளியேறிவிட்டதாக ஒரு நிம்மதி.

தி. மு. கழகத்தின் தொண்டர்களை அவன் மதித்தான். அப்படிப்பட்ட உத்தமத் தொண்டர்கள் காங்கிரஸ் கட்சிக்குக் கூட வாய்த்த தில்லை. ஆனல் மேல் மட்டத்திலிருந்த பலர், கட்சியைக் கொண்டே குடும்பத்தை நடத்த விரும்பியவர்கள்.

'கூட்டம் நடத்துவதும், கூட்டத்துக்குப் பேசப் போவதும் லாபகரமான தொழில்' என்று கருதியவர்கள்.

அத்தனை கரு மீன்களுக்கிடையே அப்பாவியான இந்தச் சிறிய மீனும் எப்படியோ பன்னிரண்டு ஆண்டுகள் வாழ்ந்து வெளியேறிவிட்டது.

தி. மு. க. பிறந்ததிலிருந்து அதன் வளர்ச்சியை அவன் கவனித்துவந்திருக்கிருன்.

கட்சியின் ஆரம்ப காலத்தில் எல்லாருமே உத்தமர்களாகத்தான் இருந்தார்கள். ஆனல் கட்சி எப்படி வெகுவேகமாக வளர்ந்ததோ, அப்படியே கட்சித் தலைவர்களின் மன மாறுபாடும் வளர்ந்தது.

ஆரம்பத்தில் போக வர வழிச் செலவு மட்டும் கேட்டவர்கள் நாளா வட்டத்தில் புடவை: ரவிக்கைக்கும் பண கேட்க ஆரம்பித்தார்கள்.

நாத்திகம் பேசுகிறவர்களுக்குக் குறைந்த பட்சப் பண்பாடு கூட இருக்காது என்பதை நிரூபிக்கத் தொடங்கினர்கள்.

உண்மையிலேயே அண்ணு இதற்கு விதிவிலக்காக இருந்தார். பெரியாரைப் போல அவர் கண்டிப்பாகவும் இருந்திருந்தால் கட்சியின் பிரமுகர்கள் அவ்வளவு மோசமான லாப வேட்டைக்காரர்களாக ஆகி இருக்க மாட்டார்கள்.

இரக்கம், தாட்சண்யம் எல்லாம் நிறைந்த கருணை உள்ளம் அண்ணுவின் உள்ளம். அதனல் எதையும் கண்டிக்காமலும், கண்டு கொள்ளாமலும் இருந்து விட்டார்.

ஆத்திரம் அதிகமாகும்போதுகூட ஜாடைமாடையாகத்தான் எதையாவது சொல்லுவார்.

கருணநிதியின் போக்கை அண்ணு கண்டிக்கவில்லை என்பதில் அவனுக்குப் பெரும் கசப்பு ஏற்பட்டிருந்தது.

'எல்லாம் அண்ணுவின் ஆசிர்வாதத்தோடு தான் நடக்கிறது' என்று சம்பத் கருதினர்.

முதலாவதாக அது அவனுக்குப் புரியவுமில்லை; இரண்டாவதாகப் பிடிக்கவுமில்லை.

இவ்வளவு குழப்பங்களுக்கிடையில் கட்சிக்கு உள்ளேயே இருந்து தொல்லை கொடுப்பதை விட கட்சியை விட்டு வெளியேறி விடுவது என்று அவன் முடிவு கட்டினன்.

அதன்படி வெளியேறியும் விட்டான். அதோடு அரசியலிலிருந்து ஒதுங்கி விடுவது என்பதே அவனது ஆசை.

அவனது கவிதைச் சிந்தனைக்கு எந்த அமைப்புக்குள்ளே சிக்கிக் கொள்வதும் சரியாக இருக்காது என்பதும் அவனுக்குத் தோன்றிற்று.

பரந்த வானம் போல் உயர்ந்த கோபுரம் எல்லாவற்றையும் பார்க்க வேண்டும்; எழுத வேண்டும். கடவுட் தத்துவத்தில் ஈடுபட்டால்தான் கவிதைச் சிறகுகள் விரியும்.

முன்பொரு தடவை 'மங்கையர் திலகம்' படத்தில், 'துளசி மாதா'வைப் பற்றியும், தெனுலி ராமன் படத்தில் 'காளி மாதா'வைப் பற்றியும் எழுதிவிட்டு, கட்சித் தோழர்களின் கடுமையான கண்டனத்துக்கு ஆளாகியிருந்தான்.



என்ன இது மடத்தனம்? எப்படிப்பட்ட முட்டாள்தனமான நாத்திகக் கூட்டுக்குள் எப்படியோ சிக்கிக் கொண்டு விட்டோமே என்று அவன் கலங்கி விருந்தான். 'நல்ல வேளை' இனி வானத்தில் சிறகடித்துப் பறக்கலாம்' என்று அவனுக்குத் தோன்றியது.

அதற்கு ஆறு மாதங்களுக்கு முன்பே சிவாஜியின் படங்களுக்கும் அவன் எழுத ஆரம்பித்திருந்தான்.

பாவ மன்னிப்பு, பாசமலர் போன்ற படங்களில் அவன் இஷ்டத்திற்கு விளையாடி இருந்தான்.

இந்த சுகம், நாத்திகத்தில் எங்கிருந்து வரும்?

நிறைவு பெற்ற ஆத்ம திருப்தி ஒன்று அவனுக்கு ஏற்பட்டது.

கட்சியின் அப்பாவித் தொண்டர்களிடமிருந்து கண்டனக் கணைகள் அவனுக்குக் குவிந்தன. அவற்றைப் பற்றி அவன் கவலைப் படவில்லை.

விலகிய இரண்டு மூன்று நாட்களில் அவனது ஆசிரியர் பன்மொழிப் புலவர் அப்பாதுரையாரின் மனைவி அலமேலு அப்பாதுரையும், காஞ்சிபுரம் கவுன்சிலர் ராஜகோபாலும் அவனைத் தேடி வந்தார்கள்.

''சம்பத்துக்குத்தான் ஏதேதோ கோபம். உனக்கு என்ன அண்ணாவின் மீது கோபம்?'' என்று கேட்டார்கள்.

''எனக்கொன்றும் கோபமில்லை. எனக்கு அரசியல் ஒத்துக்கொள்ளவில்லை; பேசாமல் ஒதுங்கிக் கொள்ளப் போகிறேன்'' என்று கூறினான்.

''அப்படியாவது ஒதுங்கி இருங்கள். நாங்கள் எல்லாரும் உங்களுக்கு வேண்டியவர்கள்'' என்று அவர்கள் கூறிவிட்டுப் போனார்கள்.

'சம்பத் புதிய கட்சி துவங்கப் போவதாக அவனுக்குச் செய்தி தரப்பட்டது. அதில் அவனுக்கு அக்கறை இல்லை.

ஒரு வயலை உழுது விளைப்பது, அறுவடை நேரத்தில் வெளியேறி மற்றும் ஒரு பொட்டைக் காட்டை உழுவதா?

கொஞ்சம் கூட அவன் அதை விரும்பவில்லை.

கட்சி ஆரம்பிக்கப்பட்ட அன்று, காலை கூட்டத்துக்கு அவன் போகவில்லை.

அந்தக் கூட்டம் ஒற்றைவாடைக் கொட்டகையில் நடந்தது.

மதியம் நன்றாகச் சாப்பிட்டுவிட்டு மாடியில் பாயை விரித்துப் படுத்து விட்டான். அப்போதெல்லாம் அவனுக்குக் குடிப் பழக்கம் அதிகமில்லை. அது இருந்தே தீர வேண்டும் என்ற கட்டாயமும் இல்லை. எப்போதாவது ஒரு நாள் அபூர்வமாக மது அருந்துவதே வழக்கம். மன நிறைவோடு வயிறு நிறையும்வரை சாப்பிடுவான். குறைந்தது இரண்டு மணி நேரமாவது மதியம் தூங்கியாக வேண்டும்.

இந்தப் பழக்கம் 1944ல் 'திருமகளில்' வேலை பார்த்தபோது ஆரம்பமாயிற்று.

தூங்க ஆரம்பித்தான்; தூதுவர்கள் வந்து விட்டார்கள்.

மேயர் முனுசாமியும் மேலும் இரண்டொருவரும் வந்தார்கள்.

ஒற்றைவாடைக்கொட்டகைக்கு வெளியே தி. மு. கவினர் கலகம் செய்ய நினைப்பதாகவும் அவன் கலந்து கொள்ளாமல் இருப்பது தவறான எண்ணத்தை உண்டாக்கி விடும் என்றும் அவர்கள் வாதாடினார்கள்.

எதிரிகள் தாக்க வருகிறார்கள் என்றதும் அவன் ஆத்திரம் கொண்டவனானான். அவனது தலையெழுத்து அவனை எழுப்பி உட்கார வைத்தது. பிரக்ஞையற்றவன் போல் எழுந்து அவர்களோடு சென்று விட்டான்.

ஆரம்பமாகி விட்டது அவனது வாழ்க்கையில் இரண்டாவது முட்டாள் தனம்.

ஒற்றைவாடைக் கொட்டகையில் சுமார் ஆயிரம் பேர் கூடியிருந்தார்கள். அது ஒரு நல்ல கூட்டம்தான். கழகத்திலிருந்து பல முக்கிய பிரமுகர்கள் விலகி வந்திருந்தார்கள்.

''வேலூர் பொதுக் குழுவிலேயே கழகத்தை உடைத்திருந்தால் இன்னும் பல பேர் வந்திருப்பார்கள்'' என்று ஒருவர் சொன்னார். காலம் தாழ்த்தியது நம்முடைய குற்றம் என்று பலரும் பேசிக்கொண்டார்கள்.

காலை நடந்த கூட்டத்தில் சம்பத் தெளிவாக விளக்கம் கொடுத்திருந்தாராம்.

அந்தக் கூட்டமும், இருந்த சூழ்நிலையும் கொஞ்சம் கொஞ்சமாக அவனுக்குப் பிடித்துப்போய்விட்டன.

ஆனாலும் அவனை ஒரு முக்கியமானவனாக அங்கே யாரும் மதித்ததாகத் தெரியவில்லை.

அவன் விடுவானா? தன்னுடைய முக்கியத்துவத்தைக் காட்டிக் கொள்ளப் பதினைந்து நிமிடம் பேசிவிட்டான்.

மறு நாள் என்றுதான் நினைவு. கடற்கரையில் பொதுக் கூட்டம். அதிலும் பிரக்ஞை இல்லாமல்தான் அவன் கலந்து கொண்டான்.

கூட்டத்தில் இருக்கும்பொழுது ஒரு ஈடுபாடும், வீட்டுக்குத் திரும்பியதும் ஒரு வெறுப்பும் மாறி மாறித் தோன்றின.

கட்சிக்கு, 'தமிழ் தேசியக் கட்சி' என்று பெயர். கொடி, இரண்டு சிவப்புக்கு நடுவே ஒரு நீலம்.

இனி அந்த கட்சியிலிருந்து இவன் காலை எடுக்க முடியாது. அந்த முத்திரை அவன் மீது குத்தப்பட்டு விட்டது.

இன்றைய நண்பர்கள் என்ன கருதினாலும் சரி. அவனது பொருளாதார இழப்புக்கு இரண்டாவது அஸ்திவாரம் அன்றுதான் போடப்பட்டது.

பொருளாதாரம் மட்டுமா?

அவன் எழுதுவதாகப் போடப்பட்ட இடங்களுக்கெல்லாம் ஒரு தடை விழுந்துவிட்டது.

ஏப்ரல் 29ந் தேதி. மதியம் அவன் தூங்கிக் கொண்டிருந்தபோது, 'வெளியிலே அமீனா சப்தி கொண்டு வந்திருப்பதாக' அவனை எழுப்பினார்கள். (வளரும்)

பலி சக்கரங்கள்

கிருஷ்ண குரு



"என்னங்க இந்த அநியாயத்தைக் கேட்டீங்களா..." என்று ஓடிவந்த பத்தினி ரத்தினத்தை முறைத்தான் சாரங்கன். அவள் வழக்கமே இப்படித்தான்.... அவனும் ஆயிரம் தடவை சொல்லி விட்டான், "சொல்லித் தொலைத்துவிட்டு உன் அங்கலாய்ப்புக்களை வைத்துக் கொள்" என்று. அந்தக் கதையெல்லாம் குமாரியிடம் நடக்காது. முதலாவதாக அவளுக்கு அங்கலாய்க்கத் தான் தெரியும். பாதி கேட்டு வந்த தகவல்களை மூக்கு, காது வைத்து ஜோடிக்கத் தெரியும். பேசாமல் படித்துக் கொண்டிருந்த புத்தகத்தில் மறுபடியும் கவனத்தைத் திருப்பிக் கொண்டான்.

"என்னங்க.... சொல்றேனே கேட்கலே"

"அட, சொல்லித் தொலையேன். என்ன சொல்ல வந்தே?"

"நம்ம நாயுடு பொண்ணு செத்துப் போச்சுங்க...."

திடுக்கிட்டு நிமிர்ந்தான் சாரங்கன்.

"சாயப் பட்டறைக்குப் போறு இல்லே... அந்தப் பொண்ணுங்க... அந்தப் பட்டறை மொதலாளி ஒரு வயசுப் பையனும்... இவ நல்லா இருக்கா... கேட்கணுமா... வயத்துலே வாங்கிட்டா... வெளியே சொல்ல முடியாம ராத்திரி மருந்து குடிச்சிட்டா."

'பாவம்' என்று அனிச்சையாக முனகினான் சாரங்கன். தினமும் பேப்பர் கொண்டு வந்து போடுவாள். கலகலப்பாக ரெண்டு வார்த்தைகள் பேசாமல் அவளால் போக முடியாது. அப்படியொரு சுபாவம். நாயுடுவுக்குக் கால் வராது. சின்னப் பெட்டிக் கடை வைத்திருந்தார். வாழ்ந்து கெட்டவர். நல்ல மனுஷன். ஏதோ வயிற்றுப் பாட்டுக்குப் பெண் குழந்தையை வெளியே அனுப்பினார். பதினாறு கூட நிறைந்திருக்காத குழந்தைப் பெண்... காம விகாரங்களுக்கு இடம் கொடுக்கிற வயசோ, மனசோ சூழ்நிலையோ கிடையாது. இது நிச்சயமாக அவளால் இல்லே. தினமும் கிடைக்கிற ஐந்து ரூபாய்க் கூலி நிரந்தரமாகக் கிடைக்க அவள் ஒத்துப் போயிருக்க வேண்டும்.... வேறு வழியில்லாமல்.

குளிக்கிறபோதும், சாப்பிடுகிற போதும் சாரங்கனுக்கு மனத்தில் வலித்தது. எட்டாவது தேறி "கிளாஸ்லே நான்தான் மாமா பஸ்ட்... எஸ். எஸ். எல். ஸி. முடிச்சா உங்க ஆபீசிலே வேலை வாங்கித் தருவீங்களா?" என்று அவள் ஆர்வத்தோடு ஒரு நாள் கேட்டது மனசில் எழுந்து சங்கடம் செய்தது.

"நூறு அம்பது செலவு பண்ணிக் கலைச்சிருக்கக் கூடாது இந்தப் புள்ளை" என்று மனைவியிடம் பரிதவிப்போடு பேசினான்.

"இந்த மாதிரி இடத்திலே வேலை செய்யற பொண்ணுங்களை யெல்லாம் இவங்க இப்படித்தான் செஞ்சுறுவாங்களாமே ... நெஜங்களா?" என்று கேட்டபோது பதில் பேசாமல் சாப்பிட்டு எழுந்தான்.

அர்த்தமில்லாத ஒரு கசப்பு யார் யார் மேலேயோ எழுந்தது.

"சஸ்பெண்ட் ஆனாலும் சரி... இவர்களை விடறதில்லே, வெளையாடறானுங்களா... பாரு முத்து நான் பேசறபோது யாராவது குறுக்கே வந்தீங்க அப்புறம் நான் மனுஷனாகவே இருக்க மாட்டேன்... ஜாக்கிரதை."

"நீங்க எதுக்கும் பயப்படாதீங்க பாஸ்கரன்... இவனுங்க வச்சதுதான் சட்டம்னு நெனைக்கிறானுங்க போலிருக்கு... அதிகாரம் கையிலே இருந்தா என்ன வேணாலும் செய்வாங்களா என்ன... இன்னிக்கு ரெண்டுலே ஒண்ணு பார்த்துடறது.... என்ன வேணு..."

"இன்னிக்கு நாம போடறதுலே இவனுங்க வழிக்கு வரணும், ரூமை விட்டு வெளியே வரவே விடக் கூடாது..."

சாரங்கன் மௌனமாக நின்றிருந்தான். அவன் பார்வை ரோட்டில் நிலைத்துப் போயிருந்தது. ரோட்டோரத்தில் இரண்டு ஜீப்புகளும் ஒரு வேனும் டீசலை ஒழுகி நிற்க டிரைவர்கள் விச்ராந்தியாகப் பீடியோடு அரட்டையில் மூழ்கி யிருந்தனர்.

"போற எடத்துலே எல்லாம் கோழி கேக்கறண்டா..." என்று ஆரம்பித்து ஒரு டிரைவர் கேலி செய்தது. அவன் ஜீப்பில்

சவாரி செய்கிற ஒரு என்ஜினீயரை என்பது பட்டவர்த்தனமாகத் தெரிந்தது.

சாரங்கன் பட்டும் படாமலும் எங்கோ கவனமாக இருப்பது இவ்வளவு சூடாகப் பேசிக்கொண்டிருப்பவர்களுக்குக் கோபத்தை அல்லது ஆத்திரத்தைக் கிளப்பி யிருக்க வேண்டும்....

''என்ன சாரங்கன் சும்மா இருக்கீங்க...''

''நான் சொன்னாக் கோபப்பட மாட்டீங்களே? இப்ப என்ன நடந்துபோச்சுன்னு இவ்வளவு ஆத்திரப்படறீங்க? ஒரு கட்டிடத்திலே இருந்து என்னை அடுத்த கட்டிடத்துக்கு வேறே சீட்லே போட்டிருக்கான்... இதாலே எனக்கோ உங்களுக்கோ யூனியனுக்கோ என்ன நஷ்டம் இல்லே அவமானம் ஏற்பட்டுப் போச்சு... இதுக்காக ஒரு பெரிய போராட்டம் தேவைதானா?''

''என்ன பேசறீங்க நீங்க? இன்னிக்குச் சீட்டை மாத்துவான். விட்டா நாளைக்கு ஊரை விட்டே மாத்துவான்.. நீங்க யூனியன்லே ஒரு ஆபீஸ் பேரர்... உங்க மேலேயே கை வைக்கத் துணிஞ்சவன்.... மத்தவங்களிடம் பயப்படுவானா என்ன? எத்தனையோ பேர் இருக்கிற போது உங்களை ஏன் அவன் மாத்தறான்? ஆயிரம் ரூபாய் செலவானாலும் ஒரு கை பார்த்துடறது! இதுலே யூனியனோட கௌரவமும் கலந்திருக்குன்னு நீங்க மறந்துடக் கூடாது....''

பாஸ்கரின் பேச்சில் படபடப்பும் நடுக்கமும் இருந்தது. அங்கே அனைவர் மத்தியிலும் ஒரு டென்ஷன் தெரிந்தது. சாரங்கனுக்கு இது பிடிக்கவில்லை. தன் பொருட்டு நடக்கிற இந்தச் சச்சரவுகளை நிறுத்த அவனால் முடியாது. ஏனெனில் அவன் அந்த யூனியனில் ஒரு பொறுப்பாளன். அவர்களது நடவடிக்கைகளை எதிர்த்தால் அல்லது மறுத்தால் 'கோழை' என்ற பெயர் வரும்.

கையில் ஃபைல் சகிதமாக நால்வரும் அந்த அதிகாரிகளின் அறைக்குள்ளே நுழைந்து உட்கார்ந்தனர்.

உள்ளே இரண்டு என்ஜினீயர்கள் இருந்தனர். ஒருவர் சூப்பிரன்டெண்டிங்க் என்ஜினீயர், மற்றவர் அவருக்குக் கீழே பணிபுரிபவர்கள். அவர்கள் முகத்தில் எரிச்சலும் சலிப்பும் விரவிக் கிடந்தன.

''அப்புறம்... பாஸ்கரன்...'' என்று அவர் ஆரம்பிக்க, காத்திருந்தவன் மாதிரி பாஸ்கரன் ஆரம்பித்தான்.

''நீங்க எங்க சங்கப் பொறுப்பாளரை அநாவசியமாக மாத்தியிருக்கீங்க... எங்களுக்கு இதிலே கொஞ்சமும் விருப்பம் இல்லே. ஒருதலைப்பட்சமா நீங்களா எடுத்த முடிவு இது.... இதுக்கு எங்களுக்குக் காரணம் தெரிஞ்சாகணும்....''

''நிர்வாகம் செய்கிற ஒவ்வொரு காரியத்துக்கும் உங்களுக்குக் காரணம் சொல்ல வேண்டியதில்லே பாஸ்கரன்... அவரு அங்கே இருக்கிறது பல விதத்திலே நிர்வாகத்துக்கு எடைஞ்சலா இருக்கு....''

''உடனே அவரைப் பழைய எடத்திலே மாத்திப் போடணும்....''

''இது இப்போ உடனடியா முடியாது... பல யோசனைகளுக்குப் பிறகுதான் அவரை மாத்தியிருக்கோம்...'' என்று அவர் விளக்க ஆரம்பித்தார்.

''உங்க கிட்ட எப்படி இந்த ஆர்டரை வாங்கணுமின்னு எனக்குத் தெரியும்... உங்களாலே முடிஞ்சாப் பாருங்க... நானும் என்னாலே முடிஞ்சதைப் பார்த்துடறேன்... வாங்கய்யா போகலாம்...'' என்று பேசி முடித்து அதே வேகத்தில் சர்ரென்று எழுந்து வெளியே வந்தான் பாஸ்கரன். அவர்கள் வெளியே போனதும்தான் எஸ். இ. பிரமிப்பில் இருந்து விடுபட்டார்.

''ஏன் ஷண்முகம் இந்த ஆர்டரைப் போட்டுத்தான் தொலையறது.. என்ன கெட்டுப் போச்சு... எழவு பெரிய கஷ்டம் இவங்களோட....'' என்று பெரியவர் முனக, ஷண்முகத்துக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

''இதைப் போடவே கூடாது ஸார். ஒவ்வொரு தடவையும் ரூமுக்குள் நுழையறது. காட்டுக் கத்தலாக் கத்தறது.. எவனாவது ஒரு எம். எல். ஏ. வோட வர்றது... அப்புறம் நம்மை மிரட்டறது... காரியத்தைச் சாதிச்சுக்கிறது... இதே வேலையாப் போச்சு. இவங்களுக்கு இருக்கிற மாதிரி நமக்கும் யூனியன் இருக்கு. நம்மாலேயும் மேலே வரை போக முடியும். பார்க்கலாம். நம்மை மீறி இவங்க எப்படிவாங்கறாங்கன்றதை...'' என்று கறுவிக் கொண்டார்.

பாஸ்கரன் தன் குழுவினருடன் ஆபீஸில் நுழைந்தபோது எல்லோரும் அவனை மரியாதையுடனும் பயத்துடனும் பார்த்தனர்.

''சும்மா விளாசிட்டே பாஸ்கரா. இனிமே ஆறு மாசத்துக்கு அவன் நம்ம ஆளுங்க மீது கைவைக்கப் பயப்படுவான்.''

ஆறேழு பேராகச் சேர்ந்து டீக்கடைக்குப் புறப்பட்டார்கள்.


''ம்... மேலே என்ன செய்யறது...''

''இந்த ஆர்டரை வாங்கல்லே... நம்ம யூனியன் இருக்கிறதுலே அர்த்தமே யில்லே பாஸ்கரன்.... கேவலம் ஒரு எஸ். இ. கிட்ட நம்ம ஜம்பம் பலிக்கலேன்னு மத்தவங்க காரித் துப்புவாங்க...மானமே போயிடும்''

''அதிசய மிருகங்களும் அற்புத பறவைகளும் இங்கிலீஷ் படம் பார்த்தியே! எப்படி இருக்கு?''

''தண்டம்டி! நம்ப ஊர் பன்றியையும் காக்கைகளையும் அவங்க காட்டவேயில்லே!''





MAC/S/801 A

6.354

The dependable prime mover that provides massive horse power.

The 6.354 engine is a highly efficient and well proven 6 cylinder, direct injection diesel engine specially designed for the most demanding Vehicular and Industrial applications. Engineered to high standards of performance, this heavy duty engine develops 120 BHP for Vehicular and 90 BHP for Industrial applications.

The 6.354 engine is equipped with a distributor pump, which incorporates modern technological advances in the fuel injection system: assures outstanding fuel economy.

Simpsons well-knit network of dealers guarantees prompt and efficient after-sales service facilities throughout the country.

Simpson & Co Ltd

861/862, Anna Salai, Madras-600 002.

பலத்த சர்ச்சைக்குப் பின் கோஷம் போட்டு, ஊர்வலம் போகிற உத்தியைக் கைக்கொள்வது என்று முடிவு செய்யப்பட்டது.

அப்புறம் ஒரு வாரம் எஸ். இ. ஆபீஸ் முன்பு கோஷங்கள். கன்னு பின்னுவென்று கார்ட்டூன் பாணி படங்கள்... கவிதை உரை நடையில் பிரவசனங்கள்... கம்பம் கம்பமாக ஒன்று பாக்கி இல்லாமல் தொங்கி யார் யாரையோ அவமானப்படுத்தி... இந்த விஷயங்கள் அல்லது விஷமங்கள் தலைமை வரை போய் விட்டது.

ஆனால் இதில் முழுசாகச் சம்பந்தப்பட்ட சாரங்கன் பொம்மை மாதிரி இயங்கினான். அவனை எல்லோரும் மறந்து விட்டார்கள். யாரோ ஒருத்தனை இடம் மாற்றி விட்டார்கள், அதற்காக யூனியன் போராடுகிறது என்று தெரிந்தது.

பல ஆபீசர்கள் இதைச் சிரத்தையோடு கவனித்து இதைப் பற்றிப் பலபடியாகப் பேச ஊழியர்கள் இது 'வாழ்வா சாவா' என்கிற போராட்டம் என்று எழுதினார்கள். பாஸ்கரன் நான்கு நாட்களுக்கு மேல் அலைந்து கொண்டிருந்தான். போராட்ட உத்திகள் மாற மாற இந்தச் சமாசாரம் மந்திரி வரை போய் பி. ஏ.விடம் இருந்து ஒரு போன் வந்தது.

"ஏங்க இந்த அநியாயத்தைக் கேட்மாங்களா?" என்று குமாரி ஓடி வந்தபோது எப்போதும் போல் வந்த எரிச்சலை அடக்கிக் கொண்டு மனைவியை வினயமாக என்ன நடந்தது என்கிற மாதிரி பார்த்தான் சாரங்கன்.

"அந்த நாயுடு செத்துப் போன புள்ளைக்கு அடுத்ததை அதே பட்டரைக்கு வேலைக்கு அனுப்பியிருக்காராம்... இந்த ஆளு மிச்சமிருக்கிறதையும் வாயிலே போட்டுக்குவான். கல்யாணம் பண்ணத் துப்பு இல்லே... இப்படியே கன்னி கழிஞ்சு சாகட்டும்னு நெனைக்கிறான் போலிருக்கு" என்று ஆரம்பித்தாள்.

பேப்பர் ஏன் வரவில்லை என்று புரிந்தவனாய் நாயுடுவின் கடைக்குப் போக எழுந்தான் சாரங்கன். குமாரி சொன்னது மனத்தில் நெருடியது. வீட்டை விட்டு வெளியே வந்து பார்த்தான். எதிர் வீட்டில் வாசலில் சின்னக் கூட்டம்.

பாலத்தின் மீது ரயில் ஓடக் கேட்டேன்...

பாலத்தின் மேல் ரயில் போவதுபோல் சினிமாவில் சத்தம் கேட்கிறது என்றால் இந்தச் சத்தம் வர 'டைப்' அடிக்கும் சத்தத்தை எடுத்துப் படத்துடன் இணைத்து விடுகிறார்கள்.

— அன்பு



"ரெண்டு பர்லாங் தூக்கியாந்திருக்கேன்.. ரெண்டு ரூபாய்க்குக் கம்மியாத் தந்தா வாங்க முடியாது சாமி..." என்று கூலிக்காரன் ஒருத்தன் ஆக்ரோஷமாய்ச் சத்தம் போட்டுக் கொண்டிருந்தான். உடலில் வியர்வை வழிந்து கொண்டிருந்தது. சாரங்கன் வேடிக்கை பார்த்துக் கொண்டே நடந்தான். மூட்டையைப் பார்த்தான். தாராளமாக இரண்டு ரூபாய் தரலாம். சாரங்கன் கடையை அடைந்தபோது கடையில் தாடி மீசையோடு நாயுடு உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தார்.

"என்னங்க செய்யறது... வாடகை தரணும்... ஆறு பேர் சாப்பிடணும்... இந்தக் கடையிலே நூறு ரூபா வந்தா எதேஷ்டம்... ஒருத்தி வேலைக்குப் போனா கொறஞ்சது நூறு ரூபா கெடைக்கும். ஏதோ ஓடும்... கஞ்சியாவது குடிக்கலாம். தலையெழுத்துப் படி நடக்கட்டுங்க... அறிஞ்சு ஆசைப்பட்டு யாரும் தப்புப் பண்ணலே...."

அவரை நினைத்துச் சாரங்கன் கழிவிரக்கப்பட்டுக் கொண்டான்.

"பேப்பர் கொடுங்க நாயுடு" என்று பேப்பரை வாங்கிக் கொண்டு நிமிர்ந்தபோது கொடிகளோடு பத்து இருபது சைக்கிள்கள் கும்பலாகப் போக, பக்கத்தில் இருந்தவரைக் கேள்விக் குறியோடு பார்த்தான்.

"வேலை வேணும்னு போராடப் போறாங்களாம்..."


"வேறே வேலை இல்லே பாருங்க. அதான் போராடறாங்க" என்றார் இன்னொருத்தர்.

"வேலை கொடுத்தா மட்டும் போராட்டத்தை நிறுத்திடுவாங்களா?" என்று மூதலாமவர் ஆர்த்தத்துடன் சிரித்தார்.

"ஒரு ஐநூறு ரூபா இருந்தா ஒரு பழைய மிஷினை வாங்கிப் பழக தச்சாவது ஒருத்தி நாலு ரூபா சம்பாதிப்பா. எங்க போறது" என்று நாயுடு பரிதாபமாகப் பிரலாபித்துக் கொண்டிருந்தார்.

போராட்டச் செலவுகளுக்கு இந்த மாதம் ஆளுக்கு ஐம்பது போட்டு ஆயிரம் ரூபாயாவது சேர்த்து விட வேண்டும் என்று முத்து சொன்னது ஞாபகத்துக்கு வந்தது. தன் பிரச்னையில் மானேஜ்மெண்டுக்கு ஆகியிருந்த போன் கால் செலவு, பெட்ரோல் செலவு, உழைப்பு விரயம்... நாயுடுவின் பிரலாபம்... சைக்கிள் ஊர்வலம், எல்லாம் ஒருசேர ஞாபகத்துக்குவர சாரங்கன் மனசு லேசாக வலித்தது.

இங்கே எதற்கும் போராட்டம்தான்... வேலை கிடைத்தாலும் வேலை கிடைக்காவிட்டாலும்... மேலேயிருந்து கீழே வரை பிரச்னைகள். சங்கிலியில் சரியாகப் பொருந்தாத பல் சக்கரங்கள், மூளைக்குக் கட்டுப்படாத அவயவங்கள்... இங்கு இது போன்றவர்கள் ஆத்மாவே இப்படித்தான் அகத்தப்பட்டுப் போயிருக்கிறது என்று மனத்தில் நினைத்துக் கொண்டு சாரங்கன் கடையை விட்டு நகர்ந்தபோது தூரத்தில் முத்து வேகத்தோடும் சந்தோஷத்தோடும் சைக்கிளில்வந்து கொண்டிருந்தான்!



காலத்திற்கு ஒரு நாள் முந்தி..

தமிழன்பன்

அன்று,
ஒரு மழை நாளில்
என் விழிகள் உன்னை
எனக்கு வழங்கியபோது,
காலம் - எனது
சாளரத்தில்
பூக்களைப் பொழிந்து புன்னகைத்தது.

பின்பு,
இலையுதிர் கால
நாள் ஒன்றில்
சம்மதமா என்று நான் கேட்க
நீ
சாதித்த மவுனத்தில்
இரவு பகல் இமைகள்
அசைவற்றுப் போகக்
காலம்
அதிர்ந்து நின்றது.

கோடையில்
நேற்று நீ கொடுத்தனுப்பிய
திருமண அழைப்பிதழை
என்னிடம்
நீட்டிவிட்டுத் திரும்பிய
காலம் - எனது
வாசற்படியில்
தலைகற்றித் தடுமாறி
விழுந்தது.

நான் இல்லாத
இந்த
இன்றில்,
இரத்தம் இழந்த வசந்தம்
எனது வாசற்படியில்
கண்ணீரில் நனைத்தபடி
காலத்தின் சடலத்தைக்
கைகளில்
ஏந்தி நிற்கிறது.





College Campus

எம்.ஐ.டி கல்லூரி குரோம்பேட்டை

பலம் வாய்ந்த ஒரு கிரிக்கெட் அணியைக் கொண்டது சென்னை, குரோம்பேட்டையிலுள்ள மெட்ராஸ் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னலஜி.

இக் கல்லூரியின் கிரிக்கெட் ஆட்டக்காரர்களிடையே ஒரு டபிள் விக்கெட் கிரிக்கெட் போட்டி நடத்தினால் என்ன என்ற யோசனை பிறந்து, அதனை வெளியிட்டதும் மாணவர்களிடையே ஏக வரவேற்பு.

போட்டியில் பங்கேற்க 16 கிரிக்கெட் ஆட்டக்காரர்களைக் கல்லூரி கிரிக்கெட் அணி தேர்ந்தெடுத்தது. எம். ஐ. டி. கல்லூரி மைதானத்திலேயே 1–11–80 சனிக்கிழமை 9–30 மணியளவில் போட்டிகள் தொடங்கின.

அகில இந்திய கிரிக்கெட் நடுவர் பட்டியலில் இடம் பெற்றிருக்கும் திரு கே. ஆர். கரியமாணிக்கமும், நடுவர் தேர்ச்சி பெற்று வரும் ஒரு மாணவரும் நடுவராகப் பணியாற்ற, உற்சாக வெள்ளம் வழிந்தோட, போட்டிகள் நடந்தன.

போட்டி விவரங்களை எழுது முன் டபிள் விக்கெட் ஆட்டத்தைப் பற்றி விவரிப்பது அவசியமாகிறது.

ஒவ்வொரு அணியிலும் இரண்டு கிரிக்கெட் ஆட்டக்காரர்கள் மட்டுமே இருப்பர். இரண்டு பேர் கொண்ட ஓர் அணி இரண்டு பேர்கொண்ட மற்றொருஅணியுடன் மோதும். ஒவ்வொரு அணிக்கும் 'பாட்' செய்யக் குறிப்பிட்ட எண்ணிக்கை 'ஓவர்'களே அனுமதிக்கப்படும். பந்து வீசும் அணியிலுள்ள இரண்டு ஆட்டக்காரர்களும் அந்த 'ஓவர்'களைச் சமமாகப் பங்கிட்டுக் கொண்டு பந்து வீச வேண்டும். 'பாட்' செய்யும் அணியின் மொத்த ரன்கள் கணக்கெடுக்கப்படும். 'பாட்' செய்யும்போது, அந்த அணியின் ஆட்டக்காரர் 'அவுட்' ஆகிவிட்டால் அவர் வெளியேற வேண்டியதில்லை. தொடர்ந்து ஆடலாம். ஆனால் ஒவ்வொரு முறை அவுட் ஆகும் போதும் அவர் அணி எடுத்த 'ரன்' எண்ணிக்கையில் ஐந்து ரன்கள் கழிக்கப்படும். 'பை' ரன்கள் கிடையாது. இரண்டு அணியினருக்கும் பொதுவான ஒன்பது பேர் பீல்டிங்குக்கு உதவுவர்.

எம். ஐ. டி. கல்லூரிப் போட்டியில் எட்டு அணிகள் பங்கேற்றன.

எம். ஸ்ரீதர் – பி. எம். கண்ணன் அணியும் ஷியாம்-சுந்தரசா அணியும் முதலில் மோதின.

ஒவ்வொரு அணியும் ஆறு ஓவர்கள் விளையாடும் என்று ஏற்படுத்திக் கொண்ட விதியின்படி ஸ்ரீதர் – கண்ணன் அணி ஆறு ஓவர்களில் 40 ரன்களைக் குவித்தனர். ஒரு முறை 'அவுட்' ஆனதற்கு 5 ரன்கள் கழிக்கப்பட்டு அந்த அணியின் ரன்கள் 35 என்று கணக்கிடப்பட்டது. இரண்டாவதாக ஆடிய ஷியாம்– சுந்தரசா அணி 24 ரன்கள் எடுத்து மூன்று முறை அவுட்டானதால் தோல்வியுற்றது. (ரன்கள்: 9).

இரண்டாவது போட்டியில் 18 ரன்கள் எடுத்த வெங்கடேசன் – சுரேஷ் அணியை 24 ரன் எடுத்த ரமேஷ் பாபு – கல்யாணராமன் அணி வென்றது.

மூன்றாவது போட்டியில் சிறப்பாக விளையாடிய பார்த்தசாரதியும் ரகுநாதனும்

⌘ போட்டியில் பங்கேற்றவர்களும், நிர்வாகிகளும். இடமிருந்து மூன்றாவது உட்கார்ந்திருப்பவர் நடுவர்: கரிய மாணிக்கம், அடுத்தது டைரக்டர் சாதிக்.



40 ரன்கள் எடுத்தாலும் மூன்று முறை 'அவுட்' ஆனதால் 25 ரன்கள்தான் எடுத்ததாகக் கணக்கிடப்பட்டது. 27 ரன்களே எடுத்த முகுந்தும் வித்யாசங்கரும் வெற்றி பெற்றனர்.

நான்காவது போட்டியில் சங்கர் — சந்திரசேகரன் அணி முரளி — சுந்தரராஜன் அணியை வெற்றி கொண்டனர். முதல் கட்டப் போட்டிகள் இதோடு முடிந்தன.

இரண்டாவது கட்டமாக, வெற்றி பெற்ற நான்கு அணிகளுக்குள் இரண்டு செமி ஃபைனல் போட்டிகள்.

ஸ்ரீதர் — கண்ணன் அணியுடன் சங்கர்—சந்திரசேகர் அணி முதல் செமிஃபைனல் போட்டியில் விளையாடியது.

இதில் ஒரு வேடிக்கை. ஸ்ரீதர் — கண்ணன் அணி முதலில் விளையாடி 22 ரன்கள் எடுத்தாலும் ஐந்து முறை 'அவுட்' ஆனதால் 25 ரன்கள் கழித்தாக வேண்டும். அந்த அளவுக்கு அவர்கள் ரன்கள் எடுக்காத நிலையில் அவர்களது எண்ணிக்கை 22—25 = —3 என்று கணக்கிடப்பட்டது.


ஆனாலும் கண்ணன் — ஸ்ரீதர் அணி மனம் தளராமல் பந்து வீசி சங்கர் — சந்திரசேகர் அணியைத் திணற அடித்தனர். சங்கர்—சந்திர சேகர் அணி 15 ரன்களே எடுத்தாலும் மூன்று முறைதான் 'அவுட்' ஆயினர். இதனால் அவர்கள் ரன் 15—15 = 0 என்று கணக்கிடப்பட்டது.

'0' ரன் எடுத்த சங்கர் — சந்திரசேகர் அணி '—3' எடுத்த ஸ்ரீதர்— கண்ணன் அணியை வெற்றி கொண்டனர்!

இரண்டாவதுசெமிஃபைனல் ஆட்டத்தில் முகுந்த் — வித்யாசங்கர் அணி 21—20 = 1 என்று ஆட்டத்தை முடித்து தாங்கள் தோல்வியுற்றதாக ஒப்புக்கொண்டதால் கல்யாண ராமன் — ரமேஷ் பாபு அணி வென்றது.

இறுதி ஆட்டத்தில் விளையாட சங்கர் — சந்திர சேகர் அணியும் கல்யாணராமன் ரமேஷ் பாபு அணியும் தகுதி பெற்று ஆடின.

முதலில் பாட் செய்த சங்கர் — சந்திர சேகர் அணி திணறியது. 14 ரன்களே எடுத்து இரண்டு முறை 'அவுட்' ஆனது. இதனால் அவர்களது ரன்கள் '4' என்று கணக்கிடப் பட்டது.



✱ போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்கள் திரு கல்யாண ராமன், திரு ரமேஷ் பாபு.

கடைசியாக ஆடிய கல்யாணராமன்—ரமேஷ் பாபு அணி அற்புதமாக ஆடி 37 ரன்களைக் குவித்தனர். ஒரு முறை மட்டுமே 'அவுட்' ஆனதால் அவர்களது 'ரன்' 32 ஆகக் குறைக்கப்பட்டது. இப்போட்டியில் வெற்றி பெற்றவர்களாக கல்யாணராமனும், ரமேஷ் பாபுவும் அறிவிக்கப்பட்டனர்.

எம். ஐ. டி. கல்லூரியின் டைரக்டர் திரு சாதிக் பரிசளிப்பு விழாவில் பங்கேற்றார். வெற்றி பெற்ற கல்யாணராமனுக்கும் ரமேஷ் பாபுவுக்கும் ரூ. 100 'கல்கி' பரிசளித்தது. இரண்டாவதாக வந்த சங்கருக்கும் சந்திர சேகருக்கும் புத்தகங்கள் பரிசாக 'கல்கி' சார்பில் அளிக்கப்பட்டன.

வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசுகளை வழங்கிய திரு சாதிக், 'இம்மாதிரிப் பத்திரிகைகள் முன்வந்து மாணவர்களின் திறமைகளை ஊக்குவிப்பதை வாழ்த்தினர். நடுவர் கரியமாணிக்கம் இப்போட்டியை சிறப்பாக நடத்தித் தந்து ஆட்டக்காரர்களின் நன்றிக்குப் பாத்திரரானார்.

—நாயகன்

படங்கள் : மன்னைமூர்த்தி

✱ ரமேஷ் பாபுவும், கல்யாண ராமனும் எம்.ஐ.டி. டைரக்டர் திரு சாதிக் டமிருந்து பரிசு பெறுகின்றனர்.



பாட்டுக்கொரு புலவன்

— சிலம்புச் செல்வர்



2. காலம் தந்த கவிஞன்

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலே ''தேச பக்தி'' என்னும் புதிய மதம் பிறந்தது. அந்நேரத்திலே அந்நிய ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் பரணி பாட ஒரு பாவலர் தேவைப்பட்டார். தெய்வத்தையே பாடிக் கொண்டிருந்த தமிழ்ப் புலவர் பரம்பரையிலே தேசத்தையும் பாட ஒரு ''தேசியக் கவி'' தேவைப்பட்டார். கோனாட்சியைப் புகழ்வதையே மரபாகக் கொண்டிருந்த புலவர் குலத்திலே அன்னிய கோனாட்சியை எதிர்த்துப் பாடவும் ஒரு புரட்சிக் கவி தேவைப்பட்டார்.

காலந்தோறும் தமிழினத்தின் தேவையைப் பூர்த்தி செய்ய வாழையடி வாழையென கவிஞர்களைத் தந்து வந்த தெய்வம் இந்த 20ம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் தேச பக்த மதத்தின் தேவையை நிறைவு செய்ய ஒரு கவிஞனைத் தந்தது, சி. சுப்பிரமணிய பாரதியின் வடிவில்!

''தேசபக்தி'' என்னும் புதிய மதம் தந்த தேசியக் கவியான பாரதியார் தமிழினத்தின் தேவையை நிறைவு செய்யவே தாம் தோன்றியதாகக் கூறுகிறார்.

''புவியனைத்தும் போற்றிட வான்
புகழ் படைத்துத் தமிழ் மொழியைப்
புகழிலேற்றும்
கவியரசர் தமிழ்நாட்டுக்கு
இல்லையெனும் வசை யென்னாற்
கழிந்ததன்றே''

என்று பாடுகிறார். இது எட்டயபுரத்து அரசருக்குப் பாரதியார் எழுதிய பாடலில் உள்ளது.

பாரதி, ''தேசியக் கவி'', ''மகா கவி'', ''புரட்சிக் கவி'', ''பாவேந்தன்'' என்னும் பட்டங்களை யெல்லாம் பெறுவதற்குத் தகுதி வாய்ந்தவர் என்றாலும் அவர் விரும்பியது ''கவியரசர்'' என்னும் பட்டத்தைத்தான் போலும்! அதனை எட்டயபுரத்து அரசருக்கு எழுதிய கடிதத்திலே அவரே கூறிவிட்டார் அல்லவா!

தாம் தோன்றிய காலத்திலே தமிழ் மொழியின் தேவை எதுவாக இருந்தது என்பதனையும் எட்டயபுரத்து அரசருக்கு எழுதிய கவிதையிலே கூறுகின்றார்:

''சுவை புதிது, பொருள் புதிது,
வளம் புதிது, சொல் புதிது,
சோதிமிக்க நவகவிதை எந்நாளும்
அழியாத மகாகவிதை''

தமிழ் மொழிக்குத் தேவைப்பட்டதாம்!

பாரதிக்கு முன்னே தமிழிலே சுவை மிக்க கவிதைகள் இல்லையா? பொருட் செறிந்த கவிதைகள் இல்லையா? இருந்தன. ஒன்றா, இரண்டா, பத்தா, நூறா, பதினாயிரமா? லட்சம் லட்சமாக இருந்தன!

ஆனால் அவை தேசத்தின் அவசரத் தேவையைப் பூர்த்தி செய்பவை அல்ல என்று பாரதியார் கருதினார். பாரதி 'சொல் புதிது' என்றாரே அது என்ன சொல்? அதுதான் ''விடுதலை!''

'பொருள் புதிது' என்றாரே அது என்ன பொருள்? ''இந்தியா முழுதும் ஒரே தேசம், இந்தியர் அனைவரும் ஒரே சமுதாயம், வாழ்ந்தால் முப்பது கோடியும் வாழ்வோம், வீழ்ந்தால் முப்பது கோடி முழுமையும் வீழ்வோம்'' — இப்படி, புதிய பொருளைச் சொல்லும் கவிதைகள், காவியங்கள் தேவைப்பட்டன. இந்தத் தேவையை நிறைவு செய்யத்தான் காலம் பாரதியைத் தந்தது. அதனால்தான் அவனை ''காலம் தந்த கவிஞன்'' என்கிறேன்.

சாதி அபிமானத்தைப் பாரதியார் வெறுத்தார். ''சாதிகள் இல்லையடி பாப்பா'' என்று பாடி, பாப்பாவிலிருந்து தோன்றும் புதிய சமுதாயத்தை சாதி வேற்றுமையற்றதாகச் செய்ய முயன்றார். ''குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்'' என்று கூறி, ஒருகால், தொழில் வேறுபாடு காரணமாகச் சாதி வேறுபாடு தேவைப்படினும், அவற்றிடையே உயர்வு தாழ்வு — அதாவது இழிவு-சிறப்பு இருத்தல் கூடாது என்று கூறினார்.

பாரதியார் மதாபிமானத்தை ஏற்றுக் கொண்டார். ''எம்மதமும் சம்மதம்'' என்ற நிபந்தனையோடு! கிறித்துவ மதத்தார் போற்றும் ஏக பெருமானைப் புகழ்ந்து பாடினார். இஸ்லாமியர் வழிபடும் அல்லா மீதும் பாடி, அவரை வழிபட்டார். ''நியாயத்தை ஏற்பார்களானால் நாத்திகர்களும் நம்மவர்களே'' என்னும் கருத்தை உரை நடைக் கட்டுரையொன்றிலே கூறினார்.

பாரதியார் தேசாபிமானத்தை மதமாகக் கொண்டிருந்தார்.

''பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானினும் நனிசிறந்தனவே''

என்று அவர் இயற்றியுள்ள சூத்திரம் அவர் பின்பற்றிய தேசாபிமான மதத்தின் மந்திரம் ஆகும்.

''யாதும் ஊரே யாவரும் கேளிர்!''

என்பது தமிழினத்தாரின் மனிதாபிமானக் கொள்கை. இதற்குட்பட்டதே பாரதிக்கு இருந்த தேசாபிமானம்.

அவர் தேசாபிமானியாக இருந்தது குறுகிய உணர்வாலன்று. பிற தேசத்தின் ஆதிக்கத்திலிருந்து தனது தேசத்தை விடுவிக்க வேண்டுமென்ற விருப்பத்தாலாகும்.

(மயிலை இலக்கிய வட்டம் — பாரதீய வித்யாபவன் சொற்பொழிவிலிருந்து)

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd. at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600 032. (Phone: 431543) Editor: K. Rajendran

தலைவலி
போயேவிட்டது



ஒரே ஒரு

ஸாரிடான் மூலம்

ட்ரேட்மார்க் 'ரோஷ்'

வலிமையானது
பாதுகாப்பானது
ஒன்றே ஒன்று போதுமானது

RP. 5977

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka

